
# ஆசிரியர் எஸ். எம். யோசெவ் எழுதிய கட்டுரைகள்




ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையின்
முன்னாள் அதிபர், திரு. எஸ். எம். யோசெவ் அவர்கள் எழுதிய
காவலூர் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பு

தேடல்: அன்ரன் றெக்சி அந்தோனிமுத்து
தொகுப்பு: அன்ரனி லவ்லின் செல்வநாயகம்

# உள்ளே.....


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 3 |
| 2. | வரலாற்றுப் புகழ் மிக்க காவலூர் அன்றும் இன்றும் | 4 |
| 3. | கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வரலாறு | 10 |
| 4. | சேவையின் வழியில் இவர்கள் | 12 |
| 5. | கோவிற் பணியில் இருபத்தைந்து ஆண்டுகள் | 18 |
| 6. | சுருவில் அன்னைமரி மாதா ஆலய வரலாறு | 20 |
| 7. | தணுவில் புனித அன்னம்மாள் ஆலயம் | 22 |
| 8. | எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் | 24 |
| 9. | கரம்பொனூர் மக்கள் சென்று வழிபடும் காவலூர் ஆலயங்கள் | 25 |
| 10. | திருக்குடும்ப கன்னியர் சேவையால் வளம் பெற்ற கல்லூரி | 28 |
| 11. | புனித அந்தோனியார் கல்லூரி அறிவொளி பரப்பிய கலைக்கூடம் | 30 |
| 12. | கல்லூரிப் புளியமரம் பேசுகிறது | 34 |
| 13. | கரம்பொனூர்க் கோமான் | 39 |
| 14. | வெள்ளிவிழா நாயகன் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை | 43 |
| 15. | தமிழுக்கும் திருமறைக்கும் அருந்தொண்டாற்றிய கவிஞர் | 47 |
| 16. | சம்மனசுச் சுவாமியார் | 49 |
| 17. | புனித சூசையப்பர் சபைத் துறவிகள் | 56 |
| 18. | ஊர்காவற்றுறையில் திருச்சிலுவைக் கன்னியரின் தியாகப்பணி | 59 |
| 19. | பாதுகாவலன் பத்திரிகையில் படித்தவை | 61 |

# முன்னுரை



ஊர்காவற்றுறை பாலாவி வீதி கல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையின் இளைப்பாறிய அதிபருமான திரு. எஸ். எம். யோசெவ் அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பிறந்த மண்ணுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் பெருமை சேர்த்த எழுத்தாளராகத் திகழ்ந்து வருகின்றார். யாழ் மாவட்டத்திலும் மலையகத்திலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் எழுத்துத் துறையில் ஆர்வங்கொண்டு பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். வட மாநிலக் கத்தோலிக்க வார ஏடான சத்திய வேத பாதுகாவலனில் இவரது கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவந்தன. தினகரன், வீரகேசரி ஆகிய தேசியப் பத்திரிகைகளிலும் இவரது கட்டுரைகள் பல பிரசுரமாயின. தீவகத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்கள் பலவற்றின் வரலாறுகளை எழுதிப் பிரசுரித்துள்ளார். அவற்றுள் 'கரம்பொன் பங்கு மலர்' 'காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா மலர்' என்பன வாசகர்களின் மனம் கவர்ந்த பிரசுரங்களாகும். இம் மலர்களில் காவலூரினதும் அதன் அயற்கிராமங்கள் தொடர்பான பல அரிய தகவல்கள் இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 1990ம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயவின்போது யோசெவ் மாஸ்ரர் அவர்களும் தாய் மண்ணைவிட்டு இடம்பெயர்ந்து நீர்கொழும்பில் குடியேறினார். இடம்பெயர்ந்து வாழ்ந்த போதும் எழுத்துப்பணியை அயராது தொடர்ந்துவந்தார். அண்மைக் காலமாக வயது முதிர்ச்சி காரணமாக தமது எழுத்துப்பணியைத் தொடர முடியாதிருப்பது காவலூர் மக்களுக்கு கசப்பான செய்தியே.

ஆற்றல்மிக்க எழுத்தாளரான ஆசிரியர் எஸ். எம். யோசெவ் அவர்களின் அரிய படைப்புக்களை ஆவணப்படுத்தி அடுத்த சந்ததியினருக்கு அறியத்தரும் நோக்குடன் இணையத்தில் தேடல்களை மேற்கொண்டபோது பல கட்டுரைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் காவலூரும் அதன் அயற் கிராமங்கள் தொடர்பான, எமக்குக் கிடைகப்பெற்ற கட்டுரைகளை மட்டும் இங்கு தொகுத்துத் தருகின்றோம். இந்நூலில் சேர்க்கப்பட்டள்ள கட்டுரைகள் யாவும் ஆசிரயர் யோசெவ் அவர்களால் எழுதப்பட்டவை என்பதைப் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படுகின்ற காலத்தாலழியாத இக் கட்டுரைகளையும் கவிதைகளையும் தொகுத்து, 'காவலூர் கத்தோலிக்க எழுத்தாளர் களின் படைப்புக்கள்' என்ற தலைப்பில் நூலாகப் பிரசுரிக்க முடியும் எனவும் கருதுகின்றோம்.

**சித்திரை 2023** **மலர்க் குழு**

# வரலாற்றுப் புகழ்மிக்க காவலூர் அன்றும் இன்றும்

**(காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு மலர் - 1995)**

**முகவுரை;**

இலங்கையின் வடபுலத்தில் பண்டைய சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறையாகும். லைடன்தீவு என ஒல்லாந்தரால் அழைக்கப்பட்ட இத்தீவின் வடமேற்கில் ஊர்காவற்றுறை அமைந்துள்ளது. லைடன்தீவு வேலணைத்தீவு எனவும் அழைக்கப்படுகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாற்றுக் குறிப்பு ஒன்று இதை தணதீவு எனச் சுட்டுகின்றது. கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டிலிருந்தே ஊர்காவற்றுறை துறைமுகமாய் இருந்தது எனச் சரித்திர ஆய்வாளர் கூறுகிறார்கள். பராக்கிரபாகு மன்னன் காலத்தில் இது துறைமுகமாய் இருந்தது என வரலாறு சான்று பகருகின்றது. போத்துக்கேயர் வருவதற்கு முன் தென் இலங்கை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்டு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் ஆதிக்கஞ்செலுத்தியதாகக் கூறப்படுகின்றது. காலகதியில் இது ஒரு துறைமுக நகரமாக உருவெடுத்தது.

**பெயர் எப்படி வந்தது;**

ஊர்காவற்றுறை என்ற பெயர் வரக் காரணம் என்ன என்று ஆராயின், ஊரைக் காவல் செய்கின்ற துறைமுகம் அமைந்திருந்தமையால் அவ்வாறு பெயர் வந்தது என்பர். வேறு சிலர் ஊரான் தோட்டம் என வழக்கில் இருந்த பெயர் சிங்களத்தில் "ஊறாதொட்ட" என வந்தது என்பர். பன்றிகள் ஏற்றிய துறை என்ற காரணத்தால் ஊறாதொட்ட எனப் பெயர் வந்தது என்று சொல்பவருமுளர். ஆனால் யானைகள் இத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள. இப்பொழுது ஆங்கிலத்தில் Kayts என வழங்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது என்பர். ஆய்வுகளின்படி இது போர்த்துக்கேய சொல்லில் இருந்து மருவி வந்தது எனத் தெரிகிறது. போர்த்துக்கேய மொழியில் "Caes" என்றால் துறைமுகம் என்பது பொருள். அதிலிருந்தே பின் Kayts என்ற பதம் ஆங்கிலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம் என்று விளக்கம் தரப்படுகிறது.

**பொற்காலம்;**

வட பகுதியில் அமைந்துள்ள ஒரு இயற்கைத் துறைமுகம் ஊர்காவற்றுறையாகும். வடகீழ், தென்மேல் பருவ காலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறையாக இது விளங்கியது விசேட அம்சமாகும். பன்னெடுங்காலமாக காவலூர் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியது. தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பிருந்தமையால் அந்நாட்டுத் துறைமுகங்கள் வரைசென்று பண்டமாற்று வணிகஞ் செய்திருக்க வாய்ப்பிருந்தது.

தென்கிழக்காசிய நாடுகள் ஈறாக காவலூர் மாலுமிகள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே ஊர்காவற்றுறைத் துறைமுகம் புகழ் பெற்றிருந்தது எனலாம். பிரித்தானியர் ஆசிய நாடுகளான பேர்மா, சயாம், றங்கூன் முதலிய நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தனர். இந்த இறக்குமதி வர்த்தகத்தில் பிரதான பங்கெடுத்துக்கொண்ட பட்டுக்கோட்டைச் செட்டிமார் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முதலாம் துறைமுகங்களை இறக்குமதி வர்த்தகத்துக்குப் பயன்படுத்தினர். அக்காலப் பகுதியில் காவலூர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. கப்பல்கள், படகுகள், டிங்கிகள், தோணிகள் என்று துறைமுகம் மரக்கலங்களால் நிறைந்திருக்கும். பனை மர உயரமான பாய்மரங்கள் வானைமுட்டி உயர்ந்து நிற்க, பாரிய கப்பல்கள் எந்நேரமும் நங்கூரமிட்டுச் சரக்கு இறக்கும் காட்சியை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் கண்டவர்கள் பலர் இன்னும் சீவந்தராய் இருக்கிறார்கள். படகுகளில் பணியாற்றிய மாலுமிகளில் ஒரு சிலர் இன்னும் பண்டைய நிகழ்வுகளை அசைபோட்டுப் பார்க்கிறார்கள். கறிச் சரக்கு வகைகள், வெங்காயம், மிளகாய், சர்க்கரை முதல் கலிக்கட் ஓடுவரை கரை இறக்கப்பட்ட அந்தச் செழிப்பான காலம் எண்ணிப்பார்க்கப் பெருமையளிக்கின்றது. முந்நாளில் காவலூர்த் துறைமுகம் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கும். அது காவலூரின் பொற்காலம். செழிப்பான அந்த நாட்கள் என்று வருமோ?

பட்டுக்கோட்டைச் செட்டிமாரின் செல்வாக்கினால் காவலூரிலும் கப்பல் கட்டும் தொழில், படகுத்துறைத் தொழில் என்பன விருத்தி கண்டன. பலர் வேலைவாய்ப்புப் பெற்றதோடு மாலுமிகளாகவும், கப்பல் உரிமையாளராகவும் மிகுந்த உச்சநிலையில் இருந்தனர். யுத்தகாலப் பஞ்ச நிலைமைகள் காவலூரை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. காவலூர் அரிசிக் களஞ்சியமாக இருந்ததால் அரிசிக்கும் பஞ்சம் இருக்கவில்லை.

**அறுபதுகளுக்குப்பின்;**

சப்த தீவு மக்களும் சங்கமமாகும் இடம் காவலூராகவே இருந்தது. 1960ம் ஆண்டு வரை நெடுந்தீவு உட்பட அனைத்துத் தீவு மக்களும் ஊர்காவற்றுறைத் துறைமுகம் வந்து தான் காரைநகர் ஊடாக யாழ்ப்பாணஞ் சென்றனர். அதுவரை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையே அனைவருக்கும் மருத்துவப் பணிக்கு நடுநிலையமாய் இருந்தது. பொலீஸ் நிலையம், நீதிமன்றம் என்பன காவலூர் பட்டினத்திலேயே இருந்தன. இதன் காரணமாக நீதித்துறை சார்ந்த சகல தேவைகள், சட்டத்தோடு தொடர்புடைய குற்றவியல் விசாரணைகள், வழக்குகள் அனைத்தும் காவலூரில் இடம் பெற்றமையால் நீதிமன்றம் கூடும் நாட்களில் தீவுப்பகுதி மக்கள் இங்கு கூடுவது வழக்கம். அதனால் ஊர்காவற்றுறைச் சந்தை எப்பொழுதும் கலகலப்பாகவே காணப்படும். 1950ம் ஆண்டு வரை காவலூர் சுங்கப்பகுதி கொழும்புக்கு அடுத்தாற் போல் வருமானத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. சுங்கப் பகுதியில் காவலூர் மக்கள் வேலை வாய்ப்பைப்

பெற்றனர். கால் நடைகள் இறக்குமதி செய்யப்பட்டு கமக்காரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து நல்லினக் காளை மாடுகளும், ஆடுகளும் பெருமளவில் வந்திறங்கிக் காவலூரின் மேற்கில் உள்ள மாட்டுக்காலை எனப்படும் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு நோய்த்தடுப்புச் செய்யப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்பட்டன. மிருகங்களுக்கு மாத்திரமல்ல, மனிதருக்கும் அம்மை நோய்த் தடுப்பு முகாமும் மாட்டுக்காலையை அண்மித்த ஊர்காவற்றுறை மேற்குப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. சுகாதார வைத்தியப் பகுதியினர் இத்தடுப்பு நிலையத்தைப் பராமரித்து வந்தனர்.

**ஆய்வுக்குட்பட்ட ஆதிக் குடியேற்றம்;**

கிராம சேவகர் பணிகளை இலகுவாக்கத் தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட பரவலாக்கற் பிரிவுகளின்படி கரம்பொன் வடக்குப் பிரிவு ஊர்காவற்றுறை மேற்கை அடுத்த பகுதியாகும். மாட்டுக்காலையை அண்மித்த கரம்பொன் வடக்குப்பகுதி ஆதிக் குடி யேற்றப் பகுதியாகக் கருதப்படுகின்றது. ஊருண்டி என முன்னர் அழைக்கப்பட்ட இப்பகுதியே முதன் முதலில் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதி என்பது ஆய்வாளர் கருத்தாக இருக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணரான கலாநிதி பொ. இரகுபதி அவர்கள் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுக் குறிப்புகளின் படி இப்பகுதி செம்மண் கலந்த பூமியாக இருந்தது என்றும் மக்கள் குடியேறியிருந்தமை யாலேயே போர்த்துக்கேயர் இப்பகுதியில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள் என்றும் தெரிய வருகிறது. அந்தக் கோட்டை சிதைந்த நிலையில் இன்றும் பழங்கோட்டை என அழைக்கப்பட்டு வருகிறது. சிலஆண்டுகளுக்கு முன் இக்கோட்டைப் பகுதியில் யாழ் திருமறைக் கலா மன்றத்தினர் திருப்பாடுகளின் காட்சியை (யேசு சிலுவையில் மரித்த காட்சியை) வீடியோப் படமாக்கியது குறிப்பிடற்பாலது. கல்வாரி மலையை இது ஒத்திருந்தமை காட்சிப்புலமாக்க உதவியது.

போர்த்துக்கேயரின் கீழ்த்திசை வரலாற்று நிபுணரான இலண்டன் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த C.R பொக்ஸ்ஸர் (C. R. Boxer) இலங்கையில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டைகளை இனங்கண்டு ஆய்ந்த வேளை அவற்றுள் ஒன்றைப்பற்றிய ஐயமேற்பட்டபோது ஊர்காவற்றுறைக்கு வந்து இந்தப் பழங்கோட்டையைப் பார்த்த பின்னரே தான் தவறவிட்ட கோட்டை அதுதான் என்பதை நிச்சயப்படுத்தித் தெரிந்து கொண்டார் என அறிய முடிகிறது. பேராசிரியர் Boxer அவர்களை அழைத்து வந்த கொழும்பு பல்கலைக்கழக வரலாற்று அறிஞரான கலாநிதி திகிரி அபயசிங்கா அவர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளார். கலாநிதி இராமகிருஷ்ணன் அவர்களும் இவ் ஆய்வுக்கு உதவியுள்ளார் என்பதும் நினைவுகூரத்தக்கதே.

கரையில் உள்ள போர்த்துக்கேயரின் பழங்கோட்டையை விட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமோர் வரலாற்று மீதி ஊர்காவற்றுறைக்கு பெருமை

தருகிறது. காவலூருக்கும் காரைநகர் கடற்படைத் தளத்துக்குமிடையில் அமைந்துள்ள கடற் கோட்டை இலங்கையில் காணக்கூடிய மிக அபூர்வமான வரலாற்று மூலமாகும். ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட இக் கடற்கோட்டை "ஹமன்ஹீல்" என அழைக்கப் படுகிறது. 1990ம் ஆண்டுக்குப் பின் இது கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. காவலூரின் குடிப்பரம்பல் எப்போது ஏற்பட்டது என்பது அறிய முடியவில்லை. தென் இந்தியாவில் மணற்பாடு, தூத்துக்குடி, இராமேஸ்வரம், பாம்பன், திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து தீவுப்பகுதியில் மக்கள் குடியேறியிருக்கலாம். இந்தியப் படையெழுச்சியின் போது போர்வீரராகவும், படைகளுக்குத் துணையாகவும் வந்த வர்கள் இங்கு குடியமர்ந்திருக்கலாம். வியாபார நோக்கத்தோடு வந்தவர்களிற் சிலர் இங்கு தங்கி அவர்களின் சந்ததி பெருகியும் இருக்கலாம். ஒரு பகுதியினர் மன்னார் மாந்தைப் பகுதியில் இருந்து வந்து குடியேறினர் என்பதற்கும் ஆதாரங்கள் உண்டு. ஊர்காவற்றுறை கிழக்கு, ஊர்காவற்றுறை மேற்கு முதலிய இடங்களில் வாழும் வகுப்பினருக்கு மன்னார்த் தொடர்புகள் இருப்பதாகத் தெரிகிறது. மற்றைய தீவுகளின் மக்களும் இங்கு வந்து குடியேறி இனப்பெருக்கம் ஏற்பட்டிருக்கலாம். எது எவ்வாறா யினும் 1990 வரை பல சமூகத்தவரையும் சேர்ந்த பன்னீராயிரம் மக்கள் ஊர்காவற் றுறைப் பட்டின எல்லைக்குள் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. கத்தோலிக்கரைப் பெரும் பான்மையாகக் கொண்ட இச்சனத்தொகை முக்கிய நான்கு சமூகத்தினரை அடக்கி யுள்ளது என்பதற்கு இங்குள்ள நான்கு ஆலயங்கள் சான்று பகருகின்றன.

**ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறின் அவலங்கள்;**

ஊர்காவற்றுறை 1947ம் ஆண்டில் பட்டின சபை அந்தஸ்தைப் பெற்றது. ஐந்து வட்டாரப் பிரிவுகளை அடக்கிய பட்டினப் பரிபாலனம் இங்கிருந்தது. பல வழிகளில் துரிதமாக முன்னேறி வளர்ந்து கொண்டிருந்த காவலூர் எவருமே எதிர்பாராது 1990ம் ஆண்டு ஆவணி 22ல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் உலகப்போரில் அகப்பட்ட ஜேர்மானிய நாட்டைப்போலவும், அணுக்குண்டு வீசப்பட்ட நாகசாக்கி போலவும் சிதைந்து அழிந்து இன்று காட்சி தருகின்றது. வனப்பிழந்து, வடிவிழந்து குஷ்டரோகி போலவும் காட்சி தருகின்றது. குண்டு வீச்சு, ஷெல் வீச்சுக்களாலும், கடற்படைப் பீரங்கி வேட்டுக்களாலும் சிதைந்த கட்டடங்கள், புள்டோசர் போட்டு மிதித்துத் தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள் அரச அலுவலகங்கள் வீடுகளின் சுற்று மதில்கள் சிதைந்து புதர் மண்டி, காடுகள் வளர்ந்தது போல் மரங்கள் வளர்ந்து மூடிக் கிடக்கும் பல வீதிகள் அடையாளங்காண முடியாதபடி காட்சி தருகின்றன.

1984க்குப்பின் நீதி மன்றம், பழைய பொலிஸ் நிலையம், புதிய பொலிஸ் நிலையம், வாடிவீடு என்பன தீவிரவாத சக்திகளால் அவை எதிரிகள் வசமாகாதவாறு தகர்க்கப் பட்டன. ஆனால் 1990 புரட்டாதியில் காவலூர்ப் புதிய தபாலகம் உட்பட பல அரச நிறுவனங்கள், சந்தைக்கட்டடங்கள், மக்கள் குடியிருப்பு மனைகள் என்பன தகர்க்கப்

பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. இறங்குதுறை மண்டபம் தகர்ந்து துறைமுகப்பாலம் சிதைந்து இதுதான் புகழ்மிக்க காவலூர்த் துறைமுகமோ என்று எண்ணத் தோன்றும் படி காட்சி தருகிறது. வீடுகள் பல சுவர்களோடும் கூரைகளோடும் நின்றாலும் கதவுகளும் யன்னல்களுமில்லாது பாழடைந்த வீடுகளாய் தோற்றமளிக்கின்றன. ஆயிரக்கணக்கான வீடுகளிலிருந்து விலைமதிப்பற்ற தளபாடங்களும் பெறுமதிமிக்க பொருட்களும் எங்குபோய் மறைந்தனவோ? அவற்றின் பெறுமதி கணிப்பின் பல கோடி ரூபா மதிப்பிடலாம். சொத்துக்கள் வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதானால் பில்லியன் கணக்கில் வரும். அமைதியில் வாழ்ந்த காவலூர் முந்திய இராணுவ நட வடிக்கைகளுக்குத் தப்பியிருந்த போதிலும் 1990ம் ஆண்டு புரட்டாதி இருபத்தெட்டில் வரலாறு காணாத பேரழிவை எதிர்கொண்டு மக்கள் சொந்த மண்ணை விட்டு நிலை குலைந்து நிர்க்கதியாய் அகதிகளாய் இடம் பெயர்ந்தனர். நாரந்தனை, சுருவில், சின்ன மடு, சாட்டி முதலிய இடங்களில் அகதிகளாய் அடைக்கலம் புகுந்து சொத்துக்களை இழந்தாலும் சுகத்தை இழந்தாலும் உயிரையாவது காப்பாற்றிக் கொண்டால் என்றோ ஒரு நாள் தாயகம் வரலாம் என்று தவித்து நின்றனர். ஆனால், அடைக்கலம் நாடிப் புலம் பெயர்ந்த இடங்களிற்கூட ஆறு மாதங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்க காலம் இடந்தரவில்லை.

**மக்களைத் துரத்திய 1991;**

1991ம் ஆண்டு சித்திரை மாதத்தில் காவலூரிலிருந்து புலம்பெயர்ந்தவருடன் அடைக் கலம் தந்தவர்களும் சேர்ந்து லைடன் தீவை விட்டே வெளியேறிக் குடாநாட்டை நோக்கி இடம் பெயர்ந்த அவலங்களைப் பெரிய புத்தகமாய் எழுதலாம். லைடன் தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு மக்கள் 75,000 பேர் குடாநாட்டை நோக்கிப் படையெடுத்தனர். எகிப்தில் இருந்து இஸ்ரேயல் மக்கள் இரவோடு இரவாகப் புலம்பெயர்ந்தபோது நிகழ்ந்த ஆறாத்துயரங்கள் தீவக மக்களையும் வாட்டி வருத்தியது. காவலூர் மக்களும் இதில் அடங்குவர். கத்தோலிக்க மறைத் தொண்டர்களும், குருமாரும், மனித முன்னேற்ற நடுநிலையமும், பங்குத் தந்தையர்களும், அரசசார்பற்ற தாபனங்களும் அந்தக் காலகட்டத்தில் ஆற்றிய மனிதநேயப் பணிகளால் லைடன்தீவு மக்கள் தம் உயிரையாவது காப்பாற்ற முடிந்தது என்றால் மிகையில்லை. ஷெல் வீச்சு, விமானக் குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடுகளால் பலர் உயிரிழந்தனர். சிலர் அங்கவீனமாயினர். பல குடும்பங்கள் அவ்வாறான சோக அனுபவங்களைச் சுமந்து துன்பக் கடலில் தத்தளித்து மீளமுடியாத இழப்புக்களை எதிர்கொண்டு வாழுகிறார்கள். யாழ் குடாநாட்டில் வாழும் காவலூர் மக்கள் இந்த வரலாற்றை எழுதும் வரை இதே ஏக்கங்களுக்கு முகங் கொடுத்து மனமடிவுடனும் அச்ச உணர்வுகளுடனும் நிம்மதி இழந்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்ற ஒரு சிலரது குடும்பங்களும், வசதிவாய்ப்புள்ள சிலரும் கொழும்பிலும் பிற இடங்களிலும் வாழு

கிறார்கள். அவர்கள் கூட நிம்மதியாய், மனநிறைவாய் வாழுகிறார்கள் என்று கூறிவிட முடியாது.

**நல்லதொரு எதிர்காலம் வருமா?**

மீண்டும் நம் தாயகம் திரும்புவோமா? சொந்த மண்ணில் அமைதி பெற முடியுமா? எமது அவலங்கள் இன்னல்கள் எப்போது நீங்கும்? விடிவு காலம் வருமா? இதுதான் காவலூர் மக்களது ஏக்கமாக உளது. 1990 ஆவணி 22 இல் யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிக்கவெனக் காவலூரில் வந்திறங்கி, மண்டைதீவு சென்ற அரச படைகள், கோட்டையைக் கோட்டைவிட்டு 1990 புரட்டாதி 28இல் திரும்பி வந்து நாட்டைப் பிடித்த கதையில் நலிவுற்றது லைடன்தீவும், மண்டைதீவுமாகும். அதிலும் காவலூரே அழிவுகளை பெருமளவு எதிர்கொண்டு வரலாறு காணாத அனர்த்தங்களுக்கு முகங் கொடுத்துப் பண்டைய பெருமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலையிலுள்ள வரலாற்று நிகழ்வு வரலாறாக இருக்கும் வண்ணம் இதை எழுதுகின்றோம். தீவக மக்களின் துர்ப்பாக்கிய நிலைமைகளின் ஒரு துளிதான் இது. விரிக்கின் மிகும் என்பதால் சுருக்கித் தந்தோம்.

**(1995ம் ஆண்டு வெளியான காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா மலரிலிருந்து எடுக்கப்பட்டது)**




ஊர்காவற்றுறையில் இடப்பெயர்வினால் கைவிடப்பட்டு பாழடைந்த வீடு ஒன்று,

**<u>கரம்பொன்</u>**

# புனித செபஸ்தியார் ஆலய வரலாறு

**(கரம்பொன் பங்கு மலர் - 1972)**

**[நாம் தரப்போகும் இவ்வாலயப் பூர்வீக வரலாறு முழுமையானதன்று. ஆயினும் வண. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய யாழ் மேற்றிராசனத்தின் 25 வருட வளர்ச்சி (1893-1918) என்னும் நூலில் கொடுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் கோர்வை செய்யப்பட்டதாகும்]**

இவ்வாலயம் மண் கோவிலாக இன்றும் கோவில் வளவு என்று அழைக்கப்படும் கிழக்குத் தெண்டாவத்தை என்னுமிடத்தில் அமைக்கப்பெற்று இருந்தது. இது தோன்றிய வரலாறு எழுத்து வடிவிலோ, வாய் மொழி வரலாறாகவோ, பரம்பரை ஐதீகக் கதையாகவோ அறிய முடியாதிருக்கின்றது. இவ்வாலயம் ஏறக்குறைய 225 ஆண்டுகளுக்கு முன் தற்போது உள்ள இடத்துக்கு கொண்டுவரப்பட்டது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் இவ்வரலாற்றை எழுதிய காலத்தில் கரம்பனில் மூப்பராயிருந்தவரது வழியில் வந்த அவரது மூதாதையருள் ஒருவரான அந்தோனிப்பிள்ளை என்பவரே பழைய இடத்திலிருந்து புதிய இடத்துக்கு கோவிலை மாற்றியவராவர். பின் விரைவில் கல்லாலும் சுண்ணாம்பாலும் ஒரு சிறு கோவில் கட்டப்பட்டது.

லோறென்சோ நாடார் காலத்தில் (1850-1854க்குமுடைப்பட்ட காலம்) புனித செபஸ்தியார் கோவிலுக்கு வடக்கில் சுந்தரி வளவில் பிரிவினைச் சபையினரால் போட்டியாக ஒரு கோவில் நடாத்தப்பட்டது. அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை என்பவரது தலைமையில் பலர் பிரிவினைச் சபையில் சேர்ந்தனர். ஆனால் விரைவில் பிரிவினைச் சபையார் துரத்தப்பட்டு, அவர்களது கோவிலும் பிடுங்கப்பட்டது.

தற்போது நாம் காணும் இப்புது ஆலயத்துக்கு முன்பு பழைய கோவில் கட்டடம் இருந்ததை இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவர்கள் நன்கு அறிவர். அந்தக் கோவிலின் முகப்பு பேருதுப்பிள்ளை தீயோப்பிள்ளை என்பவரால் (1860-70)ல் கட்டப்பட்டது. இன்று நாம் காணும் பீடப்பகுதியில் உள்ள அரைவட்ட அமைப்புக் கொண்ட சிற்பத் திறமை மிக்க பிரமாண்டமான ‘டோம்‘ யாழ்ப்பாணத்திலிருந்த கரம்பனூரைச் சேர்ந்த மனுவற்பிள்ளை என்பவரால் கட்டப்பட்டது. 1897ம் ஆண்டு தொடக்கப்பட்ட இவ் வேலை 1908ம் ஆண்டில் முடிவு பெற்றது. பழைய கோவிலில் இருந்த அழகிய மரப்பீடத்தை சீவந்தரான பலர் அறிந்திருப்பர். முதற் தரமான வேலைப்பாடமைந்த இப்பீடம் மகோணாவில் செய்யப்பட்டது. இதை ஜே. தீயோகுப்பிள்ளை தம்பதிகள் செய்வித்து உபகரித்தனர். 1913ம் ஆண்டு மாசி மாதம்

எட்டாந் திகதி அமல உற்பவ சபைக் குருமாரின் அதிசிரேஷ்டர் அவர்கள் கரம்பனுக்கு வருகை தந்த போது அவர்களாற் தாபிக்கப்பட்டது.

1938ம் ஆண்டு வரை கரம்பொன் ஊர்காவற்றுறை மீசாமோடு இணைந்திருந்தது. 1938ம் ஆண்டு தான் கரம்பொன் தனி மீசாம் ஆக்கப்பட்டது. தற்போது அலங்காரமாய்த் தோற்றமளிக்கும் கம்பீரமான புது ஆலயம் கட்டுவதற்கான ஆரம்ப முயற்சிகள் காலஞ் சென்ற வண. B. ஏபிரகாம் சுவாமியவர்களால் தொடக்கி வைக்கப்பட்டன. 1948ம் ஆண்டு ஆடி மாதத்தில் அத்திவாரமிடப்பட்டது. இதை ஆரம்பித்து 1949ம் ஆண்டு வரை கட்டு வேலையின் பெரும்பகுதியை வண. P. நீக்கலஸ் அடிகளார் முன்னின்று நடத்தினார். வண. A. S. சிங்கராயர் அடிகளார் கட்டு வேலையைத் தொடர்ந்து ஆராதனைக்குரியதாக உள் வேலையைப் பூர்த்தியாக்கினார். வண. J. வேதநாயகம் சுவாமிகள் விறாந்தை பிளேட்டுப் போடும் வேலையைச் செய்து முடித்தார். தொடர்ந்து வண. S. நல்லையா அடிகளார் காலத்தில் தளச் சீமேந்து போடப்பட்டது. ஈற்றில் வண. S. பீற்றர் அடிகளாரது அயரா முயற்சியால், புதிய (கப்பலா) குருசுக்கோவில் கட்டிய பூர்த்தியாக்கப்பட்டதோடு ஆலயத்தின் வெளிப்பூச்சுகளும் நிறைவு செய்யப்பட்டு 1964ம் ஆண்டு ஆலய வேலை முற்றுப் பெற்றது. புதிய மரப் பீடமும், பலி பீடத்தைச் சுற்றியுள்ள மாபிள் தள வேலையும் வண. S. E. N. குணசீலன் அடிகளாரின் முயற்சியால் முழுமை பெற்றன.

வண. G. கில்லறிச் சுவாமியார் ஊர்காவற்றுறைக் கட்டளைக் குரவராய் இருந்த சமயம் இரண்டு மணிகளுக்கு ஜேர்மனி நாட்டுக்கு எழுதியிருந்தார். ஒன்று புனித அந்தோனியார் கோவிலுக்கும் மற்றொன்று புனித செபஸ்தியார் ஆலயத்துக்கும் எனத் தருவிக்கப்பட்டன. மணியை தனது செலவில் வாங்கிக் கொடுத்த கரம்பன் கிழக்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான திரு. பே. மனவற்பிள்ளை அவர்களே மணிக்கோபுரத் தையும் கட்டிக் கொடுத்தார்.

1932ம் ஆண்டு ஆடி மாதம் 14ந் திகதி புனித செபஸ்தியார் திருநாளன்று காலஞ்சென்ற யாழ். ஆயர் கியோமர் ஆண்டகை அவர்கள் திருச்சபையின் சடங்காசாரப்படி ஆசீர்வதித்தார். அன்றுதான் இந்தக் கம்பீர நாதம் முதன் முதலில் ஒலித்தது. ஏறக்குறைய இதே ஆண்டிலே தான் இவ்வாலயத்தில் பக்தர்களைப் பரவசமாக்கும் ஒரு ஆள் உயரமான புனித செபஸ்தியாரின் இப்பாரிய திருச்சுரூபம் இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்டது. இதுவும் வண. கில்லறி அடிகளாரின் அரும் முயற்சியே

# சேவையின் வழியில் இவர்கள்

**- 1972ம் ஆண்டில் வெளியான கரம்பொன் பங்கு மலரில் இருந்து -**

கரம்பொன் பங்கின் வளர்ச்சிப் பாதையில் அநேக குரு திலகங்கள் அளப்பெரும் சேவைகள் ஆற்றிப் போந்தனர். அவர்களது அயரா உழைப்பும், தன்னலமற்ற சேவையும் தியாகத் தொண்டும், பேரூக்கமும், ஆர்வமான வழி நடத்துதல்களும், பங்கு மக்களைச் சீரிய நோக்கும், ஏற்றமான போக்கும் உடைய சிறந்த மக்களாக உருவாக்கித் தந்தன. அவர்கள் வழியாக சொல்லற்கரிய இகபர நன்மைகளை இறைவன் அருளினன். அறம் வளர்த்த அன்புக்குரவர்களை இந்த மலரிலே நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகிறோம்.

கரம்பொன் பங்கு பன்னெடுங்காலமாக ஊர்காவற்றுறைப்பங்கோடு இணைந்திருந்தது. ஊர்காவற்றுறைப்பங்கின் கட்டளைக்குரவரின் ஆட்சியில் கரம்பொன் பங்கிருந்த வேளை, உதவிக்கட்டளைக் குரவர் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயக் குரு மனையில் தங்கியிருந்து ஞானக்கடமைகளைக் கவனித்ததும் உண்டு. பிறப்பு, இறப்பு, திருமணம் பற்றிய பதிவேடுகள், இடாப்புகள் யாவும் காவலூரிலேயே இருந்தன. 1938ம் ஆண்டிலிருந்தே கரம்பொன் தனி மீசாமாகப் பிரிக்கப்பட்டது.

இஸ்றாயேல் மக்களின் வரலாற்றில் பிதாப்பிதாவாகிய ஆபிரகாமைப்போல் கரம்பொன் பங்கு வரலாற்றில் வண. பிதா B. ஏபிரகாம் மிக முக்கியமானவராவர். 1938ம் ஆண்டு கரம்பொன் பங்கின் உதய ஆண்டாகும். வண. B. ஏபிரகாம் அடிகளாரின் பரிபாலனத்தின் கீழ் இப்புதிய பங்கின் வரலாறு ஆரம்பமாகிறது. வண. பிதா B. ஏபிரகாம் அவர்களே 'கரம்பொனை கரம்பொனாக்கியவர்' என்று முதியவர்கள் இன்றுங் கூறுவார்கள். பங்கின் ஒருமைப்பாட்டுக்கும், ஐக்கியத்துக்கும் சமாதான சக வாழ்விற்கும் வித்திட்ட பெருமை வண. ஏபிரகாம் அடிகளாருக்கே உரியது. வடக்கென்றும், தெற்கென்றும், கிழக்கென்றும் தம்முட் பிரிவுபட்டு, போட்டியும் பூசலும், பொறாமையும், மலிந்து சின்னாபின்னப் பட்டிருந்த கரம்பொன் பங்கு சுபீட்சமும், ஐக்கியமும், ஒருமைப்பாடுங்காண வைத்த அருளாளனை எங்ஙனம் மறக்க முடியும்?

வண. பிதா ஏபிரகாம் அவர்களது குருத்துவ வெள்ளி விழா கரம்பொனில் கொண்டாடப்பட்ட போது தான் கரம்பொன் மக்களின் ஒற்றுமைக்கு வித்திடப்பட்டது. நகைகள், ஆபரணங்கள் அற்ற ஏழைகள் நலன் கருதி ஞாயிறு வாரத்தில் அதிகாலையில் ஒரு பூசைப்பலியும், வசதியுடையோருக்காக இரண்டாவது பூசைப் பலியும் நிறைவேற்றி ஏழைகள் நலங்காத்தார். வீடு வீடாகச் சென்று அவரவர் நிலைபரங்களை நன்கறிந்து வேண்டிய உதவிகளைச் செய்தார். ஏழைப்பங்காளனாய் அவர் செய்த தானதருமங்களை யாருக்கு, எப்படி என்று எவரும் அறியமாட்டார்கள்.

வண. பிதா ஏபிரகாம் அவர்களே கோவில் கட்டும் பணியைத் தொடக்கி வைத்து, கட்டிட நிதியை ஆரம்பித்து ரூபா 13,000ஐ சேர்த்து வங்கியில் சேமித்து வைத்தார். அவர் எட்டு ஆண்டுகள் கரம்பொனில் இருந்து மக்கள் பழக்க வழக்கங்கள், ஒழுக்கமுறைகள், பண்பாடு, கிறீஸ்தவ ஒழுக்கம், என்பவற்றைத் திருத்தி புதிய சமுதாயத்தை ஏற்படுத்த அடிகோலினார்.

அவரைத் தொடர்ந்து வண. B. வில்லியம் யேசுதாசன் சுவாமிகள் 9 மாதங்கள் கரம்பொன் பங்கில் சேவையாற்றினார். வண. P. நீக்கலஸ் அடிகளாரின் பரிபாலனக் காலம் கரம்பொன் புதிய கோவிலுக்கு கால்கோளிட்ட காலமாகும். 1947ம் ஆண்டு சூளை வைப்பித்து, பழைய கோவிலை இடித்து 1948ம் ஆண்டு ஆடி மாதத்தில் அத்திவாரமிட்டு 1949ம் ஆண்டு மேற்கட்டுவரை கோவில் வேலைகள் துரிதமாய் நடந்தன. பணம் வந்து சேரச்சேர வேலைகள் நடந்துகொண்டே இருந்தன. அதே சமயம் முன்பு வங்கியில் இருந்த பணத்தோடு ரூபா 17,000த்தையும் மேலதிகமாக வங்கியில் சேமித்து வைத்தார். இப்பணம் கூரை வேலைகளுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. பிரசங்கத்தில் அளப்பரிய ஆற்றல்மிக்க சுவாமிகள் தமது அருளுரைகளினால் அநேக ஆன்மீக நன்மைகளை ஈட்டினார்.

வண. A. S. சிங்கராயர் அடிகள் தமது காலத்தில் கோவில் வேலைகளைத் தொடர்ந்து செய்வித்து உட்கோவிலை ஆராதனைக்கு ஏற்றதாய் ஆக்கித்தந்தார். கூரைக்குத் தேவையான மரங்களைத்தானே சென்று வாங்கி வந்தார் என்றால் எவ்வளவு சிரமமும், கடமை உணர்வும் கொண்டு சேவை ஆற்றினார் என்பது வெள்ளிடைமலை. தயவும், தாராள மனப்பான்மையும் சாந்தகுணமும் உடையவரான சுவாமிகள் மெலிஞ்சிமுனை மக்கள் மேல் கருணை கொண்டு அங்கு வாசிகசாலையில் தற்காலிகமாக ஒரு சிறு பாடசாலையை ஆரம்பித்தார். இவரது ஆலோசனையுடன் மெலிஞ்சிமுனையில் சிறு கோவிலும் தொடக்கப்பட்டது.

வண. J. வேதநாயகம் அடிகளார் முன் ஒரு முறை கரம்பொன் ஊர்காவற்றுறையுடன் இணைந்திருந்த போது உதவிக்கட்டளைக் குரவராய் கரம்பொனில் சேவை செய்தவர். 27-2-1957ம் ஆண்டு கட்டளைக் குரவராகப் பதவியேற்றார். அவரது காலத்தில் கோவில் விறாந்தைப் பிளேட் போடும் வேலைகள் செய்யப்பட்டன. மெலிஞ்சிமுனையில் பாடசாலை கட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டதும் சுவாமிகளின் அயரா முயற்சியினாலன்றோ.

அடுத்து கரம்பொனூரின் பங்குக் குரவராய் கடமை ஏற்றவர் வண. M. S. நல்லையா அடிகளார் ஆவர். பேருக்கேற்ப குணத்திலும் நல்ல ‘ஐயா’ வாகவே அடிகளார் இருந்து அனைவரது அன்பையும் பெற்றவர். கரம்பொனைப் பிறந்தகமாய்க் கொண்ட இவர் தம் பதியில் அதிக கரிசனையும் பற்றுமுடையவராய் இருந்தது இயற்கையே. கோவிற்

தளத்துக்குச் சீமேந்து போடப்பட்டது இவரது காலத்திலே தான். கரம்பொன் மக்களுக்கு பல நூற்றாண்டுகளாக தனியே ஒரு பூமதானப்பூமி இல்லாதது பெருங் குறையாக இருந்தது. இக்குறையை நீக்கியவர் வண. பிதா நல்லையா அவர்களே. உத்தான பூமியை நினைக்குந்தோறும் கரம்பொன் மக்கள் என்றென்றும் நல்லையா என்ற நாமத்தையும் மறந்திடாது நினைவு கூருவர் என்பது திண்ணம். தணுவில் சந்தான மாதா கோவிலும் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு ஆராதனைகள் தொடக்கி வைக்கப்பட்டன. புனித செபஸ்தியார் ஆலய வெளிப்பூச்சு வேலைகள் வண. நல்லையா அடிகளாரின் காலத்தில் செய்யப்பட்டன. அதுவே சுருவில் வீதிப்பக்கமாய் கோவிலுக்கு அழகிய தோற்றத்தை அளித்தது.

வண. நல்லையா அடிகளாரின் இடமாக வண. S. பீற்றர் அடிகளார் பரிபாலனத்தைப் பொறுப்பேற்றார். கணீர் என்ற சிம்மக்குரலோடு சொல்லின் செல்வராய், தமது இறுதிக்காலத்தை கரம்பொனூரில் செலவிட்ட அடிகளார் வியத்தகு சேவைகள் ஆற்றினார். கரம்பொனில் இருந்து பணியாற்றிக்கொண்டே மெலிஞ்சினையில் பரலோகராசா கோவிலும், நாரந்தனையில் சம்பேதுருவானவர் ஆலயமும், வடக்கு நாரந்தனையில் இருதயநாதர் ஆலயமும் கட்டுவித்தார். சுருவிற் கோவில் கப்பலா, பீட வேலைகளும் இவரது மேற்பார்வையில் கட்டப்பட்டன. புனித செபஸ்தியார் ஆலயத்தின் பீடப்பகுதியை நீட்டி குருசுக் கோவிலைப் புதிதாக கட்டிய பெருமையும் வண. S. பீற்றர் அடிகளாரையே சாரும். பத்திச்சபைகளை ஊக்குவித்ததோடு பல மாணவர்களை மேற்படிப்புக்கு ஊக்குவித்து துணை புரிந்தவரும் இவரே. நம் பங்கு ஆலயத்தை ஒளிமயமாக்கக்கருதி, பல ஆயிரம் ரூபா செலவில் மின்விளக்கு வசதியை ஏற்படுத்தித் தந்தவரும் பீற்றர் அடிகளே. கோவிலின் வெளிப்பூச்சு வேலைகள் யாவும் நிறைவு பெறச்செய்து கம்பீரத்தோற்றத்தோடு பொலிவுற்று விளங்க வைத்து கரம்பொனிலேயே உயிர் துறந்தவர் பீற்றர் அடிகளாராவரஅவருக்குப் பின் கரம்பொன் பங்கின் கட்டளைக் குரவராய் 1966ம் ஆண்டு பொறுப்பேற்றார், வண. S. E. N. குணசீலன் அடிகளார். இளமைத் துடிப்பும், சேவை செய்யும் வாஞ்சையும், ஆற்றலும், அயராத உழைப்பும் மிக்க இவர் ஆலயப் பணியிலும், ஆராதனைச் சிறப்பிலும் கரம்பொன் தீவுப்பகுதியில் சிறந்து விளங்க வைத்தார். பக்தி அருட்சியும், கவர்ச்சியும் அவரது காலத்தில் திருநாட்களின் சிறப்பம்சமாய் விளங்கின. ஆலயம் அருள்மயமாய் புனிதமாய், அழகாய்த்தோன்றும் இசைக் கருவிகளுடன் இன்னிசை முழங்க ஆராதனைகள் நடைபெறச் செய்தார். வண. S. பீற்றர், வண. M. S. நல்லையா அடிகளாரைப்போன்று கரம்பொன், சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய மூன்று கோவில்களையும் பரிபாலித்து எல்லோரது அன்பையும், நல்லெண்ணத்தையும் பெற்றார். கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் சகலருக்கும் ஆசன வசதிகள் செய்து கொடுக்க பெருமுயற்சி செய்து உறுதியும் அழகும் எளிமையும் மிக்க ஆசனங்களை அமைத்துத் தந்து ஆலயத்துக்குச் சிறப்புத் தேடித்தந்து, கரம்பொன் பங்கு மக்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார் குணசீலன் அடிகளார்.

இளைஞர் நலனுக்காக என்றும் நின்று உதவக்கூடிய "அன்பில் மலர்ந்த மன்றம்" என்றென்றும் அவரை மறவாதிருக்க அழியாத ஞாபக சின்னமாகும். நம் ஆலயத்தில் ஒலிக்கும் ஒலிபெருக்கியும் ஒலிவாங்கியும் அவர் உபகரித்த ஞாபக சின்னங்க ளேயாகும். 1971ம் ஆண்டு ஆனி மாதம் கட்டளைக்குரவராக கடமை ஏற்ற நம் அன்புத்தந்தை வண.S. A. சுவாம்பிள்ளை அடிகளார் முந்திய சிறப்புகள் எதுவும் குறையாது மிகவும் திறமையாக, உற்சாகமாக, சேவை ஆற்றி வருகின்றார். அவரது பேரூக்கத்தால் மலர்ந்ததே இப்பங்கு மலர். வாழ்க நம் பங்குத்தந்தை! வளர்க அவர் சேவை!!



**வண. எஸ். பீற்றர்**

**ஓ. எம். ஐ. சுவாமியார்**

## குருத்துவ வெள்ளியூபிலி விழா

வண. எஸ். பீற்றர், ஓ. எம். ஐ. சுவாமி அவர்கள் இம்மாதம் 5-ந் திகதி தமது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடியுள்ளார்.

இச்சுபசெய்தியை அவருடைய ஏராளமான ஞானமக்கள் அறிந்து ஆனந்தங்கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். வண. யூபிலிநாயகர் கடந்த 25 ஆண்டுகளில் யாழ்ப்பாணம், அனுராதபுரம், பேசாலை, மன்னார், மயிலிட்டி, மானிப்பாய் முதலிய மீசாங்களில் கட்டளைக்குரவராகத் திறமையுடன் தொண்டாற்றியுள்ளார். இப்போது அவர் காம்பொன் பங்கின் கட்டளைக்குரவராய்க் கடமையாற்றிவருகிறார். சில காலம் மன்னார் மாவட்டத்தின் சிரேஷ்ட குருவாகவும் தொண்டு செய்துள்ளார். சுவாமி அவர்களின் மன அருட்சிக்குரிய பிரசங்கங்களைக் கேட்டுமகிழாதார் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் இல்லையென்றே கூறிவிடலாம். யூபிலிநாயகருக்குச் சோபனவாழ்த்துக்கள் கூறி, அவரோடு சேர்ந்து சருவேசுரனுக்கு நன்றித்துதிசெலுத்துவதுடன், இறைவன் அவரை இன்னும் பல்லாண்டு பாதுகாத்து, அவருக்கு வேண்டிய ஆன்மசரீர உதவிகளை அபரிமிதமாக அளித்தருளுமாறு வேண்டுகின்றோம்.

*சத்தியவேத பாதுகாவலன்* - *17.07.1961*

# கோவிற் பணியில் இருபத்தைந்து ஆண்டுகள்

**- 1972ம் ஆண்டில் வெளியான கரம்பொன் பங்கு மலரில் இருந்து -**

1940ம் ஆண்டுக்கு முன் பலர் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் கோவிற் பணியாளராக சேவை ஆற்றியுள்ளனர். கரம்பொன் தனி மீசாமாகப் பிரிவதற்கு முன் கோவிற் பணியாளராக (சங்கிரிஸ்தாம்) திரு. வஸ்தியாம்பிள்ளை அந்தோனிமுத்து அவர்களே நெடுங்காலம் பணியாற்றினார். அக்காலத்திலேயே அவ்வப்போது அவருக்கு உதவியாயிருந்த திரு. ம. வ. சந்தியாப்பிள்ளை அவர்கள் 1940ம் ஆண்டில் வண. B. ஏபிரகாம் சுவாமியவர்களால் இப்பணிக்கு நியமிக்கப்பட்டார். இவர் எஸ்தாக்கி தம்பையா என்று அறியப்பட்ட திரு. ம. வயித்தியாம்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வராவார். இவர் திருமலைத்துணை ஆயர் பேரருட்திரு. B. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் மூத்த சகோதரன் என்பது ஈண்டு குறிப்பிடற்குரியது. இவரது கம்பீரத்தோற்றமும், அதிகாரத்தொனியும் எவரையும் கவரும். கோவிலில் புனித செபஸ்தியாரின் பிராத்தனையை அவர் சொல்லக் கேட்டால் உள்ளம் நெகிழும். புதிய கோவில் கட்டும்பணியில் இவர் அளப்பரிய சேவை ஆற்றியதை எவரும் மறந்திருக்க முடியாது. 1949ம் ஆண்டு வண. P. நீக்கலஸ் அடிகளார் சுகவீன முற்றபோது தொடர்ந்து கட்டுவேலையை நடாத்தி மேற்றிராசன பரிபாலகர்களின் பராட்டுகளைப் பெற்றார். செயல் திறனும் தொழிலாளரை மேற்பார்வை செய்யும் ஆளுமையும் உடையவர். 'சந்தியாப்பிள்ளை' என்றால் செபஸ்தியார் கோவில், செபஸ்தியார் கோவில் என்றால் சந்தியாப்பிள்ளை என்று பலராலும் போற்றப்பட்டவர். ஆலயத்தை கட்டி முடிக்கும் வரை அயராது உழைத்தவர். தாபரிப்பு, கோவிற் திருநாட் பணம், கட்டுவேலைக்கு நிதி சேகரிப்பு என்று பல பணிகளில் முன் நின்று உழைத்தவர். அன்றிருந்த கட்டளைக்காரரையும் தமது சாதுரியத்தால் வெல்லும் சிறப்புடையவர். கரம்பொன் பங்கு மக்கள் அனைவரிடமும் செல்வாக்குப் பெற்றவர். 1964ம் ஆண்டு சித்திரை மாதத்தில் திடீரென ஏற்பட்ட நோயினால் தொடர்ந்தும் இறை பணி ஆற்ற முடியாமல் வீட்டோடிருக்கும் நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் இவ்வாண்டு புரட்டாதி மாதம் நாலாந்திகதி (4.9.72) இல்லற வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் பாக்கியம் பெற்றார். இறைபணியில் தம்மை அர்ப்பணித்து அருஞ்சேவை ஆற்றிய இவரையும் இவரது குடும்பத்தையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவரது சேவையினால் பயன் அடைந்த பங்கு மக்கள் அனைவரும் இவருக்கு என்றும் கடப்பாடுடையர். பிராமணிக்கமான இவ்வூழியனை நாம் நன்றியோடு பாராட்டுகிறோம்.1964ம் ஆண்டு சித்திரை மாதமுதல் இவர் விட்ட பணியைத்தொடர்ந்து திறம்பட ஆற்றி வருபவர் திருமதி அந்தோனிப்பிள்ளை இன்னேசியாப்பிள்ளை (இராசம்மா) ஆவார். தம்மாலியன்றவரை இவர் ஆற்றி வரும் சேவைக்கு இறைவன் நல்ல சம்பாவனை அளிப்பாராக. இறைவழிபாட்டிலும் ஆலய வழிபாட்டிலும் கோவிற் பணியாளரின் பங்கு மிகப்பிரதானமனது. இதை பங்கு மக்கள் உணர்ந்து தங்கள் ஒத்துழைப்புகளை கோவிற்பணியாளருக்கு வழங்குவது இன்றியமையாதாகும்.

## எஸ். எம். ஜே.யின்

# 'தேவ அன்னைக்கு அஞ்சலி' நூல் வெளியீட்டு விழா!

கடந்த 20-08-1988 சனிக்கிழமை பழம்பெரும் கத்தோலிக்க எழுத்தாளர் திரு. எஸ். எம். ஜேயின் 'தேவ அன்னைக்கு அஞ்சலி' நூல் வெளியீட்டு விழா, ஊர்காவற்றுறை, புனித மரியாள் மகளிர் பாடசாலையில் பங்குத் தந்தை அருள்திரு சா. பெ. கிருபானந்தன் தலைமையில் நடைபெற்றது. அருள் தந்தை தமது தலைமை உரையில் காலத்தின் தேவை கருதியும் மறைந்துவரும் தேவ அன்னையின் அருட்கொடைகளை மையமாக வைத்தும் இந்நூல் வெளிவருவது மிகவும் பொருந்தும் எனவும், தற்காலத்தில் தேவ, அன்னை பற்றி எழுப்பப்படும் நியாயமற்ற குற்றச்சாட்டுகளுக்கு இந்நூல் பதில் தருவதாக அமைந்திருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்றென்றும் எதிர்கால உலகில் இந்நூலின் பெருமை மிகவும் உணரப்படும் எனவும் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து உரையாற்றிய காவலூர் இலக்கிய வட்டத் தலைவர் ஆசிரியர் ஆ. சபாரெத்தினம் அவர்கள், சமய உண்மைகள் அழிவுபடாது அப்போதைக்கு அப்போது நூல் வடிவில் வெளிவருவது புதிய சந்ததியினரும் அதனை அறிந்து சமய நம்பிக்கையில் தம்மையும் பிணைத்துக் கொள்ள வழிவகுக்கும் என்று குறிப்பிட்டார்.

அருள்திரு ஆ. சிங்கராயர் தமது உரையில் 'அமலமரித் தியாகிகள் சபையினரே தேவ அன்னைக்கு தமது பங்களிப்பை செய்திருக்கவேண்டியவர்கள் அவர்கள் தேவ அன்னை விடயத்தில் மௌனமாகிவிட்டது துக்கத்திற்குரியது என்றாலும் இல்லறத்தவரான எஸ். எம். ஜே. அவர்களின் இம்முயற்சியால் அமலமரித் தியாகிகள் சபையினர் தலைதூக்கி பெருமைப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த நூலை வெளியிட்ட ஆசிரியரை மிகவும் பாராட்டுகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து பேசிய திரு. ஐயா யோசப் அவர்கள், ஓர் எழுத்தாளனின் மிக முக்கிய பந்தப்பணி, தான் வாழ்ந்த காலத்தையுணர்ந்து எதிர்கால உலகிற்கு நல்லனவற்றை தமது எழுத்தில் பங்களிப்பு செய்வதுதானென்றும் அந்த வகையில் தேவ அன்னையின் அருட்கொடைகள் பற்றிய இந்நூல் காலத்தால் அழியாது நின்றிலங்கி பக்தியுணர்வை மேலும் மேலும் அடியவர்கள் பெற்றுய்ய வழிவகுக்கும் வகையில் ஆசிரியர் இதனை எழுதியிருப்பது தேவ அன்னை மட்டில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த பக்தியுணர்வை வெளிக்காட்டி நிற்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறை றோ. க. ஆண்கள் பாடசாலை அதிபர் திரு C. ஸ்ரனிலாஸ் அவர்கள் பேசும்போது ''தேவதாய் மட்டில் ஆசிரியர் ஆழ்ந்த நம்பிக்கையின் அடையாளமே இந்நூல் என்று குறிப்பிட்டார்.

பிரபல வர்த்தகர் B. அஞ்ரலோ முதற் பிரதியை பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர் நன்றியுரை கூறினார்.

*சத்தியவேத பாதுகாவலன் - 02.09.88*

**சுருவில்**

# அன்னைமரிமாதா ஆலய வரலாறு

**(கரம்பொன் பங்கு மலர் - 1972)**

மாதகலிலிலிருந்து வந்து சுருவிலில் குடியேறிய திரு. சந்தியாப்பிள்ளை என்பவரது குடும்பமே சுருவிலின் முதற் கத்தோலிக்க குடும்பமாகும். இவர் சுருவிலில் குடியர்தாமர் என்பவரின் மகளைத் திருமணஞ்செய்து அங்கு இனிதே இல்லறம் நடாத்தி வந்தார். இவர் 1710ம் ஆண்டிற் பிறந்தவராவர். அவரைத் தொடர்ந்து காலகதியில் சுருவிலில் அநேக கத்தோலிக்க குடும்பங்கள் உருவாகின.

அன்னைமரிமாதாவின் முதற் கொட்டிற் கோவில் தற்பொழுதுள்ள கோவிலுக்கு வடக்கே கால்மைல் தொலைவில் இருந்தது என்று வரலாறு கூறுகிறது. பின்னர் மண்குடிசை ஒன்று அதே இடத்தில் கோவிலாக விளங்கி வந்தது. சில காலத்தின் பின் (தற்பொழுது உள்ள இடத்தல்) புதிய கற்கோவில் ஒன்றைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும், கட்டு வேலைப் பொறுப்பையும் ஏற்றவர் திரு. சுவாம்பிள்ளை சவிரிமுத்து என்பவராவர். 1854ல் இவர் இறந்துபோக, நீண்ட காலமாக நின்று போயிருந்த கோவில் வேலைகள், தோமஸ்பிள்ளை சூசைப்பிள்ளை என்பவரது ஊக்கத்தாலும் தூண்டுதலாலும் 1892ல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 1904ம் ஆண்டில் திரு. தோமஸ்பிள்ளை சூசைப்பிள்ளையவர்கள் இறந்துபோக, அன்று கோவில் மூப்பராயிருந்தவரும், நீர்கொழும்பில் வாழ்ந்தவருமான திரு. S. நீக்கிலாப்பிள்ளை என்பவரால் 1911ம் ஆண்டு கோவில் முகப்பு கட்டி முடிக்கப்பட்டது. 1912ல் சிறிய குருமனையும் கட்டப்பட்டது. வண. சந்திரசேகரா சுவாமியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுருவில் றோ. க. பாடசாலை, வண. டோறா சுவாமியவர்களால் கட்டி முடிக்கப்பட்டது.

இன்று அன்னைமரிமாதா ஆலயத்தில் அலங்காரமாய் இலங்கும் பெரிய மாதாவின் திருச்சுருபத்தைச் சுற்றிச் சிறிய வரலாறு பொதிந்துள்ளது. சிற்பத்திறமை வாய்ந்த பேர்போன சிற்பாசாரி ஒருவரின் கைவண்ணத்தில் உருவான இந்த மாதா சுரூபம் பிரான்சு தேசத்தில் ஐக்ஸ் பட்டணத்தில் உள்ள அமல உற்பவமரி தியாகிகள் கோவிலுக்குச் சொந்தமானதாயிருந்தது. அமல உற்பவமரி தியாகிகள் சபையை அடியிட்டவரான யூஜின் மசனட் சுவாமிகள் வந். சமேரியா ஆண்டகை அவர்களுக்கு மேற்படி மாதா சுரூபத்தை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். இச்சுரூபம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டு, அமல உற்பவமரி தியாகிகளின் சிற்றாலயத்தில் நிறுவப்பட்டிருந்தது. மகாவந். மெலிசன் ஆண்டகையவர்கள் சுருவிலுக்கு வருகை தந்தபோது சுரூபம் எதுவுமின்றி வெறுமையாய் இருந்த அழகிய பீடத்தைக் கண்டு, தாம் ஒரு மாதா சுரூபத்தைத் தருவதாக வாக்களித்தார். அதன்படியே தமது அறையிலிருந்த இந்த மாதா சுரூபத்தை மனமுவந்து பேரன்புடன் கொடுத்துதவினார்.

மேன்மைதங்கிய யூலன் ஆண்டகையின் ஆளுகையின் போது வண. கொலின் சுவாமிகள் மேற்குறித்த மாதா சுரூபத்தின் பழைய செய்திகளை அறிந்து அதைச் சுருவிற் கோவிலில் இருந்து மீட்டுப்போகச் செய்த முயற்சிகள் யாவும் வீணாகின. அன்னைமரியில் சுருவில் மக்கள் கொண்டிருந்த அழியாத அசைக்கமுடியாத அன்பும், பக்தியுந்தான் இன்னும் இப்புனித சுரூபம் அங்கு நின்றிலங்கக் காரணமாகும். மாதா சுரூபத்தை மக்கள் கொடுக்க மனமிசையாததால் கொலின் சுவாமிகள் வெறுங் கையோடு ஏகினார்.

அன்னைமரி ஆலயத்தை அழகுபடுத்தச் சமீப காலத்திலும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. காலஞ்சென்ற S. பீற்றர் அடிகள் கரம்பொன் பங்குக் குரவராயிருந்தபோது கோவிற் கப்பலாவும் பீடப்பகுதியும் திருத்தியமைக்கப்பட்டன. 1968ல் வண. S. E. N. குணசீலன் அடிகளாரின் காலத்தில் கோவில் முழுவதும் புதுப்பிக்கப்பட்டது. நீர்கொழும்பில் பிரபல வர்த்தகரும், சுருவில் வாசியுமான திரு. மந்திரியவர்கள் தனது சொந்தச்செலவில் ஆலயத்துக்கு மின் விளக்குகள் பொருத்திக்கொடுத்துள்ளார். ஆலயத்திருப்பணி என்றாலும், அதன் திருத்த வேலைகள் என்றாலும் தானே முன்னின்று செலவுகளைப்பொறுத்து அவற்றைச் செவ்வனே செய்து முடிக்கும் திரு. M. S. மந்திரி அவர்களின் தாராள குணத்தினால் இவ்வாலயம் சிறப்புற்று விளங்கு கின்றது.


பளிங்குக்கல்லால் புதிய பீடமும் மாபிள் தளமும், கிறாதியும் நீர்கொழும்பு திரு. S. P. முத்தையா அவர்களால் அமைக்கப்பட்டன. மணிக்கோபுரத்தை 1960ம் ஆண்டு கட்டிக் கொடுத்தவர் நீர்கொழும்பு திரு. A. S. பஸ்ரியாம்பிள்ளை அவர்களாவர். மணியை வாங்கிக்கொடுத்தவர் திரு. M. S. மந்திரி அவர்களே.

## *எனக்கு விளக்கு வை*

சுருவிலில் மூத்தவன் என்னுமொருவர் இற்றைக்கு 150 வருடங்களின் முன் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பலமுறை மாதா கனவில் தோன்றி "எனக்கு விளக்கு வை" என்று கூறினாராம். இந்தக்கனவைப்பற்றிப் பலவாறு சிந்தித்தவராய் இருக்கையில் "ஒரு நாள்" அவர் தமது வளவிலே ஒரு கிடங்கை வெட்டினாராம். அப்போது அந்தக் கிடங்கிலிருந்து ஒர் அடி உயரமான மாதா சுரூபம் ஒன்று தென்பட்டதாம். அதைப் பரபரப்புடன் எடுத்து சனங்களைக் கூட்டி விபரத்தைத் தெரிவித்த மூத்தவன் தமது வளவிலேயே ஒரு கொட்டிலை அமைத்து மாதா சுரூபத்தை அதில் வைத்துப் பூச்சியமாய்க் காப்பாற்றி வரலானார். அதுவே காலப்போக்கில் ஆலயமாய் உருப்பெற்றது என்பது வயது சென்ற சுருவில் வாசிகள் கூறும் கர்ணபரம்பரைக் கதையாகும். எனினும், போர்த்துக்கேயர் காலத்தில் ஒரு கோவிலோ, அல்லது போர்த்துக்கேய அதிபதி ஒருவரது வீடோ

சுருவிலில் இருந்திருக்கலாம். இச்சுரூபம் அங்கு வைத்து வணங்கப்பட்டதாயிருக்க வேண்டும். டச்சுக்காரர் காலத்தில் பயந்து ஓடிய போர்த்துக்கேயர், அல்லது கிறிஸ்தவர்கள் இச்சுரூபத்தை ஒரு கிடங்கிலே போட்டு மூடிவிட்டுச் சென்றிருக்கலாம் என எண்ண இடமுண்டு. சாட்டி மாதா, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் சுரூபங்கள் கண்டெடுக்கப்பட்ட வரலாறுகள் இத்தன்மையதாகும். சாட்டி மாதா சுரூபம் ஒரு கிணற்றிலும், புனித அந்தோனியார் சுரூபம் ஒரு மரப் பொந்தினுள்ளும் கண்டு எடுக்கப்பட்டன என்று வரலாறு கூறுகின்றது. சுருவில் மாதா சுரூபம் கண்டு எடுக்கப்பட்ட இடத்தில் ஒரு கிணறு இருந்ததென்றும், காலப்போக்கில் அது தூர்ந்து போய்விட்டது எனவும ஊரவர்கள் கூறுகிறார்கள்.

80 வயது மதிக்கக்கூடிய ஒருவர் கூறிய கதை இது. கேட்டு எழுதியவர்-எஸ். எம். ஜே.



சுருவில், அன்னை மரிமாதா ஆலயம்

## *விருந்தோ விருந்து !*

அன்னை மரிமாதா கோவில் விருந்தென்றால் சொல்லவா வேண்டும். மக்களின் ஆரவாரத்துக்கும் ஆர்வத்துக்கும் அளவே இல்லை. ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, சரவணை, புளியங்கூடல் முதலாம் கிராமங்களில் இருந்து பெருந் தொகையான மக்கள் விருந்து நாளில் சுருவில் அன்னைமரிமாதா ஆலயத்தில் திரண்டு நிற்கும் காட்சி எவரையும் உறுத்தும். வருடா வருடம் வைகாசி வணக்க மாத வழிபாடுகள் முடிந்த மறுநாள் ஆனி மாதம் முதலாந்தேதி இந்த விருந்து நடைபெறும். கோவிற் கிறிஸ்தவர்களாலேயே ஆரம்ப காலத்தில் விருந்து நடாத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் அயல் ஊர் மக்களிடமும், பணமாகவும், பொருளாகவும்

நன்கொடைகள் பெறப்பட்டு விருந்தை நடாத்தி வருகிறார்கள். சுருவிலில் சாதி சமய வேறுபாடின்றி ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் மாதாவின் விருந்தில் பங்குகொள்ளுகிறார்கள். அன்னதானம் என்றோ, பிச்சை என்றோ, கஞ்சி என்றோ மற்ற இடங்களில் நடைபெறும் இந்த வைபவம் இங்கு விருந்து என்று அழைக்கப்படுவது அதன் சிறப்புக்குறித்துத்தான் என எண்ண இடமுண்டு.

இந்த விருந்து எப்போ ஆரம்பமாகியது? எக்காரணத்தினால், யாரால் தொடங்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. சுருவிலில் வாழும் வயது முதிர்ந்த அனுபவம் வாய்ந்த பெரியவர்களும் விருந்தின் வரலாற்றைக் கூறக்கூடியவராயில்லை. ஆனால் வயது முதிர்ந்த ஒருவர் தனது தகப்பன், பேரன் காலந்தொட்டு விருந்து நடைபெற்று வருவதாகக் கூறுகிறார்.

பூசினிக்காய், கத்தரிக்காய், பயறு, பலாக்காய் இன்னாரன்ன மரக்கறிகள் ஒன்றாகச் சமைத்த சுவையூறும் கறியும், ஊர் நெல்லில் குற்றிய அரிசிச் சோறும் பரிமாறப்படும். இந்த விருந்தின் சுவையே அலாதி. பச்சைப் பனை ஓலையினால் செய்த தட்டுவத்தில் குடலையாய்க்கட்டி வந்து வீட்டில் உள்ளவர்களோடு பிசைந்து உண்டால் பேரானந்தமே.

1971ம் ஆண்டு சுருவில் ஊரைச் சேர்ந்த பிரபல கோவிற் தொண்டர் திரு. அ. சந்தியாப்பிள்ளை என்பவர் தாம் விருந்துக் கென்று பணியாற்றத் தொடங்கி 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடினார். இவர் நீர்கொழும்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலாம் இடங்களுக்கெல்லாம் சென்று விருந்துக்குப் பொருளும் பணமும் சேர்த்து வருவார். விருந்து நடைபெறும் தினத்தில் முன்னின்று உழைப்பார்.



சுருவில் : மரியாயின்சேனை, மாசில்லாமாதா கூட்டப்பெண்கள்

# தணுவில் புனித அன்னம்மாள் ஆலயம்

**(கரம்பொன் பங்கு மலரிலிருந்து எடுக்கப்பட்டது)**

சுருவிலில் கோவில்கொண்டிருக்கும் அன்னைமரி தமது அன்னையாம் புனித ஆனாள் முனீஸ்வரிக்கு தமது அயலிலேயே ஆலயம் அமைத்துக் குடியேற்றக் கருதினாளோ என்னவோ! பிள்ளைப் பாக்கியம் இல்லாதோருக்கு அதைப் பெற்றுக்கொடுக்கும் பேருபகாரி, கல்விக்கு மோட்ச பாதுகாவலி கரம்பொன் பங்கில் தமக்கென ஓர் இடத்தை தயார் செய்யச் சித்தங்கொண்டாள். பேய், பசாசு என்று இரவில் தனிவழி ஏக தயங்கி அஞ்சும் தரிசுநிலத்திலே, குடிமனை ஏதுமில்லா அந்தரவழியிலே ஆனாள் முனீஸ்வரி பள்ளிகொள்ளக் கருத்துக்கொண்டு தம் அடியார்களுள் ஒருவரை ஏவித் தூண்டினார் எனலாம். தலைவில்லுச் சேத்திரத்தில் பக்தகோடிகளை தம் பாதாரவிந்தத் தில் பாசத்தோடணைத்து ஆதரவு நல்கும் இந்த அன்னை நம் ஊரில் கருணைமழை பொழியத் திருவுளங் கொண்டார். 1957ம் ஆண்டு, மறைந்த நம் யாழ் ஆயர் பேரருட் திரு ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் புனிதை ஆனாள் முனீஸ்வரிக்கு ஆலயமெடுக்க தமது ஒப்புதல் வழங்கினார். அந்த ஆண்டிலேயே கட்டுவேலைகள் ஆரம்பமாகின. சுருவிலைச் சேர்ந்த திரு. S. P. சின்னத்துரை அவர்கள் தமது சொந்தக் காணியை கோவிலுக்குக் கொடுத்த தோடு தாமே கோவிலையும் கட்டிக்கொடுத்தார். 1958ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் நாள் மறக்க முடியாத நாளாகும். அன்று மாலை சுருவில் அன்னைமரி மாதா கோவிலில் பக்தர்கள் கூடினர். ஆலயத்தை உருவாக்குவதில் அயராது உழைத்த வண. M. S. நல்லையா அடிகளார் புனித ஆனாள் முனீஸ்வரியின் திருச்சுரூபத்தை ஆசீர்வதித்து பெரும் ஊர்வலமாக, ஆரவாரத்துடன் தணுவிலில் அமைக்கப்பட்ட சிறிய ஆலயத்துக்கு எடுத்துவந்து பிரதிஷ்டை செய்து வைத்தார். அன்று ஆலயத்தில் முதற் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. வருடா வருடம் ஆடி மாதம் 17ம் திகதி நவநாட்கள் ஆரம்பமாகி 26ம் திகதி ஆனாள் முனீஸ்வரியின் திருநாள் பக்திச் சிறப்புடன் பரிமளிப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. சைவ சமயப் பக்தர்கள் பலர் திருநாளைச் சிறப்பிக்க தாமும் உபயமளித்து வருகிறார்கள். அவர்கள் ஆனாள் முனீஸ்வரியின் அருளை அடைந்ததன் காரணமாக அத்தாயார் மேல் அசைக்கமுடியாத பற்றும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள் என்றால் அன்னை ஆனாள் முனீஸ்வரியின் கடாட்சம்தான் என்னே! வாராவாரம் சனிக்கிழமைகளில் பக்தர்கள் இப்பதிக்கு வந்து அன்னையின் அருளிரந்து செல்லுகிறார்கள். கோவில் அபிஷேகம் செய்த சமயம் கோவிலை அடுத்துள்ள இத்தி மரத்தில் நின்று வால்வெள்ளி போன்ற பெரிய வெளிச்சத்துடன் அவ்விடத்தில் உறைந்து பல ஆண்டுகளாக அட்டகாசம் செய்த பசாசு ஆக்ரோஷமாய் எழுந்து குறுக்குக் கடலின் மறுகரையில் உள்ள முருக்கடிப்பிட்டியில் போய் விழுந்தது. இதைக் கண்ணாற் கண்டவரே சாட்சி பகருகிறார்கள். கரம்பொனூரைச்

சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை என்பவர் 1959ம் ஆண்டில் பீடப்பகுதியை மேற்குப் பக்கமாக நீட்டிக் கட்டிக்கொடுத்தார்.

தனுவிலூர்

## அர்ச். அன்னம்மாள் ஆலய திறப்பு விழா

கடந்த ஆடித்திங்கள் 29-ம்நாள் சுருவில், கரம்பன் மக்களுக்குப்பொன் அட்சரங்களாற் பொறிக்கப்படத் தகுந்த ஒரு புனிதமான தினமாகும். அன்றுமாலை சூரியன் இன்னுமே தனது பொற்கதிர்களைப் பரப்பி எம் பரிசுத்த அன்னைமரிமாதாவின் மாதாவாம் அர்ச். அன்னம்மாளின் எழுந்தருள்கையைச் சுருவில், கரம்பன் கிறீஸ்தவர்களுக்கும், மற்றும் அயலூர்ப் பக்தர்களுக்கும் தெரிவிக்கும் பான்மையாகப் பிரபை வீசிக்கொண்டிருந்தான். சுருவிலூரில் கோயில் கொண்டிருக்கும் பரிசுத்த அன்னைமரி மாதாவின் ஆலயத்தில் பக்தர்கள் ஒன்றுகூடி நிற்கக் கடிகாரம் ஐந்துமுறை இசைத்து நேரத்தை அறிவிக்கக் கட்டளைக்குரவர் வண. எம். எஸ். கல்லியா சுவாமியவர்கள் மோட்டர்ரதாரூடராய் வந்துசேர்ந்து ஆலயஞ்சென்று அங்கே அழகுறச் சிங்காரிக்கப்பட்டு மலர்களாலும், மாலைகளாலும் பொலிந்து விளங்கிய உயர் பீடத்தில் வீற்றிருந்த அர்ச். அன்னம்மாளின் அலங்கார சுரூபத்தை ஆசீர்வதித்தார். அதன்மேல் பள்ளிச்சிறுவர்கள் முன்செல்ல, அவர்களைத் தொடர்ந்து பெண்மணிகளும், ஆடவரும் இரு வரிசையாகப் பின்னே செல்ல, அர்ச். அன்னம்மாளின் திருச் சுரூபம் நன்கு சிங்காரிக்கப்பட்டிருந்த அழகியதோர் தேரில் வைத்து இரண்டு மைலுக்கப்பாலுள்ள தனுவிலூர்க்குப் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அவ்வமயம் செபமாலைகளாலும் பாமாலைகளாலும் அர்ச். அன்னம்மாளை வாழ்த்திப் பக்தர்கள் வரிசையாகப் பக்தியுடன் சென்ற காட்சி பிறசமயமக்களுக்குமே பெரும் உருக்கமான காட்சியாயிருந்தது.

ஒன்றரைமைல்தூர பவனியின்பின் கரம்பனிலிருந்தும், மெலிஞ்சிமுனையிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் ஒன்றுகூடிவந்து மாதாவை வாத்திய வரிசைகளுடன் எதிர்கொண்டழைத்துப் புதிய கோயிலுக்கு அழைத்துச்சென்றனர். கோயில் வாயிலை அடைந்ததும் பக்தர்குழாம் அங்கே அமைக்கப்பட்டிருந்த பந்தரில் குழுமியிருக்க, அர்ச். அன்னம்மாளின் திருச்சுரூபம் இதற்கெனச் சித்தஞ் செய்திருந்த ஆசனத்தில்ஸ்தாபிக்கப்பட்டதும் வண. கட்டளைக்குரவர் அங்கு குழுமியிருந்த ஆயிரவர்க்கு மேற்பட்ட பக்தர்கள் மத்தியிலே, பழைய ஏற்பாட்டில் சலமோன் இராசா ஜெருசலேம்தேவாலயத்தைக் கட்டியபோது பரலோகதேவன்வந்து அதற்குள் அடங்கியிருந்த அதிசய தன்மையையும், அதனாற் பரலோகத்தில் தேவனுக்குண்டான மகிமையையும் எடுத்துக்காட்டி, அத்தன்மையதான ஒரு நிகழ்ச்சியே புதியகோவிலுக்கும் உண்டானதென எடுத்துக்கூறி அர்ச். அன்னம்மாள் பக்தியையும், விசேடமாய் அவ்விடம் கேட்கவேண்டிய புத்திரபாக்கியத்தையும், அதனால்கிடைக்கும் பிள்ளைகளின் நல்வளர்ப்பையும்பற்றிச் செய்த உருக்கமான பிரசங்கத்தைக்கேட்டு எவர்தான் உவகையெய்தாதிருப்பர்? ஈற்றில் அவர் புதியகோயிலைக் கட்டி உபகரித்த சுருவிலூர்ப் பெருமகன் திரு. எஸ். யு. சின்னத்துரை அவர்களின் வள்ளன்மையையும், குணாதிசயங்களையும் பாராட்டி நன்றிகூறித் தமதுபிரசங்கத்தை முடித்தார்.

***சத்தியவேத பாதுகாவலன்– 25.09.1958***

# எழுவைதீவு புனித தோமையார் ஆலயம்

**(காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு மலர் - 1995)**

1911ம் ஆண்டு முதல் காவலூர்ப் பங்கின் ஒரு அங்கமாக எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. 1902ம் ஆண்டிலிருந்து 1911ம் ஆண்டு வரை அது நெடுந்தீவுப் பங்கின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்தது. எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் வண. சந்திரசேகரர் சுவாமிகளின் காலத்துக்கு முற்பட்டதாகவே தோன்றுக்கின்றது. கடற் தொழிலாளரைப் பிரதான சமூகத்தினராகக் கொண்ட அவ்வாலயத்தின் மூதாதையர்கள் மாதகல், மண்டைதீவு, தொடர்புகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இப்பொழுது சுமார் நூறு குடும்பங்கள் வரை இங்கு வாழுகிறார்கள். பக்தி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும் ஒரு சமுதாயம் அது. இவ் ஆலயம் பற்றிய பூர்வீகம் தெரியாதிருக்கிறது. காவலூர்ப் பங்குத் தந்தையர்கள் காலத்துக்குக் காலம் இவ்வாலயப் புனரமைப்புக்கும் திருத்தங்களுக்கும் உதவி வந்துள்ளனர். வண. S. F. கிருபானந்தன் அடிகளாரின் காலத்தில் (1985-1991) புதிய குருமனை ஒன்று அமைக்கப்பட்டது. 1995ல் ஆலயப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1993ம் ஆண்டு முதல் வண. S. பிரான்சிஸ் இயூஜீன் அடிகளார் தீவகப்பங்குத் தந்தையாக எழுவைதீவிலிருந்து பணியாற்றுகிறார். நெருக்கடிமிக்க இக்காலத்தில் பிரயாணக் கஷ்டங்கள் மற்றும் அசௌகரியங்கள் மத்தியிலும் மனித நேயப் பணிகளுடன் ஆன்மீகப் பணிகளையும் ஆற்றிச் சவால்களுக்கு முகங் கொடுத்து துணிவுடன் உழைக்கும் தீவகப் பங்குத் தந்தையின் சேவை பாராட்டுக்குரியதே. அனலைதீவு வேளாங்கண்ணி மாதா ஆலயமும், புங்குடுதீவு உட்பட லைடன்தீவு ஆலயங்கள் யாவும் அவரது பராமரிப்புக்கு உட்பட்டவை. அவ்வப்போது காவலூர், கரம்பொன், நாரந்தனை ஆலயங்களையும் தரிசித்து அப்பகுதி வாழ் கத்தோலிக்கரின் ஆன்மீக அலுவல்களில் உதவி வருகிறார். வருடாவருடம் மார்கழி மாதம் 21ந் தேதி புனித தோமையார் ஆலய விழா நடைபெறும்.

எழுவைதீவில் றோ.க. தமிழ்ப் பாடசாலை ஒன்று கல்விப் பணிக்குக் கைகொடுத்து சமயச் சூழலில் கத்தோலிக்க மாணவர்கள் கல்வி கற்பதற்குப் பேருதவியாக இருந்து வருகின்றது.

புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழாவுக்கும், மலர் வெளியீட்டுக்கும் தோன்றாத் துணையாக ஆக்கமும் ஊக்கமும் அளித்த வண. இயூஜின் அடிகளாருக்கு எனது இதயங்கனிந்த நன்றிகள்.

# கரம்பொனூர் மக்கள் சென்று வழிபடும் காவலூர் ஆலயங்கள்

(Genealogy of Catholic Families of Karampon – 2000)

தெய்வ பக்தியில் சிறந்து விளங்கும் கரம்பொனூர் மக்கள் பெரிதும் போற்றிப் பெருமை பாராட்டி வழிபாடுகளைச்செய்து வருவது தாங்கள் உயிராய் மதிக்கும் புனித செபஸ்தியார் ஆலயமேயாகும். பங்குத்தளத்தில் கட்டிக்காத்து உரிமை பாராட்டும் ஆலயம் அது.

புனித செபஸ்தியாரில் பேரன்புடைய கரம்பொன் மக்கள், ஊர்காவற்றுறை, நாரந்தனை, சின்னமடு, சுருவில், சாட்டி முதலாம் இடங்களில் அமைந்துள்ள ஆலயங்களுக்குஞ் சென்று வழிபாடு செய்வது வழக்கம். 1938ம் ஆண்டு கரம்பொன் தனியான பங்குத்தளம் ஆகியது. அதற்கு முற்பட்ட காலங்களில் காவலூர்ப் பங்கின் ஓர் அங்கமாகவே கரம்பொன் விளங்கியது. அதன் காரணமாக காவலூரில் அமைந்துள்ள ஆலயங் களுக்குச் செல்லவேண்டிய தேவையும் இருந்தது. ஞானஸ்தானம், திருமணப் பதிவு போன்ற பதிவுகள் 1938 வரை காவலூரில் தான் இடம்பெற்றன. பதிவு பற்றிய ஆவணங்கள் காவலூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தான் இருந்தன. அது தவிர ஊர்காவற்றுறைக்கு பல அலுவல்கள் காரணமாகச் செல்லவேண்டிய தேவை ஏற்படும் போதெல்லாம் கரம்பொன் மக்கள் காவலூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கும், புனித மரியாள் ஆலயத்துக்கும் செல்லுவது வழக்கம். புனித அந்தோனியார் பக்தர் களான கரம்பொனூர் மக்கள் செவ்வாய்க்கிழமைகளில் தவறாது புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று வருவது அவர்கள் வழக்கமாகிவிட்டது. ஆனி மாதத்தில் புனித அந்தோனியார் திருநாளில் கரம்பொன் மக்கள் கலந்துகொள்ளத் தவறுவதில்லை. அந்தோனியார் கல்லூரி ஆலயத்துக்கு அருகில் இருந்ததனாலும் கல்லூரிக்கு அலுவலாகச் செல்லும் கரம்பொன் மக்கள் அவ் ஆலயத்தையும் தரிசித்து வருவர். மாதா பக்தர்களான கரம்பொனூர் மக்கள் காவலூர் புனித மரியாள் ஆலயத்துக்கும் சென்று தேவதாயாரை வழிபடுவார்கள். ஊர்காவற்றுறைச் சந்தைக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்யவும், பொலிஸ் நிலையம், நீதிமன்ற அலுவல்கள் நிமித்தம் காவலூர் வரும் மக்கள் தேவதாயின் ஆலயத்தையும் தரிசித்துச் செல்லுவர். ஆவணி மாதம் பதினைந்தாம் தேதி புனித மரியாள் ஆலய விழாவில் பெருமளவிலான கரம்பொன் கிறிஸ்தவர்கள் கலந்துகொள்வார்கள். சனிக்கிழமைகளில் தேவதாயாரின் ஆலயத்துக்கு வருகை தருவதற்கும் சிலர் தவறுவதில்லை.

1995ம் ஆண்டு மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டு லிழா அங்கு கொண்டாடப் படவில்லை. நாட்டின் போர்க்கால நிலைமைகளினால் 1990ல் மக்கள் காவலூரை விட்டும் பின் 1991ல் லைடன் தீவிலிருந்தும் குடாநாட்டுக்கு இடம்பெயர்ந்த துர்ப்பாக்கிய

நிலையில் அந்நூற்றாண்டு விழா கொழும்பில் கொண்டாடப்பட்டது நினைவு கூரத் தக்கது.

கரம்பொன் மக்கள் காவலூரில் அமைந்துள்ள புனித சூசையப்பர் ஆலயத்துக்கும் செல்வதுண்டு. அவ்வாலய விழாவை கரம்பொன் மக்களும் சிறப்பிக்க வருகை தருவார்கள். வைகாசி முதல் தேதியில் கொண்டாடப்படும் தொழிலாளர் தினத்தில் கரம்பொன் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வதை அவதானிக்கலாம். அந்த ஆலய த்தின் 75வது ஆண்டு நிறைவு விழாவும் காவலூரில் கொண்டாடப்படவில்லை. முன் குறிப்பிட்ட நாட்டு நிலைமை காரணமாக கனடாவில் வாழும் அவ்வாலய மக்களால் அங்கு கொண்டாடப்பட்டது. கரம்பொன் மக்களுக்கும் நாரந்தனை வாழ் மக்களுக்கும் இடையில் குடும்ப உறவுகள் உண்டு. அதன் காரணமாக அங்குள்ள சம்பேதுரு சம்பாவிலு ஆலய விழாக்களிலும் மற்றும் முற்காலத்தில் இடம் பெற்ற 'பாசு' எனப்படும் திருப்பாடுகளின் காட்சி நடைபெறும் காலங்களிலும் அங்கு செல்லுவார்கள். நாரந்தனையில் உள்ள மிகப்பழைய ஆலயம். வரலாற்றுப் பழமை மிக்க ஆலயம் ஆகும்.

சரவணையில் அமைந்துள்ள சின்னமடுமாதா ஆலயம் யாழ் குடாநாட்டில் உள்ள ஒரு யாத்திரைத் தலமாகும். மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் கரம்பொன் மக்களிற் சிலர் சின்னமடுவுக்குப் போய்வருவார்கள். ஆவணி மாதம் 5ம் திகதி சின்னமடுமாதா திருநாள் கொண்டாடப்படும். அக்காலத்தில் கரம்பொனூர் மக்கள் வண்டில் கட்டிக் கொண்டு அத்திருத்தலத்துக்குப் போவது வழக்கமாக இருந்தது. இன்றும் பெருமளவு கரம்பொன் மக்கள் அத்திருத்தலத்தில் மிகுந்த பற்றுள்ளவர்களாகவே இருக்கின்றனர். 1994ம் ஆண்டு சின்னமடுமாதாவின் நூற்றாண்டு விழா அங்கு கொண்டாடப்பட வில்லை.. மக்கள் இடம்பெயர்வும் நாட்டின் துர்ப்பாக்கிய நிலைமை காரணமாக அவ் விழா கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் கொண்டாடப் பட்டதை பலர் மறந்திருக்கமாட்டார்கள்.

கரம்பொனூர் மக்களால் சிரத்தையுடன் கொண்டாடப்படும் மற்றுமோர் ஆலயம் சாட்டி சிந்தாத்திரைமாதா ஆலயமாகும். கரம்பொனூரைச் சேர்ந்த பஸ்ரியன் என்பவர் ஆலய முகப்பைக் கட்டிக்கொடுத்து ஊரின் பெருமையை உயர்த்தியுள்ளார். முற்காலத்தில் புரட்டாசி மாதம் 24ந் தேதி சாட்டிமாதா திருநாளுக்கு கரம்பொன் மக்கள் வண்டில் கட்டிச் சென்று தங்கி நின்று விழா கொண்டாடி அன்றய விருந்தில் முக்கிய பங்கு கொள்வது வழக்கமாகியிருந்தது. 150 ஆண்டு பழமைமிக்க இத்திருத்தலம் குடாநாட்டு மீனவர் சமூகத்தினரால் மிகவும் அன்பு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

1957ம் ஆண்டில் சுருவில் வீதியில் தணுவில் என்னுமிடத்தில் புனித அன்னம்மாள் ஆலயம் உருவாகியது. சுருவிலைச் சேர்ந்த P. S. சின்னத்துரை என்பவரது அயராத முயற்சியினாலும், கரம்பொன், சுருவில் மக்களின் ஒத்துழைப்போடும் அன்றைய பங்குத் தந்தையாகவிருந்த வண. M. S. நல்லையா அடிகளாரின் பேராதரவோடும் அவரது சொந்தக் காணியில் இவ் ஆலயம் உதயமாகியது. அவ்வாண்டு முதல் ஆடி மாதம் 26ந் தேதி இங்கு புனித அன்னம்மாள் திருநாள் விமரிசையாக கொண்டாடப்பட்டது. சுருவில், கரம்பொன், நாரந்தனை, ஊர்காவற்றுறை முதலாம் இடங்களில் இருந்து மக்கள் பெருமளவில் இத்திருத்தலத்துக்கு வருகை தருவர். கரம்பொன் பங்குத்தந்தையின் பரிபாலனத்தில் இவ் ஆலயம் இருந்ததால், கரம்பொன் பங்கு மக்கள் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்.

1970க்குப் பின் கரம்பொனில் வேளாங்கண்ணி மாதாவின் திருத்தலம் பிரபலமடையத் தொடங்கியது. 1980ம் ஆண்டு முதல் அவ் ஆலய விழா வைகாசி மாதத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அதுவும் நாட்டு நிகழ்வுகளால் தளர்ந்துவிட்டிருப் பது கவலை தருவதாகும். கரம்பொன் பங்குத் தந்தையின் நிருவாகத்தில் இவ் ஆலயம் இருந்ததால் பங்கு மக்கள் மிகுந்த அக்கறைகாட்டி அதை வளர்த்தெடுத்தனர் எனலாம்.

சுருவிலில் அமைந்துள்ள அன்னைமரி மாதா ஆலயமும் பிரபலமானது. கரம்பொனூர் மக்களுக்கு சுருவிலுடன் மிக நெருங்கிய குடும்ப உறவுகள் இருந்தமையால் அங்கும் சென்று வழிபாடு செய்வது கரம்பொனூர் மக்களின் வழக்கமாகும். வருடாவருடம் ஆனி மாதத்தில் நடைபெறும் சுருவில் விருந்து சிறப்பான நிகழ்வாகும். கரம்பொன் மக்களும் அவ்விருந்துக்குப் பணமும் பொருளும் உபயம் செய்வதோடு விருந்திலும் தவறாது சமுகமளிப்பர். புரட்டாசி மாதம் எட்டாந் திகதி இங்கு ஆலய விழா நடைபெறும். அவ்விழாவிலும் கரம்பொன் மக்கள் உற்சாகத்துடன் கலந்து சிறப்பித்து வந்தனர்.

1991ம் ஆண்டிலிருந்து முன் குறிப்பிட்ட ஆலயங்கள் மக்கள் இடம் பெயர்வுகளால் கைவிடப்பட்ட நிலையில் தேடுவார் அற்று பாதுகாப்பற்ற நிலையிலும், சேதமுற்று சிதைந்தும் இருந்தன. 1996ம் ஆண்டிலிருந்து இவை புனரமைக்கப்பட்டு பங்குத் தந்தை யர் இருவரின் பராமரிப்பில் வழிபாடுகள் ஆலய விழாக்கள் என்பன சிறப்பாகவும் கிரமமாகவும் நடைபெற்று வருவதாக அறிகின்றோம். மக்கள் வாழ்வில் அபயமளிக்கும் இவ் ஆலயங்கள் அவர்களது ஆன்மீகத் தேடல்களுக்கு இன்றியமையாதனவாகும். கரம்பொனூர் மக்களின் ஆன்மீக வாழ்வுக்கு துணையாக நின்ற இவ் ஆலயங்கள் என்றும் நினைவுகூரத்தக்கவை. அவர்களது விசுவாச உறுதிப்பாட்டுக்கு அவைதான் பக்கபலமாகத் திகழ்ந்தன.

# திருக்குடும்ப கன்னியர் சபையின்

# அர்ப்பணிப்பு சேவையினால் வளம்பெற்ற கல்விக்கூடம்

*காவலூர் புனித அந்தோனியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தென்னிலங்கைக் கிளை 2002 ஆம் ஆண்டு ஆனி மாதம் வெளியிட்ட "Anthonian" இதழில் பிரசுரமான கட்டுரை)*




*தீவுப்பகுதியின் முன்னோடி மகளிர் கல்விக்கூடமாய் திகழும் கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம் இவ்வருடம் (2002) பவள விழாவைக் கொண்டாடுகின்றது. தீவுப்பகுதியில் மகளிர் வித்தியாலயம் என தரம் உயர்த்தப்பட்ட ஒரே ஒரு மகளிர் பாடசாலை இதுவாகும்.*

*1977ஆம் ஆண்டு பொன் விழாவையும் 1987ஆம் ஆண்டு வைர விழாவையும் கண்ட இவ் வித்தியாலயம் போர்க்காலச் சூழ்நிலைகளினால் ஏற்பட்ட இடம்பெயர்வுகளால் 1990 ஆவணி முதல் 1995 வரை இயங்கமுடியாதிருந்தது. எனினும் புனித அந்தோனியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். ஏ. ஈ. இரட்ணராஜாவின் முயற்சியினால் சில மாதங்கள் சுருவிலிலும் 1991ஆம் ஆண்டு வைகாசி முதல் யாழ்ப்பாணத்திலும் கொத்தணிப் பாடசாலையாக ஒன்றிணைந்து செயற்பட்டது.*

*1980க்கு பிந்திய காலத்திலிருந்து O' Level படித்த மாணவிகள் புனித அந்தோனியார் கல்லூரியில் A' Level படித்து சித்தியும் அடைந்துள்ளனர் என்பது இவ்விரு கல்வி நிறுவனங்களின் பெருமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் புரிந்துணர்விற்கும் சான்றாகும்.*

*1996இல் அதிபராகப் பொறுப்பேற்ற அருட்சகோதரி கலிஸ்ராவின் முயற்சியால் பாடசாலை புனர் நிர்மாணஞ் செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டுமுதல் அருட்சகோதரி தயாநாயகி அதிபராகப் பணி யாற்றிவருகிறார்.*

*ஈழத்திருநாட்டில் கல்விபணியில் சிறப்புமிக்க இடத்தை வகிப்பவர்கள் திருக்குடும்ப கன்னியர் சபையினர்தான். திருக்குடும்ப கன்னியர் சபையினர் தீவுப்பகுதியில் குறிப்பாகக் கரம்பொன், நாரந்தனை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மகளிர் கல்விக்காகப் பாடசாலைகளை ஆரம்பித்துப் பணியாற்றி வருகின்றனர்.*

*கரம்பொனூரில் 1926ஆம் ஆண்டு திருக்குடும்பக் கன்னியர் சபையால் மகளிருக்கான ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது இப்பாடசாலை புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு அருகாமையில் மேற்குப் புறமாக சுருவில் வீதியோடு அமைந்திருந்தது. திருக்குடும்பக் கன்னியர்*

*மடம் ஆலயத்தின் தென்திசையில் St. Anne's Villa என்னுமிடத்தில் இருந்தது. தற்சமயம் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தோடு இணைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை முன்னர் புனித செபஸ்தியார் தமிழ்க் கலவன் பாடசாலையாக (ஆரம்பப் பாடசாலை) இருந்த பாடசாலையும் இந்த மடத்தோடு இணைந்திருந்தது. St. Anne's Villa முன்னாள் யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் தந்தையாரான ஒல்லட்டியா மாஸ்ரரான யக்கோப்பிள்ளையினால் திருக்குடும்பக் கன்னியர் சபைக்கு உபயமாக்கப்பட்டது.*

*1926ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் ஆங்கிலப் பாடசாலை ஆண்டுகள் செல்லச் செல்ல மாணவர்களின் தொகை அதிகரிக்கவே பாலைக்காட்டுச் சந்தியில் புதிய பாட சாலைக்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அருட்சகோதரி கொலெற், அருட்சகோதரி லூாட்ஸ் ஆகியோரின் அயராத உழைப்பும் விடாமுயற்சியும் புதிய பாடசாலைத் தோற்றத்துக்கு உறுதுணையாய் அமைந்தன. 1952ஆம் ஆண்டு புதிய பாடசாலை இயங்கத் தொடங்கியது. கரம்பொன் மகளிர் ஆங்கிலப் பாடசாலை 'சிறிய புஷ்ப மகளிர் ஆங்கிலப் பாடசாலை' எனப் பெயர் மாற்றம் பெற்றது.*

*1950ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற அருட்சகோதரி லூாசிலாவின் சேவையால் மேற்படி மகளிர் கலைக்கூடம் பலதுறைகளில் துரித வளர்ச்சி கண்டது. கல்வி, கலை, கலாச்சாரம் கல்வி யோடு சேர்ந்த விளையாட்டுத்துறை உள்ளிட்ட அனைத்திலும் முன்னணியில் திகழ்ந்தது. அருட் சகோதரி லூாசிலா 1967ஆம் ஆண்டுவரை சுமார் 17 ஆண்டுகாலம் ஆற்றிய பணிகள் எவரும் மறந்திருக்க முடியாது. 1980ஆம் ஆண்டு இப்பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டது. அதன் பின்னரே இது மகாவித்தியாலயம் என்ற தரத்துக்கு உயர்த்தப்பட்டது. 1971ஆம் ஆண்டு கரம்பொன் புனித செபஸ்தியார் றோ. க. கனிஷ்ட பாடசாலையும் (பழைய மடத்துடன் இருந்த பாடசாலை) இதனுடன் இணைக்கப்பட்டது. அதுவும் திருக்குடும்பக் கன்னியர்களாலேயே நிர்வகிக்கப்பட்டது.*

*அருட்சகோதரி லூாசிலாவைத் தொடர்ந்து அருட்சகோதரி கொலெற் மீண்டுமொரு முறை இங்கு அதிபர் பொறுப்பேற்று சிலகாலம் பணியாற்றினார். அக்காலத்தில்தான் அருட்சகோதரி கார்மலீற்றா அதிபரின் பணிகளை மேற்கொள்வதற்காகப் பயிற்றப்பட்டார். 1968ஆம் ஆண்டு அருட்சகோதரி கார்மலீற்றா அதிபராக நியமனம் பெற்றார். அவர் 1980ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு ஆண்டுகள் அதிபராகப் பணிபுரிந்தார். தமது முன்னோடிகளின் அடிச்சுவட்டில் பாடசாலை அபிவிருத்திக்கு அரும்பணியாற்றினார். 1976ஆம் ஆண்டு பாடசாலைக்கு ஒரு மேல்மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. அது பாடசாலையின் பொன்விழா மண்டபமாக காட்சிதருகிறது.*

*அருட்சகோதரி கார்மலீற்றாவைத் தொடர்ந்து அருட்சகோதரி லீனா 1981ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டுவரை அதிபர் பதவியை அலங்கரித்தார். 1987 முதல் 1990ஆம் ஆண்டுவரையும் அருட்சகோதரி பாஸ்கல் அதிபராயிருந்தார். அப்பொழுது இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயரவே பாடசாலைகள் கொத்தணிமுறையில் ஒரே கூரையின்கீழ் சுருவிலிலும், பின் யாழ் நகரிலும் இயங்கியது. 1995இல் யாழ் குடாநாட்டின் பெரும் இடப்பெயர்வு நிகழ்ந்தது. 1996இல் மக்கள் மெல்ல மெல்ல கரம்பொன், ஊர்காவற்றுறைப் பகுதிகளில் மீளக் குடியமரத் தொடங்கவே பாடசாலைகள் சில மீண்டும் இயங்கத் தொடங்கின. சுமார் 300 மாணவிகள் தற்சமயம் இங்கு கல்விகற்று வருகின்றனர்.*

*இவ்வாறு 1996ஆம் ஆண்டு கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் பாடசாலையும், அருட்செல்வி கலிஸ்ரா தலைமையில் புனரமைத்து, மறுசீரமைத்துச் செயற்படத் தொங்கியது. தற்பொது கடந்த ஆண்டுமுதல் அருட்சகோதரி தயாநாயகி அதிபராகப் பணியாற்றி வருகிறார். இவருடைய முயற்சியால் பவளவிழா நிகழ்ச்சிகளும் மலர் வெளியீடும் ஏற்பாடாகியுள்ளது.*

*சிறிய புஷ்பம் என அழைக்கப்படும் சின்னத்திரேசம்மாளின் பெயர் கொண்ட இப்படசாலை றோசா மலரின் நறுமணங் கமழ்ந்து இனிய சுகந்தம்பரப்பி கல்விப்பணியைத் தொடர்ந்து சிறப்புடன் ஆற்ற இறைவனிடம் பிராத்திக்கின்றோம்.*

# புனித அந்தோனியார் கல்லூரி அறிவொளி பரப்பிய கலைக்கூடம்

**(புனித மரியாள் ஆலய நூற்றாண்டு மலர் - 1995)**

காவலூரின் கலைக்கூடமாய் கலைச்சுடராய் 120 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விப் பணியாற்றி நிற்பதுதான் புனித அந்தோனியார் கல்லூரி. ஆன்மீக வளத்துக்கு ஆலயங்கள் போல் அறிவு வளம்பெற கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிய அமுத சுரபி அது என்று கூறலாம். தீவகத்தின் முன்னோடிப் பாடசாலையாகத் தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமை அதற்குண்டு. காவலூர் உட்பட கரம்பொன், சுருவில், நாரந்தனை, சரவணை, வேலணை ஈறாக அயற் கிராமங்களில் உள்ள மக்களின் கல்விக்கு ஊற்றாகத் திகழ்ந்தது. சப்த தீவுகளின் நன்மக்களை உருவாக்கும் பெரும் கலைத்தொண்டை ஆற்றி நின்றது. கல்வித்துறையில் சமகாலத்தில் தோன்றிய பெரிய கல்லூரிகளுக்கு ஈடுகொடுத்து நல்ல பெறுபேறுகளைக் கண்ட கல்லூரி இது. காவலூர்ப் பங்கின் ஆன்மீக வாழ்வுக்கும், ஒழுக்க நலனுக்கும், விசுவாச உறுதிப்பாட்டுக்கும் உறுதுணையாய் நல் மக்களை உருவாக்கிய பயிற்சிப் பாசறையாய் அது விளங்கியது.

காவலூருக்குக் கண் எனத் திகழ்ந்தது இக்கல்லூரி என்றால் அது வெறும் பேச்சல்ல. யாழ் நகருக்கு வெளியே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில சுயமொழிப் பாடசாலை இதுவேயாகும். ஈழத்திருநாட்டிலும் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் இப்பாடசாலைப் பழைய மாணவர்கள் இக்கல்லூரியின் புகழ் விளங்க சிறந்த பதவிகளை வகித்து உன்னத நிலைகளில் காணப்படுவதே இப் பாடசாலையின் பெயரைப் பறைசாற்றுவதாக உள்ளது. இந்த நாட்டின் வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயர்களைப் பெற்று பழைய மாணவரின் புகழிலே பெருமைபட்டுக் கொள்ளக்கூடிய ஒரே ஒரு கல்லூரி புனித அந்தோனியார் கல்லூரியே. ஆறு ஆயர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற பேறுடைய கல்லூரி இதுவென்றே கூற முடியும். இலங்கையின் முதல் தமிழ் ஆயரும், யாழ் மறைமாவட்டத்தின் முதற் சுதேச ஆயருமான காலஞ்சென்ற J. A. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையைத் தொடர்ந்து திருமலை - மட்டுநகர் முதல் தமிழ்த் துணை ஆயரும் பின்னர் யாழ் ஆயராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான பேரருட்திரு. வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகையும், முன்னாள் யாழ் துணை ஆயரும், பின் திருமலை - மட்டுநகர் ஆயராகவுமிருந்து இளைப்பாறிய L. R. அன்ரனி ஆண்டகையும், இன்றைய யாழ் ஆயரும் மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயராகவுமிருந்த ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், இன்றைய திருமலை - மட்டுநகர் ஆயர் J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும், மலேஷியா ஆயர் வேந்தக்கோன் ஆண்டகையும் காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் பயின்றவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். காலஞ்சென்ற பல்மொழி வேந்தர் கலாநிதி தாவீது அடிகள், தவத்திரு தனிநாயக அடிகள் ஆகிய புகழ்மிகு


கல்விமான்களும் இக்கல்லூரிக்குப் புகழ் ஈட்டித் தந்துள்ளனர். இருபதுக்கு மேற்பட்ட குருக்கள் இக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டவர்களாக இருப்பதும் பெருமையே. பெருமைசால் இக்கல்லூரி 1872ம் ஆண்டு ஆரம்பமாகியது. வண. பொயிசோ அடிகளார் தீவுப்பகுதியில் மறைபணி ஆற்றிய போது அவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் புனித அந்தோனியார் கல்லூரி. அதன் முதல் அதிபராயிருந்த சுவாம்பிள்ளை அவர்கள் ஊர்காவற்றுறைப் பங்குக்கு முதற் குரவரை நல்கிய பெருமைக்குரியவராவார். அவரது மகனே வண. S. ஸ்ரனிஸ்லோஸ் அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் வளர்ச்சிக்கும், காவலூர் மக்களின் அனபுக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமானவர்கள், என்றும் நினைவில் நிற்பவர்கள் புனித சூசையப்பர் சபைத் துறவிகளேயாவர். கலை, கலாச்சாரம், பண்பாடு ஒழுக்கம் என்பவற்றைக் கட்டிக்காத்து வளர்த்த பெருமைக்குரிய துறவிகள் என அவர்கள் போற்றப்படுகிறார்கள். அர்ப்பணச் சிந்தையுடன் அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் எழுதப்போனால் விரியும்.

1886ம் ஆண்டு தீவகப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வண. J. N. S. சந்திரசேகரர் அடிகளாரின் பெரு முயற்சியால் புனித அந்தோனியார் பாடசாலை (பின் கல்லூரி அந்தஸ்துப் பெற்றது) புனித சூசையப்பர் சபைத் துறவிகளின் பரிபாலனத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. கல்விப்பணியில் சிறந்து விளங்கிய புனித சூசையப்பர் சபைத் துறவிகள் யாழ் மறைமாவட்டத்திலும், மன்னார், முல்லைத்தீவு, திருமலை, மட்டுநகர் மறைமாவட்டத்திலும், பதுளை, ஹற்றன் பகுதியிலும் அரும் பணியாற்றியதை நாடறியும். பல கல்விமான்களைக் கொண்ட இச்சபை கல்விக்கு ஆற்றிய சேவை காலமெல்லாம் நினைவில் நிற்க வேண்டியதாகும். புனித அந்தோனியார் கல்லூரியை ஆங்கிலப் பாடசாலையின் தரத்துக்கு உயர்த்த அரும்பாடுபட்டு, தீவுப்பகுதியின் ஆங்கிலக் கல்விக்கு முன்னோடிகள் ஆனார்கள். காலத்தின் தேவைக்கு ஏற்ப கல்லூரித்தரம் பெற முயன்றுழைத்தனர். மக்களின் பங்களிப்பு, அன்பளிப்புகள், சிரமதானப் பணிகள், நன்கொடைகள், உடல் உழைப்புகளினால் முதலில் இன்று நாம் காணும் றோ. க. பாடசாலை இருந்த இடத்தில் ஒரு விசாலமான பாடசாலை மண்டபத்தை அமைத்தனர். அதன் பின்னரே 1928ம் ஆண்டளவில் இன்றைய புனித அந்தோனியார் கல்லூரியின் பிரதான கட்டடம் உருவாக்கப்பட்டது. மக்களால் இன்றும் நினைவுகூரப்படும் தியாகத் துறவிகளான அருட் சகோதரர் பீற்றர் போல், பிலிப், பாக்கியநாதர், லீனஸ், அலோசியஸ், மனுவேற்பிள்ளை என்பவர்கள் அதிபர்களாகவும், அருட் சகோதரர் சைமன், ஜோண்மேரி, அதிரியாம்பிள்ளை, பீற்றர், பேதுருப்பிள்ளை, பெர்னான்டோ, வில்லியம், றைற்றஸ், அலெக்சிஸ் ஆகியோர் ஆசிரியர்களாகவும் பணியாற்றியவர்கள். அவர்களுள் சைமன் விறதர் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கியவர். அவரிடம் தமிழ் பயின்றவர்கள் பின் சிறந்த ஆசிரியர்களாகவும், எழுத்தாளராகவும், கவிஞர்களாகவும் விளங்கினர். அவர்களுள் ஒருவர் தான்

காலஞ்சென்ற காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா என்பது பெருமைக்குரியது. கரம்பொன் மேற்கைச் சேர்ந்த முதலியார் குலசபாநாதன், சைமன் விறதர் பயிற்றிய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெரும் தியாகத்தினால் அரும்பாடுபட்டு உருவாகியது தான் புனித அந்தோனியார் கல்லூரி. தாம் செய்த ஊழியத்தின் அறுவடையைக் காணுமுன்னரே கல்லூரி நிருவாகம் யாழ் ஆயரின் நேரடிக் கண்காணிப்பில் குருமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1938ம் ஆண்டு வண. A. S. யோசெவ் அடிகளார் கல்லூரிப் பொறுப்பை ஏற்று முதல் குரு அதிபரானார். அவரது வருகையுடன் இப்பாடசாலை கல்லூரி அந்தஸ்துப் பெற்றுத் துரித வளர்ச்சி கண்டது. 1947ம் ஆண்டுவரை பத்து ஆண்டுகாலம் அவரது முன்னோடி முயற்சிகளால் கல்லூரி சிறப்புப் பெற்றிருந்தது. அவர் கனவு கண்ட புதிய கல்லூரிக் கட்டடம் வரைபடத்தோடும் மாதிரி உருவத்தோடும் நின்றுவிட்டது. அவரது திடீர் மறைவு இத்திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. எனினும் மேற்குப் பக்கத்தில் காணப்படும் மண்டபம் வண. யோசெவ் அடிகளாரை நினைவுகூர உதவும்.

வண. A. S. யோசெவ் அடிகளாரின் பின் வண. அருள்நேசன் நீக்கிலாப்பிள்ளை, வண. J. A. கருணாகரர், வண. P. J. ஜீவரெத்தினம், வண. F. J. ஸ்ரனிஸ்லாஸ், வண. M. J. மரியாம் பிள்ளை, வண. பெஞ்ஜமின் அல்பிறட், வண. B. சூசைப்பிள்ளை ஆகியோர் இங்கு அதிபர்களாகப் பணியாற்றிக் கல்லூரியின் விருத்திக்கும், வளர்ச்சிக்கும் உதவினர் என்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. 1960 முதல் தனியார் பாடசாலையாக யாழ் ஆயரால் நிருவகிக்கப்பட்ட இக்கல்லூரி 1975ம் ஆண்டுக்குப்பின் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. வண. B. சூசைப்பிள்ளை அடிகளாரைத் தொடர்ந்து 1979ம் ஆண்டு முதல் திரு. S. A. E. இரட்ணராஜா அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுப் பல துறைகளிலும் கல்லூரியை வளர்த்தெடுத்துச் சிறந்த நிருவாகியாக விளங்கினார். இவரே இக்கல்லூரியைப் பொறுப்பேற்ற முதல் பொதுநிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது. 1990ம் ஆண்டு போர்ச் சூழ்நிலைகளினால் இக்கல்லூரி ஈடுசெய்யமுடியாத பேரழிவுகளைக் கண்டு, பெரும் பகுதி சிதைவுற்றுக் காணப்படுகின்றது. நூற்றாண்டு காலமாக காவலூரில் கல்விப்பணிக்குக் கலங்கரை விளக்கமாக ஒளி வீசிய இக்கலைக்கூடம் இப்படி ஒரு நிலைக்கு வந்து விட்டதைக் காவலூர் மக்கள் மாத்திரமல்ல லைடன்தீவு மக்கள் அனைவருமே பேரழிவாகக் கருதிக் கவலையில் மூழ்கியுள்ளனர். அறிவொளி பரப்பி, மறைப் பணிக்கு கை கொடுத்த மாபெரும் தாபனம் இப்படியாக வேண்டுமா? என்றே எல்லோரும் ஏக்கத் தவிப்பில் தத்தளிக்கின்றார்கள். சமீப காலங்களில் கொத்தணி அமைப்பிலும், வட்டார நிலையிலும் இக்கல்லூரி மைதானம் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என்பன நிகழும் மத்திய நிலையமாக விளங்கியது. சிறந்த விளையாட்டு மைதானத்தை உடைய இப்பாடசாலை பல பொது வைபவங்கள் விழாக்களுக்கு நிகழ்விடமாக விளங்கிய பெருமை

பெற்றிருந்தது. இன்று? ....... இதுதான எல்லோரும் ஏக்கத்துடன் எழுப்பும் கேள்விக்குறி. மீண்டும் இக்கலைக் கூடத்தைப் புனரமைப்பது என்றோ?



# கல்லூரிப் புளியமரம் பேசுகிறது

## கரு; S. மங்களநாயகம், உரு; எஸ். எம். ஜே

(காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியருகில் நின்ற அந்தோனியன் புளியமரத்தின் புலம்பல். ஏறத்தாள இருநூற்றாண்டு காலப் பழமைவாய்ந்த இப் புளியமரம் 2017ம் ஆண்டு நிறைவடைந்த வீதி விஸ்தரிப்பின்போது முற்றாகத் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளது. 2008ம் ஆண்டு வெளியான காவலூர்ப் புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்க தென் இலங்கைக் கிளைச் செய்தி ஏட்டின் வெள்ளி விழா மலரிலிருந்து எடுக்கப்பட்ட புலம்பல் இது.)

1. எவன் வந்து எங்கள் பேரான கல்லூரியை
எமன் போலக் குண்டு வைத்துத் தகர்த்தானோ நானறியேன்
அவன் வைத்த குண்டுக்கு இரையாகிப் போயிருப்பேன்
கல்லூரிக் காவலனாய் இங்கே நான் நிற்பதுவும் அதிசயமே!

2. சன்னங்கள் பல வந்து என்னுடலைத் துளைத்திடினும்
நிலைகுலைந்து போகாது மௌனித்து நிற்கின்றேன்
எத்திசை நோக்கிடினும் படையினரின் நடமாட்டம்
செய்வதறியாது தனியாக நின்று தவித்தேனே!

**ஐயகோ ஒரு நாள்**

3. இரவோடிரவாக எனது இடதுபுறக் கொப்பிரண்டை
படு பாதகமாய் வெட்டிச் சாய்த்தனரே
ஐயோ! என்று அலறினேனே என் செய்வேன்.
வெட்டியவன் நல்லாய் இருப்பானோ, ஐயன்மீர்!

4. ஆறாத்துயரில் தேற்றுவாரின்றித் திகைத்தேனே.
அந்தநோ மாறவில்லை இரண்டாண்டு கழியுமுன்னே
மீண்டும் அப்பாதகர்கள் வலக்கரத்தை வெட்டினரே
இரவில் நடந்த இந்தக் கோரத்தை யார் அறிவார்.

5. ஐயா! இத்துயரம் யாரிடம் நான் சொல்லி அழ
என் நிழலில் இளைப்பாறி மகிழ்ந்திட்ட
என் அருமைச் செல்வங்களே, பழைய மாணவரே!
எனதோலம் கேட்கிறதா? உதவிக்கு வருவீரா?

6. கல்லூரிப் பெயர் தாங்கும் புனிதன் அந்தோனி
ஆலயத்தைக் கட்டுவித்த அருங்குரவர் தம் கையால்
நாட்டிவைத்த புளியமரம் நான் என்று சொல்லி
பெருமையுடன் இவ்விடத்தில் பல்லாண்டு வாழ்கின்றேன்.

7. கல்லூரி கட்டுவித்த அருந்துறவி முதலாக
வந்த அதிபர்கள் எல்லோரும் என்னைப் போற்றி
நீரூற்றி வளர்த்து உருவாக்கி வளமாக வாழவைத்தார்
அன்று முதல் சடைத்துவளர்ந்து நிழல்பரப்பி நிற்கின்றேன்.

8. புனித வளன் துறவியர்கள் அடியிட்ட கல்லூரி
சைமன், சிறில், பேதுருப்பிள்ளையுடன்,
அலெக்ஸ் பிறதர் முதலானோர் மேன்மையுறச் செய்த
பேரான கல்லூரி இது என்றால் நாடே அறிந்த உண்மை.

9. அதிபர் திலகம் யோசேப் அடிகளாரின்
பொற்காலம் மீண்டும் வருமோ?
காவலூர்க் கணிகலனாய்த் திக்கெட்டும் புகழ் பரப்பி
வரலாற்றுப் பெருமை கண்ட அக்காலம் மறப்போமா?

10. அன்பும், பண்பும் ஆளுமைத் திறனுங் கொண்ட
யோசேப் அடிகள் ஒரு கடமை வீரனென்பார்.
ஆற்றல் மிகு அவர்பணியால் ஆங்கிலக் கல்வி
அதீத வளம் பெற்று சிறப்பாய் வளர்ந்ததையா.

11. வளமான எதிர்காலம் வரும் என்று கனவு கண்டோம்.
காலன் அவர் உயிரை கடிதிற் பறித்தானே.
ஊமை கண்ட கனவாக எல்லாமே சிதைந்ததுவே.
என் செய்வோம், நல்லார்க்குக் காலமில்லை.

12. நீக்கிலாப் பிள்ளையொடு கருணாகரன் அடிகள் மற்றும்
ஜீவரெட்டினமும், அன்னாரை அடியொற்றி
கல்வியொடு விளையாட்டில் வெற்றி நடைபோட்ட
ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாரின் சேவை மறப்போமோ?

13. அல்பிரட் அடிகளாரும், மௌனமாய் வழிநடத்தும்
மரியாம்பிள்ளை அடிகளாரும் பண்பாளன்
சூசைப்பிள்ளை சுவாமிகளும் ஆண்டுயர்ந்த கல்லூரி
துறவிகள் பணிசெய்த ஏற்ற மிகு காலம் ஐயா.

14. மதிய இடைவேளை மற்றும் ஓய்வு நேரத்தில்
மாணவர் என் நிழலில் வேர்களில் அமர்ந்திருந்து
ஆடிக்களித்ததெல்லாம் நான் மறக்கவில்லை.
பொழுது போவதே தெரியாமல் நான் இருப்பேன்.

15. காய்க்கும் மரத்துக்கு கல்லெறி அது எனக்கும் பொருந்துமெடா.
குலைகுலையாய்த் தொங்கும் காய்களுக்கு விழும் கல்லெறிக்குக் கணக்கில்லை
கல்லூரி மாணவர்கள் எல்லோர் வயிற்றுள்ளும்
என் பூக்கள், பழங்கள், விதைகள் எல்லாம் நிறைந்திருக்கும்.

16. பாடசாலை முடிந்தவுடன் வசுவுக்கு காத்திருக்கும்
மாணவரும் ஆசிரியர் பெற்றோரும் செய்யும்
அரட்டைகளால் என் செவியே செவிடுபடும். அருகே
கச்சான் விற்கும் பொன்னுக் கிழவிக்கும் நல்ல வியாபாரம்.

17. பள்ளிக்கு கள்ளம் போட்டு என் முதுகில் ஒளிந்திருக்கும்
கள்ளச் சிறுவர்க்கு அடைக்கலமாய் நின்றிருந்தேன்
மதிய இடைவேளை ஆலயத்துக் கணியணியாய்
செல்லும் இளசுகளைக் கண்டு மனம் பூரித்திருப்பேன் நான்.

18. கரம்பொனில் இருந்து வரும் ஜோர்ஜ் மாஸ்ரர் என்றால்
திறம்பட ஆங்கிலத்தைக் கற்பித்த ஆசானென்பர்
கொச்சியில் இருந்து வந்த பொன்சேகா மாஸ்ரர் ஒரு
விஞ்ஞானப் பேராசான், விளையாட்டுத்துறை மேதை.

19. அன்னாரின் சேவையிலே கல்லூரி உயர்ந்ததென்பேன்
நீக்கிலாப் பிள்ளை மாஸ்ரர் யாவருக்கும் குலை நடுக்கம்.
அவர் வரவே கூடாதென நேர்ந்திருப்பார் பலருண்டு.
வில்லுக்கு விஜயன் போல் பிரம்படிக்கு ஒரு மரியநாயகம்.

20. என் நிழலில் காத்திருந்து பிந்திவரும் மாணவரை
வசமாகப் பிடித்துவைத்துப் பிரம்பாலே அடிப்பான் பாவி.
ஆறு அடிபட்டால் அடுத்தநாள் பிந்துவாரோ.
தடியன் அவரைச் சிறுவர் திட்டும்ஒலி என்காதில் எதிரொலிக்கும்.

21. கணிதம் கற்பிக்கும் விக்ரர்பிலிப் மாஸ்ரருடன்
ஆங்கில ஆசான் பிலுப்புப்பிள்ளை உயர் வகுப்புக்களை
ஊக்கமுடன் வளர்த்தெடுத்தார். உண்மை இது.
நடித்து நயமாகக் கற்பிக்கும் அலோய் மாஸ்ரர் என அறிவேன்.

22. புவியியல் ஆசிரியர் நடராசா அவர்தான் இந்தக் கல்லூரிக்கு
மறு வாழ்வளித்த வள்ளல் என்பேன்.
குண்டடிபட்டு சிதைந்தழிந்த கல்லூரி இப்போ சீரமைத்து
எழுந்து நிற்பதிந்த கனவானின் தயை தானே.

23. ஐ. நா. வரை சென்று தாய் மண்ணின் புகழ் பரப்பி வந்து
தமிழர் நிலை கண்டு தவித்த ஒரு நெஞ்சம் - இன்னும்
ஆசிரியர் எலியாசும் ஆசீர்வாதம் ஆசானும்
பேரான பஸ்ரியாம்பிள்ளை என்பார் செய்தபணி யார் மறப்பார்.

24. முன்பிருந்த T. சவிரிமுத்து, அருளானந்தம்,
B. M. என அன்போடே அனைவரும் அழைத்திட்ட
மனவேற்பிள்ளை மாஸ்ரருடன் மற்றும்
ஜெறாட் மாஸ்ரர், நடராசா, இவர்கள் இன்றில்லை.

25. Boxing நடராசா! ஆம் மாணவர்கள் என் நிழலில்
பட்டப்பேர் சொல்லிப் பலரை அழைப்பதை நான் கேட்பேன்
வாயிருந்தால் கண்டித்திருப்பேன். என் செய்வேன்
மனதில் குமைந்து அழுதிருப்பேன் மௌனமாக.

26. ஆசிரியர் சபாரெட்ணம் அவர் ஒரு கலைப் பொக்கிஷம்
நடமாடும் பல்கலைக்கழகம் என்றால் அது தகுமே.
இலக்கிய பாடத்தை நயம்படக் கற்பித்து
மாணவர் கவனத்தை ஈர்த்துவிடும் பேராசான்.

27. அடக்கமும் அறிவும் கொண்ட ஒரு மேதை - இன்றும்
ஆர்வமோடெழுதிவரும் எழுத்துலகச் சிற்பி
இத்துணை ஆற்றல் பெற்ற ஆசான்கள் சேவையாலே
வளம் பெற்று உயர்ந்திட்ட கலைக்கூடம்.

28. எழுபதுகள் வரை துறவிகள் நிர்வகித்த கல்லூரி - பின்
பொது மகனின் ஆட்சிக்கு வந்ததுவே.
அதிபர் பதவியை அலங்கரித்தார் ரெட்ணராஜா - அவர்
ஆளுமை, உறுதி, கம்பீரம் மிக்க அருந்தலைவர்.

29. வீரநடை போட்டு முன்னேறி வருங்காலை
ஈனர்படையெடுப்பால் காவலூர் நிலைகுலைந்து
மக்கள் இடம் பெயர அருமந்த கல்லூரி அவலமுற்றதையா.
கண்ணீரும் செந்நீரும் ஊற்றிவளர்த்த கலைக்கோயில் சிதைந்ததையோ.

30. சத்தம் சந்தடி மனித நடமாட்டம் இல்லாத
மயான அமைதியிலே காவலூர் கருகியது
தொண்ணூறு முதல் தொண்ணூற்று ஆறுவரை
நானே இவ்விடத்தில் தனித்து தவித்து நின்றேன்

31. அந்தோனியார் ஆலயமும் அருகிலிருந்த கல்லூரியும்
அவலத்தில் சிக்குண்டு ஆவினங்கள் புகலிடமாய்
பாழடைந்து போனகதை யாரோடு சொல்லி அழ
போதாக்குறைக்கு என்னையும் வெட்டி வதைத்தனரே..

32. ஆறு ஆயர்களைத் தந்த நம் கல்லூரி - பேரான
அறிஞர் பலபேரை ஈன்ற நற் கல்லூரி
பிரதம நீதியரசர் சர்வானந்தா போன்றோர்
உருவாகத் துணை செய்த கல்லூரித்தாயிதுவே.

33. நாட்டில் உயர் பதவிகளை நல்ல தொழில் தலைமைகளை
போற்றிடும் நற்பிரசைகளை தோற்றுவித்த தாயிவளே.
சான்றோர்பலரைத் தரணிக்குத் தந்த தரமான கல்லூரி
காவலூர் சிறப்புறவே வழி சமைத்த கலைக்கோயில்.

34. நூற்றாண்டு கண்ட வளமான கல்லூரி
சான்றாக நான் இருக்கிறேன் உயிரோடு
வேரோடு சாயவில்லை என் அருமைச் செல்வங்களே,
பழைய மாணவரே இப்போது நானிருக்கும் நிலைபாரும்.

35. மீண்டும் துளிர்விட்டே வளம் பெற்றுய்திடவே
ஆர்வமுடன் உழைக்கும் அடிகளார் இயேசுதாசனுடன்
இணைந்து கைகொடுத்து மாண்ட பெருமைகளை
மாநிலத்தில் நாட்டிப் புகழ்பரப்ப மனங்கொள்வீர் மக்கள் நீர்.



**காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி முன் நின்ற அந்தோனியன் புளியமரம்**

# கரம்பொனூர்க் கோமான்

**(1972ம் ஆண்டு வெளியான கரம்பொன் பங்கு மலரிலிருந்து எடுக்கப்பட்டது)**



ஈழத் திருநாட்டின் முதல் தமிழ் ஆயர், யாழ் மறை மாவட்டத்தின் முதற் கத்தோலிக்க மேற்றிராணியார் பேரருட்திரு. ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களை ஈன்ற பொன்னாடு கரம்பொன் நாடு. பெற்ற மண்ணுக்குப் பெருஞ் சிறப்பை ஏற்படுத்தி, நாடும் ஏடும் போற்ற நற்பணி ஆற்றி, இராசகுருவாக, திருச்சபையின் இளவரசராக கடந்த 23 ஆண்டுகள் ஆட்சி நடாத்தி, ஒப்பற்ற தலைவராக வாழ்ந்து, சென்ற ஆடித் திங்கள் பதினேழாம் நாள் காத்திராப் பிரகாரமாய் உயிர்துறந்த ஆண்டகை அவர்களை இம்மலரில் நினைவு கூருவது பங்கு மக்களாகிய நம் கடனாகும்.

கரம்பொனூரில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்த திரு. யக்கோப்பிள்ளை என்பவருக்கும் திருமதி ஜே. ஆனாப்பிள்ளை என்பவருக்கும் ஐந்தாவது புதல்வராக 1901ம் ஆண்டு பிறந்தார் எமில். இவரது குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள் பிறந்தனரெனினும் ஆறு பேரே நெடுங்காலம் உயிர் வாழ்ந்தனர். மூவர் குழந்தைப் பருவத்தில் இறந்து விட்டனர். குடும்பத்தில் ஆக இளையவர் காலஞ் சென்ற வண. பீற்றர்பிள்ளை அடிகளார் ஆவார். எமிலுக்கு நேரே மூத்த சகோதரனான ஜே. பெனடிக்ற் என்பவர் வாலிபத்தில் மரண மானார். கிறிஸ்ரியன் பிறதர்மார் சபையைச் சேர்ந்த சங். சகோ. லூக் கிறகரி, வண. கயித்தாம்பிள்ளை அடிகளார், திரு. ஜே. எல். ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் ஆண்டகை அவர்களின் மூத்த சகோதரர் ஆவர். பெற்றோரின் தேவபக்தியும், விசுவாசமும், நன்முன் மாதிரிகையுந்தான் குடும்பத்தில் நால்வரைத் துறவிகள் ஆக்கிற்று எனலாம்.

கரம்பொனூரைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பினும் பிள்ளை அவர்களின் குடும்பம் கொழும்புச் சூழலிலேயே வசித்தது. காரணம் ஆண்டகை அவர்களின் தந்தையார் 'வென்னப்புவா' என்ற இடத்தில் ஒல்லட்டியாவ என்னும் கிராமத்தில் ஆசிரியப்பணி புரிந்தமையே. அதனாற்றான் அவரை 'ஒல்லட்டியாவ உபாத்தியாயர்' என ஊர் மக்கள் அழைத்தனர். வென்னப்புவாவில் இருந்தாலும் உபாத்தியாயர் பிள்ளைகளோடு ஊருக்கு வந்து விடுமுறையைக் கழிப்பது வழக்கம். இவரது மூத்த சகோதரர்களுள் ஒருவரான வண. கயித்தாம்பிள்ளை அடிகளார் அடிக்கடி கரம்பொனூருக்கு வந்து வீட்டிலேயே தங்கி பலி பூசை நிறைவேற்றுவதுமுண்டு. அக்காலத்தில் வீட்டிலே பலி பூசை நிறைவேற்றப் பாக்கியம் பெற்ற இல்லம் கரம்பொன் பாலாவி வீதியிலுள்ள ஒல்லட்டியாவ உபாத்தியாயர் வீடேயாகும். இன்று அந்த வீட்டில் எமில்

ஆண்டகையின் உறவினர் வசித்து வருகிறார்கள். எமில் ஆண்டகையின் சிறிய தந்தையின் மகளும், பேரப்பிள்ளைகளும் இந்த வீட்டின் அயலிலேயே வசிக்கிறார்கள்.

பிள்ளையவர்களதும், பீற்றர் அடிகளாரதும் கொழும்புத் தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அவர்களின் சகோதரர் திரு. ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் இல்லமே மத்திய தலமாயிருந்தது. திறைசேரியில் முக்கிய பதவியை வகித்த இக்கனவான் கொழும்பிலே வசித்தார். இக்கலப்புச் சூழ்நிலைகளின் விளைவாக பிள்ளைச் சகோதரர்கள் சிங்கள மக்களுக்கு மத்தியில் எண்ணற்ற நண்பர்களைப் பெற்றிருந்தது மட்டுமல்லாது, கிணற்றுத் தவளைகளைப் போலல்லாது பரந்து விரிந்த மனப்பாங்குடையவராகவும் விளங்கினர். கொழும்பை வசிப்பிடமாக்கிக் கொண்டாலும், பிறந்த மண்ணான கரம்பொனூருடன் தமக்கிருந்த தொடர்பினை முற்றாக அறுத்துக்கொள்ளவில்லை. தம் சொந்தக் கிராமத்தில் அவர்களது பற்று ஆழமாக வேர்விட்டிருந்தது. தென்னிலங்கையோடு அவர்களுக்கிருந்த தொடர்பும், வெளிநாட்டுப் பயணங்களும், எமிலியானுஸ், பீற்றர் ஆகிய இரு சகோதரர்களிடமும் விரிந்த மனநோக்கையும், ஆழ்ந்த மனிதாபிமான உணர்ச்சியையும் ஏற்படுத்தின.

இத்தகு பண்புகளும் சிறப்பு அம்சங்களும் பெறுதற்கரிய ஆயர் பதவியும், பேரும், புகழும், திறமையும், ஆற்றலும் கொண்ட ஒரு மனிதரை அடைய, பெற்ற மண்ணாகிய கரம்பொனும், அதன் மக்களும் பெரும்பேறு பெற்றவையே. பிள்ளை அவர்களின் குடும்பத்தை இறைவன் எவ்வாறு அலங்கரித்து, கௌரவித்தார் எனில், ஈழத்தில் 20ம் நூற்றாண்டு வரலாற்றில் இத்துணை சிறப்புகள் எய்திய குடும்பம் வேறேதுவும் இல்லை என்று ஒருமனதாய் யாவராலும் பாராட்டப்படும் அருஞ் சிறப்புக்களால் பெருமை கொள்ளச்செய்தார் அன்றோ! மறைந்த ஆயர் ஈழத்தின் முதல் தமிழ் ஆயர் என்ற பெருமை பெற்றார். அவரது சகோதரரான சங். சகோ. லூக் கிறகரி அவர்களே கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் முதல் சுதேச அதிபரும் ஈழத்தில் கிறிஸ்தியன் சகோதர சபையின் சிரேஷ்டரான முதல் இலங்கையரும் ஆவார். கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய முதல் இலங்கையர் வண. பீற்றர்பிள்ளை அடிகளே ஆவார். இவர் தென்கிழக்காசியாவில் தலைசிறந்த கல்விமானும், ஈழத்தின் சிறந்த சிந்தனையாளருமாவார். ஆண்டகையின் சகோதரரான திரு. ஜே. எல். ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் இலங்கை அரசின் நிதி அமைச்சில் ஆலோசகராகவும் உதவிக் கணக்காளராகவும் கடமையாற்றிய முதல் இலங்கையர் ஆவார். பிள்ளையின் பெருமை தாய்க்குப் பெருமையாவது போல இத்தனை சிறப்புக்களையும் கொண்ட பிள்ளையவர்களின் குடும்பம் கரம்பொனூருக்குப் பெருமை அளிப்பதன்றோ!

பேரருட்திரு ஜே. எமிலியானுஸ் ஆண்டகை, 1836ம் ஆண்டில் அடியிடப்பட்ட யாழ். மறை மாவட்டத்தின் எட்டாவது ஆயராவர். அவர் அரசியல் நிபுணரின் ஆழ்ந்த அறிவையும், விமான சாரதியின் இயக்க ஆற்றலையும், எதிர் காலத்தை முன் கூட்டியே தெரிந்து கொள்ளும் இறைவாக்கினரின் நோக்கினையும், நிமித்திகனது வலிமையையும், கைக்கடிகார நிபுணனின் நுண்திறனையும் ஒன்றாய் இணையப் பெற்றவர் என்று ஓர் எழுத்தாளன் விபரிக்கின்றார்.

சிறந்த விவேகமும், கர்வமற்ற ஆளுமையும், ஆர்வமும் அமைதியும் ஒருங்கே கொண்ட சிந்தனையாளர். ஏழ்மையின் சாயல் கொண்ட குருவாகவும் ஆயராகவும் விளங்கியவர். தெய்வ சங்கற்பம் அவரை உயர்ச்சியின் உச்சப்படிக்கு உயர்த்தியது எனலாம். வட இலங்கையின் கத்தோலிக்க மக்களுக்கு உயிரும் ஊட்டமும் கொடுத்த ஜீவநாடி இவர். மனிதரின் உள்ளங்களை ஒரு பார்வையாலே அளந்தறியவல்ல மதியூகி. இனிய வார்த்தைகளைப் பேசி புன்சிரிப்பாலும், நகைச்சுவையாலும் எல்லோர் இதயங்களையும் கவர்ந்த அன்பின் செல்வன் அவர். எதையும் திறம்படத் திட்டமிட்டு நடாத்துவதில் அவருக்கு நிகர் அவரே. இவர் ஆற்றிய பணிகளில் தலை சிறந்தது கல்விப் பணியாகும். யாழ் மறை  மாவட்டத்தின் கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராக அவர் பதவி வகித்த காலத்திலேயே மறை மாவட்டத்தின் மூலைமுடுக்குகள் எங்கும் வன்னிப்பகுதி அடங்கலும் கல்விக்கூடங்கள் தோன்றின. 1960ம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலத்தில் யாழ் மறை மாநிலத்தில் நான்கு பிரபல கல்லூரிகளைத் தாமே நடத்தத் துணிந்தார். கத்தோலிக்க சூழலில் கத்தோலிக்க பிள்ளைகள் கண்காணிக்கப்பட்டு, கல்வியூட்டப்பட வேண்டும் என்ற பெரு நோக்குடனேயே தனியார்துறைப் பாடசாலைகளாக நான்கு கல்லூரிகளைத் தாமே நடாத்தினார். தாம் பிறந்த நாட்டுக்கு அப்பேறு கிடைக்கவேண்டும் எனும் ஆவலால் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியை ஆயர் அவர்கள் தனித்தியங்கச் செய்தார்கள். இவ்வளவு பொருட் செலவில் இப்பெரும் பொறுப்பை நாம் ஏன் சுமக்கவேண்டும் என்பதற்கு அவரது பதில் "இவ்வளவுக்கும் கைமாறாக ஒரு மாணவன் மனந்திரும்பினால் அல்லது ஒரு மாணவனாவது மோட்சம் போவானானால் அதுவே எனக்குத் திருப்தி" என்பதாகும்.

ஆயர் அவர்களின் வாழ்க்கையைப் பின்னோக்கி ஒரு மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒரு பெரிய மெழுகுவர்த்திக்கே அவரது வாழ்க்கையை ஒப்பிடத் தூண்டுகிறது.  மெழுகு சொட்டுச் சொட்டாக உருகத்தானே ஒளி சிந்துகிறது. தன்னை உருக்கியே மெழுகு உலகிற்கு ஒளி கொடுக்கின்றது. அதுபோன்றே அவரது வாழ்க்கையும் இத் தாய்த்திரு நாட்டிற்காக உருகியது. இருபது வருட குருத்துவ வாழ்க்கையிலும், இருபத்து மூன்று வருட ஆயர் பதவியிலும் எல்லாமாக நாற்பத்து மூன்று வருடங்களாக மெழுகு என்ற அவர் உடல் உருகியது. சொட்டுச் சொட்டாக அவர் உருக உருக வட மாநிலமும், வடமாநிலக் கத்தோலிக்க உலகமும் உருப்பெற்றன.

மறைந்த நம் மாண்புமிகு ஆயர் தம் பிறந்தகத்தையும் தம் கண்மணி போல் நேசித்தார். கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தை உருவாக்க அரும்பாடுபட்டவர். மெலிஞ்சிமுனையில் ஒரு பாடசாலை கட்டுவித்ததோடு தனி ஆலயமும் அளித்தவர். பங்கு ஆலயச் சிறப்புக்கு மனம் நிறைந்த ஒப்புதல் அளித்து ஆலோசனையும் நல்கியவர். கரம்பொனூருக்குச் சிறந்த பங்குக் குருமாரை அனுப்பி பங்கின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஆக்கமளித்தவர். பங்கின் சகல முன்னேற்றத்திலும் பங்குகொண்டவர். பங்கு மக்களில் விசேட கரிசனை காட்டியவர். அவரை கரம்பொனூர் எஞ்ஞான்றும் மறவாது. வருடந்தோறும் நினைவுவிழா எடுப்பதோடு அவர் காட்டிய சீர்மிகு வழியில் நடப்பதே நாம் செய்யும் நன்றிக்கடனாகும். ஈழத்திரு நாட்டின் தவப்புதல்வன், கரம்பொனூர்க் கோமான் இன்று எம்முடன் இல்லை. இத் தாய்த்திருநாட்டின் வல்லவர்களுள், வல்லுனர்களுள், நல்லவர்களுள் ஒருவரான ஆண்டகை அவர்கள் இனி வரலாற்றுக்கே சொந்தம்.

## மேற்றிராணித்துவ அபிஷேக வைபவம்

நிகழும் வைகாசி மாதம் 22-ந் திகதி ஞாயிறுவாரம்

— காலை 7-30 மணியளவில் —

யாழ்ப்பாண மேற்றிராணியாராகும்

மகாமேன்மைதங்கிய J. A. கியோமார், O. M. I.

ஆண்டவரவர்கள்

மகாமேன்மைதங்கிய

**ஜே. எமிலியானுஸ்பிள்ளை O. M. I.**

**ஆண்டவர் அவர்களை**

யாழ்ப்பாண மேற்றிராசனத் துணை மேற்றிராணியாராக

அபிஷேகம் செய்து வைப்பார்.

அத்தருணம் துணைமேற்றிராணியாரின் அன்பரும்,

அபிமானிகளும் சமுகந்தருமாறு மகிழ்வுடன்

அழைக்கப்படுகின்றனர்

*சத்தியவேத பாதுகாவலன் - 05.051949*

வெள்ளிவிழா நாயகன், காவலூர் மண்ணின் மைந்தன்

# தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

(யாழ் ஆயரின் வெள்ளிவிழா பாதுகாவலன் சிறப்பு மலர் - **01.08.2006**)

### யாழ் மறைமாவட்டத்தின் மூன்றாவது சுதேச ஆயர்



யாழ் மறைமாவட்டத்தை அலங்கரித்த சுதேச ஆயர்களின் வரிசையில் மூன்றாவது ஆயராக தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விளங்குகின்றார். அவரைத் திருச்சபைக்குத் தந்தது ஊர்காவலராகும். காவலூர் அதாவது ஊர்காவற்றுறைப்பங்கு இரண்டு ஆயர்களை உருவாக்கியுள்ளது. யாழ் ஆயர் ஒருவர், மற்றவர் இன்றைய திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆவார். இவர் புனித மரியாள் ஆலயத்தைச் சேர்ந்தவர்.

### காவலூர் உதய திசையைத் தாயகமாகக் கொண்டவர்

வெள்ளிவிழாக்காணும் நம் ஆயர் சவுந்தரநாயகம் காவலூர் உதய திசையைத் தாயக மாகக் கொண்டவர். வரலாற்றுப் பழமை மிக்க காவலூர் புனித அந்தோனியார் ஆலயத் தைச் சேர்ந்தவர் நம் ஆயர். நான்கு ஆலயங்கள் அணி செய்யும் ஊர்காவற்றுறைப் பங்கில் புனித அந்தோனியார் ஆலயம் 185 ஆண்டுகள் பழமையானது என வரலாறு கூறுகிறது. இவ் ஆலய மக்கள் வேதசாட்சிகளின் இரத்தத்தினால் புனிதமாக்கப்பட்ட மன்னார் மாந்தைப் பிரதேசத்துக்கு உரித்துடையவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். மன்னாரிலிருந்து குடிபெயர்ந்து லைடன் தீவில் உள்ள சாட்டிப் பிரதேசத்தில் குடியேறி அங்கிருந்து ஊர்காவற்றுறை உதய திசையில் குடியமர்ந்தனர் என காலஞ் சென்ற காவ லூர் கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்கள் சாட்டி மாதா ஆலய வரலாற்றில் குறிப்பிட் டுள்ளமை நோக்கற்பாலது. இவ்வாறு பூர்வீகச் சிறப்புடைய காவலூர் உதய திசையில் இறைபக்தியும் ஒழுக்க சீலமும் ஒருங்கே அமையப்பெற்ற வரப்பிரகாசம் சவிரியாச்சி தம்பதிகளின் மகனாக உதித்தவர் தான் ஆயர் சவுந்தரநாயகம். இவருக்கு சகோதரிகள் இருவர் உளர். அவர்களுள் இளைய சகோதரி இந்திராவும் தாயாரும் 1964ம் ஆண்டு மிரிகமையில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் காலமானார்கள். மூத்த சகோதரி திருமதி பொஞ்சீன் தம்பு அவர்கள் அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

### பங்குத்தந்தையாக பிலிப் பொன்னையா அடிகள்

ஆயர் அவர்கள் 13.07.1938ம் ஆண்டு பிறந்தார். தவப்பயனாய் உதித்த மைந்தன் சவுந்தர நாயகம் இளமையிலே இறைபக்தியும் ஒழுக்கசீலமும் மிக்கவராய் விளங்கினார். ஆரம் பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தமிழ்ப் பாடசாலையிலும் பின்னர்

புனித அந்தோனியார் கல்லூரியிலும் பயின்று வந்தார். ஊர்காவற்றுறை பங்குத்தந்தை யாகவிருந்த வண. பிலிப் பொன்னையா அடிகளாரின் காலத்தில் சிறுவன் சவுந்தர நாயகம் பூசைப் பரிசாரகனாகப் பணியாற்றுவது வழக்கம். இவரது குணவியல்புகள் பக்தி, இறையன்பு, ஒழுக்கம் என்னும் பண்புகள் பங்குத்தந்தையைக் கவர்ந்தன. சிறுவனின் போக்கு அவரது கருத்தைக் கவரவே இவரைக் குருவாக்கும்படி ஒரு ஆர்வத்தையும் தூண்டுதலையும் இவரது உள்ளத்தில் விதைத்தார். இவருக்கு தேவ அழைத்தல் இருந்த காரணத்தால் பெற்றோர் மனமுவந்து இவரை யாழ் புனித மாட்டீன் குருமடத்தில் சேர்த்தனர். 1956ம் ஆண்டு வரை குருமாணவனாக புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார்.

**1963ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்**

1957ம் ஆண்டு கண்டி தேசிய குருமடத்தில் சேர்ந்து குருத்துவக் கல்வியைத் தொடர்ந் தார். 21.12.1963ம் ஆண்டு யாழ் ஆசனக்கோவிலில் முன்னாள் ஆயர் யே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பெங்களூரில் வேதசாஸ்திரம் இறையியல் கல்வி கற்று பின்னர் 26.05.1981 உரோமபுரியில் ஊர்பனில் உள்ள பாப்பரசரின் பல்கலைக்கழகத்தில் வேதாகமத் துறையில் வேதபாரகர் எனும் கலா நிதிப் பட்டம் பெற்றார். இதற்கிடையில் 1964 முதல் 1980 வரை யாழ் மறைமாவட்டத்தில் பற்பல பங்குத்தளங்களில் பணியாற்றினார். சில ஆண்டுகள் யாழ் மறைக் கல்வி இயக்குனராகவும் பணியாற்றினார் எனத் தெரிய வருகின்றது.

**மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயர்.**

யாழ் மறைமாவட்டத்தின் அங்கமாயிருந்த மன்னார் பிரதேசம் தனி மாவட்டமாகப் பிர கடனப்படுத்தப்பட்டதன் காரணமாக அந்த மறைமாவட்டத்தின் ஆளுகைக்காக அதன் முதல் ஆயராக வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் நியமனம் பெற்றார். இப்பிரகடனம் 24.01.1981ல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இப்பிரகடனம் காவ லூர் பங்கு மக்களை குறிப்பாக புனித அந்தோனியார் ஆலய மக்களை பரவசத்தில் ஆழ் த்தியது எனலாம். ஆயர் திருநிலைப்படுத்தலுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. 30.07.1981ல் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் பெரியமடு மாதா ஆலயத் திருப்பதியில் முன்னாள் யாழ் ஆயர் தலைமையில் இலங்கையின் ஏனைய ஆயர்கள் முன்னிலையில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மருத மடுத் திருத்தலத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு இது என்று குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஆயர் சவுந்தரநாயகம் அவர்கள் 02.08.1981ல் மன்னார் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றார். வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் உதயதிசை வாழ் மக்களின் பூர்வீகம் மன்னாருடன் தொடர்புபட்டிருந்தது என்பதை முன்னர் பார்த்தோம். பூர்வீகத் தாயகத்துக்கு அந்த மண்ணின் மரபுவழி மைந்தன் ஆயராக

வந்தமை ஒரு வரலாற்று நிகழ்வேயாகும். புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தின் ஆன்மீகத்தையும் உட்கட்டமைப்பையும் பௌதீக வளங்களையும் குருக்கள், கன்னியர்கள், துறவிகள் உட்பட அனைவரது பரிபாலனத்தையும் திட்டமிடல், சீரமைத்தல், நவீன மயப்படுத்தல் அதற்கான வளங்களைத் தேடுதல், உள்ள வளங்களை அபிவிருத்தி செய்தல், பங்குத் தளங்ளை புனரமைத்தல், மக்கள் தேவைகளை இயன்றளவு நிறைவு செய்தல் மனிதநேயப் பணிகளை முன்னெடுத்தல், நிருவகித்தல் போன்ற பணிகளை முன்னெடுக்க வேண்டிய தேவையை எதிர்கொள்ள வேண்டிய வராய் இருந்தார். மடுத் திருப்பதியும் மன்னார் மறை மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது திருத்தலத்தை அதன் சிறப்புக் குன்றாது பாதுகாத்து தேவைகளை இனங்கண்டு செவ்வனே பரிபாலிப்பது மகத்தான பணியாகும். தேவைகளை வரையறை செய்து மறை மாவட்டத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் காத்திரமான பணியாகும். மறை மாவட்டத்துக்கென ஒரு குருத்துவக் கல்லூரிக்கு ஆரம்ப முன் முயற்சிகள் இவரது காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

1983ல் நாட்டில் நிகழ்ந்த இனக் கலவரத்துக்கும் ஆயர் அவர்கள் முகம் கொடுத்து பாதிக் கப்பட்ட மக்களின் நலன்களில் மிகுந்த அக்கறை காட்டியவர். இவ்வாறு புதிய மறை மாவட்டத்தை நிருவகிப்பதிலும் அதைச் சீரமைப்பதிலும் தேவைகளை இனங்கண்டு அவற்றை செப்பமுற ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதிலும் அயராது உழைத்தார்.

**யாழ் மறைமாவட்டத்தின் பத்தாவது ஆயராக**

முன்னாள் யாழ் ஆயரின் வயோதிபம் உடல்நிலை காரணமாக அவர் ஓய்வுபெறத் தீர் மானித்தார். இந்த நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்ப ஆயர் சவுந்தரநாயகம் அவர்களே பொருத்தமானவராகக் காணப்பட்டார். அதன் காரணமாக யாழ் மறை மாவட்ட ஆயராக திருத்தந்தை அருளப்பர் சின்னப்பர் ஆயர் சவுந்தரநாயகம் அவர்களை 8.8.1992ல் பிரகடனப்படுத்தினார். 5.11.1992ல் ஆயர் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றார். யாழ் மரியன்னை பேராலயத்தில் திரளான குடாநாட்டு மக்கள் முன்னிலையில் பதவி ஏற்பு வைபவம் இடம்பெற்றமை நினைவு கூரத்தக்கது. கடந்த 14 ஆண்டுகளாக முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களின் அடிச்சுவட்டில் அவர் விட்டுச்சென்ற பணிகளையும் அவர் தொடக்கிவைத்த பணிகளை யும் முன்னெடுப்பதில் ஆர்வத்தோடு உழைத்தார். மலர்ந்த முகத்துடன் கனிவாகப் பேசி காரியமாற்றும் ஆற்றல் இவரிடம் வெளிப்பட்டது. துரதிஷ்டவசமாக நாட்டில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மறைமாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1995-1996களில் நிகழ்ந்த அவலங்கள் குடாநாட்டு மக்களை வன்னிக்கும் மற்றும் தென் பிரதேசங்களுக்கும் இடம்பெயரச்செய்தது. இந்த நிகழ்வு ஆயர் குருக்கள் துறவிகள் பங்குத்தந்தையர்கள் பங்கு மக்கள் அனைவரையும் இடம் பெயரச் செய்தது. ஆயர் இல்லம் மற்றும் நிருவாக இயந்திரமே செயல் இழந்தது.

குருத்துவக் கல்லூரி மாணவர்கள் பாதிப்புற்றனர். துறவற சபைகள் ஆலயங்கள் திருச்சபைச் சொத்துக்கள் யாவும் அழிவுற்றன, சேதமாக்கப்பட்டன, சூறையாடப்பட்டன. எல்லா அனர்த்தங்களையும் எழுத முடியாது. இடப்பெயர்வின்போது காப்பாற்ற முடிந்தவற்றை எடுத்துக்கொண்டு கிளிநொச்சி வவுனியா மடுத்திருப்பதி முதலான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். அனைத்து மேய்ப்புப்பணியாளர்களையும் நகர்த்த முடிந்த சொத்துக்களையும் முடியுமானவரை பாதுகாத்து சேமமுற நிலைப்பித்த பெருமை ஆயர் சவுந்தரநாயகத்துக்கே உரியதாகும். தளராது மன உறுதியுடன் பிரச்சினைகளை எதிர்கொண்டு நிலைமைகளைச் சமாளித்தார். தென்னிலங்கை ஆயர்கள், நலன்விரும்பிகள், பரோபகாரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மனிதநேய உதவிகளைப் பெற்று 1997ல் மீண்டும் யாழ் நகர் திரும்பி அனைத்துப் பணிகளையும் மறுசீரமைத்து தற்போதைய நிலைக்கு யாழ் மறை மாவட்டத்தைக் கொண்டு வந்த பெருமை ஆயர் சவுந்தரநாயகம் அவர்களுக்கே உரியதாகும்.

மறைமாவட்ட பாடசாலைகளின் புனரமைப்பு, சிதைவுற்ற பங்கு ஆலயங்களின் மறு சீரமைப்பு, வழிபாட்டுத் தலங்களின் புனர் நிர்மாணம் உட்பட்ட திருச்சபையின் தேவைகளை இனங்கண்டு அனைத்தையும் செயலாற்றச் செய்வதென்பது மகத்தான பணி என்றால் மிகையில்லை. நொடிந்துபோன பாதிப்புக்கு இலக்கான கன்னியர் மடங்கள், கருமபீடங்கள், வயோதிபர் இல்லம் மற்றும் மனிதநேயப் பணிமனைகளுடன் புனிதவளன் அச்சகம், மறைக்கல்வி நடுநிலையம், ஆயர் இல்லம், திருமறைக் கலா மன்றம் யாவுமே மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்பிச் செயற்படுமுகமாக புனரமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

### தமிழ் மக்களின் உரிமைக்கு குரல்கொடுத்தவர்

சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி யாழ் மறைமாவட்டம் நவீனமயப்பட்டு வருவதைக் காணலாம். இதேவேளை யாழ் ஆயர் அவர்கள் தமது முன்னோடியைப் போல சமாதானத்துக்காகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கத் தவறவில்லை. தமிழ் மக்களுக்கு இடர், இன்னல், பாதிப்புக்கள் ஏற்படும் போதெல்லாம் தமது தார்மீகக் கடனை உணர்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கப் பின்னிற்கவில்லை. வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அவ்வப்போது செவ்வி கொடுத்து நிலைமைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். சொல்லவேண்டுயதை நியாயமெனப்பட்டதை தெளிவாகக்கூறி வருகின்றார். தம் தாயகத்தின் தேவைகளையும் ஆயர் மிகுந்த ஆர்வத்துடன் கவனிக்கத் தவறவில்லை. அவர் வழியாக இரு மறை மாவட்டங்களும் பெற்றுக்கொண்ட இகபர நன்மைகளுக்காக இறைவனைப் புகழ் வோமாக.

தமிழுக்கும் திருமறைக்கும் அருந்தொண்டாற்றிய புலவர்

# காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா

***(முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி 10.06.1988 இல் சத்தியவேத பாதுகாவலனில் இக்கட்டுரை வெளியிடப்பட்டது)***



ஈழத்தமிழ்க் கத்தோலிக்க எழுத்தாளரில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் தனது எழுத் தாற்றலால் அரும்பணி ஆற்றிய புலவரான காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்கள். 1914ம் ஆண்டு காவலூர் உதய திசையில் பிறந்தவரான இவர் மாணவராய் இருந்தபோதே கவியாற்றல் பெற்றிருந்தார். சொல்நயமும் ஓசைநயமும் மிக்க கவிதைகளை எழுதி மதுரகவி எனப் பாராட்டுப் பெற்றவர். புனித சூசையப்பர் சபைத் துறைவிகளிடம் கல்வி பயின்றமையால் தமிழ் அறிவு நிரம்பப்பெற்றவர். தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற பேராசானாய் விளங்கிய காலஞ்சென்ற S. சைமன் பிறதரிடம் தமிழ் கற்றுப் பா எழுதப் பயிற்சியும் பெற்றார். இலக்கண இலக்கியங்களிற் பாண்டித்தியம் பெற்றுச் சொல்வளம் பொருள்வளம் மிக்கவராக விளங்கினார்.

புலவரவர்கள் 19 வயதிலேயே கவிபாடும் வரம் பெற்றுவிட்டார் எனலாம். கவிதை எழுதுவதில் அருட்சகோதரர் S. சைமன் அவர்கள் மாணவன் செல்வராசாவை ஊக்கப்படு த்தி வந்தார். வளர்பிறை போல் அவரது கவியாற்றல் வளரத் தொடங்கியது. புனித அந்தோனியார் கல்லூரியில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பலவற்றையும் எழுதினார். முதன் முதலில் யேசுவின் பாடுகள் பற்றிய ஒப்பாரி ஒன்றைப் பாடினார். ‘சிந்தாகுலமாலை’ என்ற இந்த ஒப்பாரி நூலே இவரது முதல் நூலாகும். புலவரவர்கள் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியுள்ளார். அவர் கவி எழுதுவதில் மாத்திரமல்ல வரலாற்றிலும் ஆர்வம் மிக்கவர். பண்டைய கிறிஸ்தவர்களின் வரலாற்றை, மன்னார், யாழ்ப்பாணம், மாதோட்டப் பகுதிகளில் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால திருமறை வரலாறுகளை ஆராய்ந்து பார்த்தவர். யாழ் புதுமை மாதா ஆலய வரலாறு, சாட்டி சிந்தாத்திரை மாதா வரலாறு என்பவற்றை எழுதினார். சதாசகாய மாதாவின் மன்றாட்டு மாலையை இயற்றினார். அண்மையில் கரம்பொன் வேளாங்கண்ணி மாதா ஆலய வரலாற்றையும் எழுதினார். தென்மோடி நாட்டுக்கூத்தில் ஆர்வங்கொண்டு தீந்தமிழ்க் கவி ஆற்றலை வெளிக்காட்டி பல நாடகங்களை எழுதினார். தமிழரின் அழியாத கலையாகத் திகழும் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிர் கொடுத்த நற்றமிழ்க் கவிஞர் ஞானசவுந்தரி, புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து புனித அந்தோனியார் நாட்டுக்கூத்து, புனித ஜேம்ஸ் நாட்டுக்கூத்து, பண்டாரவன்னியன் முதலிய பல நாடகங்களை இயற்றிப் புகழ் பெற்றார். இவற்றுள் ஞானசவுந்தரி, பண்டாரவன்னியன் இரண்டும் பலமுறை

மேடையேற்றப்பட்டு அவருக்கு அழியாப் புகழை ஈட்டித்தந்தன. கோவில்களிற் பாடப்படும் திரை விருத்தங்கள், தேவாரங்கள் பலவற்றையும் எழுதிக் கொடுத்தார். இவர் எழுதிய ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து நூலுருவில் வெளியிடப்பட்டது. இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் இவர் எழுதிய கல்லறைக் கண்ணீர் என்ற நூல் கிறீஸ்து பெருமானின் பாடுகளை உருக்கமாக விபரிக்கின்றன. ஒப்பாரி, புலம்பல், அம்மானை என்ற கவிதை வடிவங்களில் அவை தவக்காலத்திலும் மரணச் சடங்குகளிலும் பாடப்பட்டு வருகின்றன. சத்தியவேத பாதுகாவலனிலும் பல கவிதைகளையும், கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதியுள்ளார். 'டோறாச்சுவாமியாரும் மாட்டு வண்டியும்', என்னும் கட்டுரை சில ஆண்டுகளுக்கு முன் காவலனில் வந்தது பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

இவரது அந்திம காலத்தில் 1983 இல் இவர் எழுதிய 'பனை நாடகம்' என்னும் நாட்டுக் கூத்து நாடகம் கையெழுத்துப் பிரதியாக பனைவளப் பகுதியினரிடம் உள்ளது என அறிகிறோம். அது நூலுருப் பெறாமலும் மேடையேற்றப்படாமலும் இருப்பது பெருங் குறையாகும். பனைவளப்பகுதியினர் இனியாவது ஆவன செய்வார்களா? தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் அளப்பெரும் பணியாற்றிய புலவர் வறுமையில் வாடினார். நோயுற்ற இவர் கொழும்புத்துறை புனித வளன் வயோதிபர் இல்லத்திற் சில காலம் இருந்து தமது 73வது வயதில் 1987 ஆனி மாதம் 16 ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். காவலூர் ஒரு கவிஞனை இழந்தது. உதயதிசை ஒரு விடிவெள்ளியை இழந்தது. தமிழ் கூறும் நல்லுலகம் முதுபெரும் பாவலனை இழந்தது. அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திப்போமாக. அவரது படைப்புக்களை அழியவிடாது பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினரும் இந்த அருங்கலைஞனை அறிந்து போற்ற வழிசமைப்பது எம் கடனே.இதுவே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

## புனித அந்தோனியார் கல்லூரியில்
## காவலூர் கவிஞரின் உருவப்படம்

"பாட்டுத் திறத்தாலே பிறந்த மண்ணுக்கும், தமிழ் மொழிக்கும், கத்தோலிக்க திருமறைக்கும் புகழ்தேடித் தந்த பெரும் புலவர் காலஞ் சென்ற காவலூர்க் கவிஞர்" இவ்வாறு ஊர்காவற்றுறைப் பாடசாலைகளின் கொத்தணி அதிபரும், புனித அந்தோனியார் கல்லூரி அதிபருமான திரு S. A. E. ரெட்ணராஜா அவர்கள் கவிஞரின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

16-6-88 அன்று கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்களின் மறைவின் முதல் ஆண்டு நினைவுதினம் ஊர்காவற்றுறை றோ. க. தமிழ் ஆண்கள் பாடசாலையில் கொண்டாடப்பட்டது. பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் ஒழுங்கு செய்த இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக வருகைதந்த திரு. ரெட்ணராஜா அவர்கள் கவிஞரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்து மாலை அணிவித்தார். முதலில் கவிஞரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

"சிறந்த ஒரு கவிஞரை உருவாக்கியது இப்பாடசாலை. இதன் பழைய மாணவனாகிய இக் கவிஞர் இந்தப்பாடசாலைக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்தவர். அவரை உருவாக்கிய புனித சூசையப்பர் சபைத் துறவிகளுக்கும் பெருமை தேடித்தந்தவர். கவி வளம் மிக்க மதுரதமிழ்க் கவிஞர் இவர். மங்கிப்போன தமிழரின் பண்டைய கலையான நாட்டுக்கூத்துக்குப் புத்துயிர் அளித்த புலவர். எனவே, அவரது நினைவாக இப்பாடசாலையில் அன்னாரின் உருவப்படத்தைத்தாபித்து அவரைக் கௌரவிப்பது எமது கடமையாகும்" இவ்வாறு மேற்படி பாடசாலையின் ஆசிரியரும் புலவர் அவர்களுடன் நீண்டகால நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்தவருமான திரு. எஸ். எம். யோசெவ் அவர்கள் தமது இரங்கல் உரையில் கூறினர். வேறு பலரும் இவ் விழாவில் உரை நிகழ்த்தினர்

தகவல்
S. M. யோசெவ்

*சத்திய வேத பாதுகாவலன் 24-06-1988*

# சம்மனசுச் சுவாமியார்

**(சத்தியவேத பாதுகாவலனில் 1972ம் ஆண்டு பங்குனி மாதம் 04,11,18 ஆகிய திகதிகளில் தொடச்சியாகப் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை)**

**(நம் ஈழநாட்டுக்கு எத்தனையோ ஐரோப்பிய குருமார் திருமறைத் தொண்டாற்ற வந்து ஈடிணையற்ற மறைத்தொண்டும், பொதுநலப் பணிகளும் ஆற்றி, தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகஞ்செய்தனர். குருத்துவ அழைத்தலுக்குப் பிரமாணிக்கமாகத் தொண்டாற்றிய தியாக சீலர்களில் ஒருவரது வரலாறு தான் இது)**

### தோற்றம்

இத்தாலி தேசத்தில் ரோடி என்னும் ஊரில் நீதிபதியாய் விளங்கிய விஸ்திரீனி என்னும் பிரபு சிஞ்ஞோறா கமில்லா என்னும் சீமாட்டியை மணந்து இல்லறம் இனிதே நடாத்தினர். அவர்கள் புத்திரப்பேறு இல்லாமல் எட்டு ஆண்டுகள் அருந்தவ மியற்றியதன் பயனாக 1817ம் ஆண்டு சிஞ்ஞோறா கமில்லா ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். பெற்றோர் இத்தவப் புதல்வனுக்கு யோவானி வத்திஸ்தா விஸ்திரீனி என்னும் நாமஞ்சூட்டி, பேரன்புடன் வளர்த்து வரலாயினர்.

### குருத்துவ அழைத்தல்

குழந்தை வளரும் பொழுதே தெய்வசிந்தையும், பிறரன்பும், தவப்போக்கும் கூட வளரத் தொடங்கின. வயதில் வளர வளர அவர் இறையன்பில் வளரலானார். வாரத்தில் புதன் வெள்ளி, சனிக்கிழமைகளில் அவர் பழவர்க்கம் எதுவும் புசியாது விரதம் அனுட்டிப்பா ரெனில், அவரது தவப்போக்கு வெள்ளிடை மலை. பாலியனது தேவபக்தியையும், சீரிய ஒழுக்கத்தையும் கண்ணுற்ற பெற்றோர், அவரை இறைபணியில் அர்ப்பணிக்க எண்ணி லொம்பாடி மாகாணத்திலுள்ள குருமடத்துக்கு அனுப்பிவைத்தனர். ஜோண் விஸ்திரீனி குருமடத்தில் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து, அவரது 23வது வயதில் 1840ம் வருடம் கயித்தானு பெகினியார் என்னும் மேற்றிராணியாரால் குருத்துவ அபிஷேகம் செய்யப் பெற்றார்.

### முதற்சேவை

மேற்றிராணி ஆண்டகையின் கட்டளைப்படி வண. ஜோண் விஸ்திரீனி அடிகளார் முதலில் வெனிஸ் பட்டினத்திலுள்ள மனநோயாளர் மட அதிபராய் கடமை ஏற்றார். பயித்தியர் மடம் என்றால் எவ்வாறான சூழ்நிலை என்று சிந்தித்தாலே உள்ளம் நெகிழும். அவர் அங்கு அனுபவித்த இன்னல்களும், இம்சைகளும் அளவில்லை. பயித்தியம் பிடித்தவர்கள் தம் மனம்போன போக்கில் செய்யும் அட்டூழியங்கள் கணக்கில. எத்தனையோ துன்பங்களை இன்முகத்தோடு ஏற்று நல் மனதோடு சகித்தார்.

அனுபவித்த துன்பமெல்லாம் இறைவனின் அன்புக்காக ஏற்றார். தாம்பட்ட இன்னல் எல்லாம் இறைவனுக்கர்ப்பணித்து, தீராத நோயாளிகளுக்கு நவநாட் செபஞ்செய்து அற்புதமாய்க் குணமளிப்பார்.

### இலங்கைக்கு வருதல்

வண. விஸ்திரீனி அடிகளாரின் ஆற்றலையும், சேவை நலத்தையும் அறிந்த பாப்பிறை 9ம் பத்திநாதர் அவரை 1846ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பச் சித்தமானார். பெரு மகிழ்ச்சியுடன் பரி. தந்தையின் உத்தரவுக்குப் பணிந்து இலங்கைக்குப் புறப்பட்டார். காலி நகரை அடைந்த விஸ்திரீனி அடிகளார் கயித்தானோ அந்தோனியோ என்னும் மேற்றிராணியாருடன் தங்கிப் பின் யாழ்ப்பாணம் வந்து பெத்தக்கீனி ஆண்டகையின் கீழ் திருப்பணி செய்து வரலாயினார். பெத்தக்கீனி ஆண்டகையைத் தொடர்ந்து செமேரியா ஆண்டகையின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலும், பின்னர் திருகோண மலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மாதோட்டத்திலும், ஈற்றில் நீர்கொழும்பிலும் பணியாற்றினார்.

### யாழ்ப்பாணத் திருத்தொண்டு

யாழ்ப்பாணத்திலும், தீவுப்பற்றிலும் 11 ஆண்டுகள் சுவாமியவர்கள் அருந்தொண்டாற் றினார். மாதகல், ஊர்காவற்றுறை, கரம்பொன், நெடுந்தீவு, இரணைதீவு முதலாம் விசாரணைப் பங்குகளில் சுவாமிகள் கடமை ஆற்றினார். ஊர்காவற்றுறையில் திருத் தொண்டாற்றிய காலத்தில் லைடன்தீவு முழுவதையும் பரிபாலித்து, வேதபோதகஞ் செய்து வந்தார். தூர இடங்களுக்கெல்லாம் கால்நடையாகவே சென்று வருவார். 1854ம் ஆண்டு காவலூரில் பெரும் பேதிநோய் பரவி ஆயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள். அக்காலத்தில் சம்மனசுச் சுவாமியார் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. சுவாமிகள் கரம்பொன், ஊர்காவற்றுறை முதலாம் ஊர்கள் தோறும் சென்று வருந்தியவருக்கு வலக்கரமாய் நின்று பேருதவி செய்தார். வீடுவீடாகச் சென்று பாவசங்கீத்தனத்துடன், தேவநற்கருணையும் அருளிவந்தார். உயிர் குடிக்கும் இத் தொற்று நோய்க்கு அஞ்சாது, தமது உயிரைத் துச்சமாக மதித்து, வெளியிலே தங்கி இரவு பகல் பாராது எளியவர்க்குதவுவார். எங்காவது ஒருவர் தேடுவாரற்று வீதியிலோ வேலிக்கரையிலோ இறந்துகிடந்தால் சீடனோடு அவ்விடம் விரைந்து, இறந்தவர் உடலைத் தமது வண்டியில் ஏற்றிப் பக்குவமாய் அடக்கம் செய்வார். சாதித்திமிர் தலை விரித்தாடிய அக்காலத்தில் எளியவரென்று ஒதுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்குத் துணிவோடு இரக்கங்காட்டி இயன்ற பல சேவைகள் ஆற்றினார். எண்ண முடியாத உப காரங்களை இட்டமுடன் செய்து பெருந் தொண்டாற்றினார்.

## காவலூரில் அற்புதம்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய குருமனையில் உறக்கத்தில் இருக்கும் போது பசாசு அவரைச் சோதிக்க எண்ணி நள்ளிரவில் அவரிடஞ்சென்று அவஸ்தை என்று அலறியது. பசாசு தான் தன்னைத் துயில் எழுப்பியது என்றறிந்த அடிகளார் திருச் சிலுவையைக் காட்டிச் சாத்தானை விரட்டிவிட்டார். அது ஊழையிட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தது. பேயின் அலறல் கேட்டு அயலில் இருந்த சனங்கள் குருமனைக்குச் சென்று விசாரித்தபோது அவர் நடந்ததைக் கூறி அவர்களை அனுப்பினார். வேறோரு சமயம் சுவாமிகள் செபித்துக் கொண்டிருக்கையில் நாகபாம்பொன்று அவரது வலக் காலால் தலை மட்டும் ஏறிச் சினந்து சீறியது. அவ்வமயம் அகன்று போ சாத்தானே என்று அதை அவர் கையால் தட்டிவிட அது ஓடி மறைந்தது.

## நீர்கொழும்பில் இறைபணி

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு முதலாம் இடங்களில் திருப் பணி ஆற்றிய பின், யாழ் ஆயர் ஆணைக்குப் பணிந்து நீர்கொழும்புக்கேகித் தமது இறுதிக் காலம் வரை அங்கு இணையற்ற இறைபணி ஆற்றலானார்.

1856ம் ஆண்டு நீர்கொழும்பு சென்ற சம்மனசுச் சுவாமியார் பிற்றிப்பனைத்தீவு, பெரிய முறுத்தானை, கெந்தமிளை**,** தம்பற்றை, கொச்சிக்கடை, தோப்பு, பலகத்துறை, பெரியா மூலை, மேற்கடற்கரைத் தெரு முதலாம் பங்குகளில் அயராது அரும்பணி ஆற்றினார். நீர்கொழும்புப் பகுதியில் சுமார் 37 ஆண்டுகள் திருமறைத் தொண்டுகள் ஆற்றிய சுவாமிகளின் சேவைகள் விபரிக்கின் மிகும். எங்கு சென்றாலும் எல்லையற்ற நன்மைகளை இடையறாது செய்து வந்தார். நீர்கொழும்புப் பிரதான வீதி ஆலயத்தில் பங்குக் குரவராய் இருந்தபோது முதல் ஓராண்டு காலத்தில் ஆண்களுக்குப் பாடசாலை ஒன்றும், பின் நாலு வருடங்களில் பெண்களுக்கோர் பாடசாலையும் அமைத்துக் கொடுத்தார். அவர் நீர்கொழும்பில் செய்த கணக்கற்ற நன்மைகளுள் எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவது நலம்.

ஒரு பெண்ணை வாழ வைப்பதற்காகத் தமது மாட்டுவண்டியை விற்று உதவினார். நீர்கொழும்புப் பெரியதெரு வாசிகளான இரு குரு மாணவர்களை குருத்துவக் கல்வி க்காக றோமாபுரி அனுப்பும் பொருட்டு செலவுக்காக தமது சொந்தக் குதிரைவண்டி யையே விற்றார். இப்படியே அவரது கைம்மாறு கருதாத, தன்னலமறுப்பான தியாகங் கள் பல சொல்லில் அடங்கா. பக்திச்சபைகள் பலவற்றை ஆரம்பித்து விசுவாசிகளுக்கு ஆன்ம வாஞ்சையும், இறைபணியில் நாட்டத்தையும், ஆர்வத்தையும் வளர்த்தார். உத்தரிப்புத்தல ஆத்துமங்களுக்காக செபிக்கும் சபையும், நன்மரணச் சபையும் சுவாமிகளால் அடியிடப்பட்ட பக்திச்சபைகளில் குறிப்பிடத்தக்கவை.

**சமூக சேவையும் பிறர் அன்பும்**

ஆன்மீகப் பணியோடு சமூகப் பணிகளிலும், பொதுநல சேவையிலும் அதிக அக்கறை காட்டியவர் சுவாமிகள். அவர் நீர்கொழும்பில் ஆற்றிய பொதுநலப் பணிகள் குறிப்பிடற் குரியவை. ஆபத்து வேளைகளில் அண்டி வந்தவர்களையும், நோயால் வருந்தியவர் களையும் சுவாமியவர்கள் ஆதரித்து உதவி செய்வார். 1867ம் ஆண்டு நீர்கொழும்பில் பெரும் பஞ்சமேற்பட்டது. அப்பொழுது கடைகளில் பொருள்கள் பதுக்கப்பட்டன, உணவுத் தட்டுப்பாடு தாண்டவமாடியது. மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஏழைகள் பட்ட இன்னல்கள் சுவாமியவர்களை நெஞ்சுருகச் செய்தது. அடிகளார் தாமே கொழும்பு சென்று தேசாதிபதியிடம் முறையிட்டு கடைகள் தோறுஞ் சென்று உணவுப் பொருட்களை வாங்கி வந்து வறிய சனங்களுக்கு உதவி அவர்கள் பசி போக்கினார்.

1875ம் ஆண்டு மீண்டும் கடும் பஞ்சம் தலைகாட்டியது. அயல் ஊர்களிலுள்ள கொள்ளைக்காரர் தங்கள் கடைகளையும், வீடுகளையும் கொள்ளையடிப்பர் என்று நீர்கொழும்பு வாசிகள் மிகவும் பயந்திருந்தனர். அச்சம் மேலிட்ட மக்கள் பங்குக்குரவ ரிடம் வந்து முறையிட்டனர். கொள்ளைக்காரரும் வந்தனர். அடிகளார் தமது ஊன்று கோலுடன் கொள்ளைக்காரர் முன் அஞ்சாமற் சென்றார். அவர்களோ அவரைக் கண்டதும் பயந்து ஓட்டம் பிடித்தனர்.

வேறோர் சமயம் நீர்கொழும்பில் விஷபேதி பரவி அநேகர் இறந்தனர். செல்வந்தர்கள் ஊரை விட்டு வீடுவாசல், பொருள் பண்டம், தோட்டம், சம்பாத்தியம் யாவையும் விட்டு விட்டு அயல் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், வறியவர்களும், வசதியற்றவர் களும் பசியாலும், நோயாலும் வருந்தினர். சற்குருவே அவர்களிடர் தீர்த்து ஆறுதல் அளித்து வந்தார். ஏழைகளைத்தேடி ஊணும் உடையும் கொடுத்து, மருந்துமளித்து நோயும், பிணியும், பசியும் போக்கினார். ஒரு நாள் ஏழை முஸ்லிம் ஒருவர் தெருவோர த்தில் நோயால் வருந்துவதைக்கண்ட சுவாமிகள் அந்த நோயாளியை வண்டியொன்றில் ஏற்றி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று ஆன உதவி செய்து திருமறை விளக்கமும் கற்றுக்கொடுத்து ஞானத்தீட்சை அருளினார். அந்த முஸ்லீம் பாக்கியமான மரணமடைந்தார். நீர்கொழும்பில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆக்கிக் கொடுத்தார். 1878ம் ஆண்டு வண. லாம்பிறங்கு அடிகளார் சம்மனசுச் சுவாமியாருக்கு உதவிப் பங்குக் குருவாக அனுப்பப்பட்டார். அவரது உதவியுடன் நீர்கொழும்பில் ஒரு கன்னியர் மடத்தைக் கட்டிக்கொடுத்தார். இந்த மடம் இன்று பிரான்சிஸ்குவின் சபைக் கன்னியர் மடமாகத் திகழ்கின்றது.

1880ம் ஆண்டு நீர்கொழும்புப் பெரியகடையில் தீப்பிடித்துவிட வியாபாரிகள் சம்மனசுச் சுவாமியாரிடம் வந்து அபயங்கோரினர். சாமமென்றும் பாராது சுவாமியவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்று முழந்தாள் மடித்துப் பிராத்தித்து ஆசீர்வதித்தார். உடனே அற்புதமாய்த் தீயணைந்து விட மக்களெல்லாம் களிப்பும் வியப்புமடைந்தனர்.

இப்படியே சுவாமியவர்கள் செய்த நன்மைகளும், அற்புத உதவிகளும், புரிந்த உபகாரங்களும் சொல்லற்கரியன.

**ஞானக் கடமைகள்**

சம்மனசுச் சுவாமியார் முதற்கண் தமது அந்தஸ்தினால் விதிக்கப்பட்ட கடமைகள் யாவற்றையும் சுமுத்திரையாய் நிறைவேற்றி வந்தார். ஏழை நீர்கொழும்பு வாசிகள் காலை ஏழு எட்டு மணிப் பலிபூசையில் பங்குகொள்ள முடியாது கஷ்டப்படுவதை உணர்ந்து அவர்கள் நலன்கருதி காலை நாலு மணிக்கே பலிபூசை ஒப்புக்கொடுப்பார். அவரவர் அந்தஸ்துக்கும் பொறுப்புக்கும் ஏற்ப சிறப்பாக கடமையாற்றவும், புண்ணிய வழியில் நடக்கவும் மக்களைத்தூண்டி வழி நடத்துவார். ஞாயிறு கடன் திருநாட்களில் அரிய அருளுரைகள் வழங்குவார். தப்பாது பாவசங்கீர்த்தனம் அருளுவார். தபசு காலங் களில் சிலுவைப்பாதைப் பக்தியை தவறாது அனுட்டிக்கத் தூண்டுவார். வருடாவருடம் அரிய களைப்பு, தூரம் என்பவற்றைப் பொருட்படுத்தாது அவஸ்தை என்றவுடன் விரைந்து செல்வார். சொல்லும் செயலும் ஒன்றுபட நடந்துகொள்வார். நற்புத்திமதிக ளால் கல் மனமும் கசிந்திழகச் செய்வார்.

**சுவாமிகளின் தவவாழ்க்கை**

சுவாமிகள் மிகவும் எளிய வறிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியவராய் சீவித்தார். மட்டசனஞ் செய்தார்; புகைத்தலை வெறுத்தார். இரவில் மிகக் குறைவாக நித்திரை செய்து மிகுதியான நேரமெல்லாம் செபத்திலே செலவழிப்பார். வெறுங்கட்டிலிலே உறங்குவார். முள் இடைவாரினால் இடையை வரிந்து தம்மைத் துன்புறுத்துவார். கசைகளால் தம் உடலைத் தாமே அடித்து வருத்துவார். தம்மை அடித்துக் களைத்தபோதும் உடன் எழுந்து நோயாளரையும், சிறைக்கைதிகளையும் சந்திக்கச் செல்வார். இவ்வண்ணம் அவர் வாழ்ந்த தபவாழ்க்கை எத்தகையது என்பது சொல்லாமலே புலனாகும். இங்கு குறிப்பிடாத வேறு தப முயற்சிகளையும் அவர் அனுசரித்து வந்தார். அற்ப பாவத்தையும் வெறுத்து விலக்கி உத்தம சம்மனசாக வாழ்ந்து வந்தார்.

**மரணமும் அடக்கமும்**

சம்மனசுச் சுவாமியார் என்று யாவராலும் அன்புடன் அருமையாக அழைக்கப்பட்டவர் வண. விஸ்திரீனி அடிகளார். முப்பத்தேழு ஆண்டுகள் அமலன் பணியில் அயராது உழைத்து உடல் வலு குன்றியதாலும், வயோதிபம் எய்தியதாலும் நோயுற்ற நிலையில் 1894ம் ஆண்டு கொழும்பு சென்று கொட்டாஞ்சேனை புனித லூசியா ஆலயத்தில் இறுதி நாட்களைக் கழித்து வரலானார். அத்தள்ளாப் பராயத்திலுங்கூட சுவாமிகள் சும்மா இருந்தாரிலர். தமது ஊன்றுகோலுடன் வைத்தியசாலை நோயாளரையும், சிறைக் கைதிகளையும் தரிசித்து ஆறுதலும் தேறுதலும் சொல்லி வந்தார்.

சிறிது காலத்தின்பின் விருத்தாப்பிய நோய் கண்டு உடல் மெலிவுற்று பலிபூசை ஒப்புக் கொடுப்பதற்கும் இயலாதவராய் படுக்கையில் சாய்ந்தார். தமது மரணம் அண்மி யுள்ளது என்பதை அறிந்து கொண்ட அடிகளார் அதற்கு ஆயத்தஞ் செய்து வந்தார். தினமும் திவ்விய நற்கருணை அனுபவித்து வருவார். அவரைத் தரிசிக்க வரும் குருமா ரிடம் தமக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்வார். இப்படி நாட்கள் கடந்தன. புண்ணிய சீலரான வண. விஸ்திரீனி அடிகளார் இவ்வுலகை விட்டுப் பிரியும் நாளும் நெருங்கியது. பங்குனி மாதம் பத்தொன்பதாந் தேதி 1895ம் ஆண்டு புனித சூசையப்பரின் திருநாளன்று சம்மனசுச் சுவாமியார் பாக்கியமான மரணமடைந்தார். இத்துயரச் செய்தி காட்டுத் தீ என கொழும்பு நகரமெங்கும் பரவியது. ஆலய மணிகள் அமங்கல செய்தியை ஒலித்த வண்ணமாயிருந்தன. குருமாரும், துறவிகளும், சங். கன்னியர்களும் பக்தியுள்ள விசுவாசிகளும் துக்கசாகரத்தில் ஆழ்ந்தனர்.


இத்துயரச் செய்தி நீர்கொழும்பை எட்டியவுடன் சுவாமிகளின் அரவணைப்பில் நீண்ட காலமிருந்த அப்பகுதி மக்கள் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்து அங்கலாய்த்து நின்ற னர். தந்தையைப் பிரிந்த மைந்தர் போலவும், தாயை இழந்த கன்றைப் போலவும் கதறி அழுதனர். வீதிகளிலும், வீடுகளிலும் கறுப்புக் கொடிகளையும், வெள்ளைக் கொடிகளையும் உயர்த்தி துக்கத்தை வெளிப்படுத்தினர். அநாதைகளின் இரட்சகன், ஏழை பங்காளன், தன்னலமற்ற தியாகி, துயரத்தில் கைகொடுக்கும் பெருந்தகை, நோயாளரின் ஆறுதல், சிறைப்பட்டோரின் தேற்றரவு, பஞ்சத்தில் தஞ்சங் கொடுப்பவர், கொள்ளை நோய் காலத்தில் தன்னுயிரையே மதியாது வருந்துவோருக்கு ஆபத்துசகாயனாய் இருந்து, பொதுநல சேவையும், இறைபணியும் குறைவின்றி ஆற்றிய குருமுனிவன் மறைந்த செய்தியை யார் தான் தாங்கிக்கொள்ள முடியும். ஈழத்திருநாட்டில் 55 வருடங்கள் இறைபணி ஆற்றி தமது வாழ்க்கையால் சம்மனசைப்போல தூய்மை துலங்க வாழ்ந்து ‘சம்மனசுச் சுவாமியார்’ என்று சிறப்புடன் அழைக்கப்பட்ட வண. விஸ்திரீனி அடிகளார் தமது 78வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

நீர்கொழும்பு மக்கள் கொழும்புக்கு வந்து அதிமேற்றிராணியாரான மேன்மைதங்கிய மெலிசன் ஆண்டகையின் உத்தரவு பெற்று நீர்கொழும்புக்குப் பூதவுடலை எடுத்துச் சென்று அற்புதநாயகி ஆலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைத்தனர். மறுநாள் காலை குருமார், சங். கன்னியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் புடைசூழ்ந்து செபிக்க, விசுவாசிகளும் பங்கு மக்களும் திரளாய் நின்று கண்ணீர் பெருக்க விக்கார்ஜென்றல் வண. கொலின் அடிகளாரும், கண்டியைச் சேர்ந்த வண. லெயித்தான் அடிகளாரும் யாழ்ப்பாணத்திலிருந்து வண. ஜென்டல் அடிகளும் கூட்டாகத் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றினர். இறுதி மரியாதையும், வேண்டுதல்களும் நிறைவேற்றியபின், சம்மனசுச் சுவாமி அவர்களின் பூதவுடல் அற்புதமாதா ஆலயத்தில் வண. ஜெற்மானுஸ் சுவாமியவர்களால் கட்டப்பட்ட கல்லறையில் பூச்சிதமாக அடக்கஞ் செய்யப்பட்டது.

மூன்று நாட்களாக சுவாமிகளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நீர்கொழும்புக் கிறிஸ்தவர்கள் சாரி சாரியாக வந்து கல்லறையருகில் இருந்து அழுது ஒப்பாரி புலம்பினர். நகரமெங்கும் கறுப்புக் கொடிகள் மூன்று நாட்களாகப் பறந்துகொண்டிருந்தன.

இன்னும் நீர்கொழும்பில் சம்மனசுச் சுவாமியாரின் கல்லறை அற்புதமாதா ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. நீர்கொழும்பு விசாரனணப்பங்கின் தந்தை என்று அவரை இன்றும் என்றும் அப்பகுதி மக்கள் நினைவுறுத்துகிறார்கள். அவரது பாரிய உருவச்சிலை ஒன்று அற்புதமாதா ஆலயத்தின் முன் நிறுவப்பட்டு உள்ளது. ஈழத்திரு நாட்டில் ஈடிணையற்ற திருமறைத் தொண்டாற்றிய ஒப்பற்ற மறைத் தொண்டர் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர் வண. ஜோண் விஸ்திரீனி அடிகளார் ஆவார். ஈழத்தில் இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் கண்ணியமான, கடின உழைப்பால் இறைபணியில் உயர்விடம் பெற்றவர் நம் சம்மனசுச் சுவாமிகள். பிரமாணிக்கந்தவறாத தியாகச் செம்மலும், பிறரன்பனும், இறையன்பனுமான 'சம்மனசுச் சுவாமியின்' புகழ் வாழ்க.

**குறிப்பு: [**அந்தோனிக்குட்டி அண்ணாவியார் பல வருடங்களுக்கு முன் எழுதிய 'சம்மனசுச் சுவாமியார் அம்மானை' என்னும் நூலில் இருந்து தொகுத்து வசனநடையில் இக்கட்டுரை எழுதப்பட்டது.]


வரப்பெற்றோம்

புதிய சிலுவைப்பாதை

ஆக்கியோன்: S. M. J.

கிடைக்குமிடம்:

S. A. பெர்னாண்டோ,

தபாற்பெட்டி 16,

நுவரெலியா.


10சத முத்திரை அனுப்பிப்

*சத்தியவேத பாதுகாவலன் - 23.05.1964*

*யாழ்ப்பாணத்தில் தோன்றிய முதல் துறவற சபை*

# *புனித சூசையப்பர் சபைத் துறவிகள்*

*(சத்தியவேத பாதுகாவலன் - 27.04.1990)*



*யாழ், திருமலை, மட்டுநகர், பதுளை, கண்டி மறைவட்டங்களில் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளாக கல்விப்பணியோடு மறைப்பணியும், சமூக நலப்பணிகளும் ஆற்றிவரும் புனித சூசையப்பர் சபைத் துறவிகள் சேவைசெய்யப் பணிக்கப்பட்ட பகுதிகளில் கல்வி, ஒழுக்கம், நற்பண்புகளைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டனர். தம்மைத் தியாகஞ் செய்த இத்துறவிகள் யாழ் குடாநாட்டில் கொழும்புத்துறை, இளவாலை, கரவெட்டி, ஊர்காவற்றுறை முதலாம் இடங்களில் பாடசாலைகளை நிறுவி நிருவகித்து சிறந்த கல்வியை வளர்த்தவர்கள். பல ஆசிரியர்களைப் பயிற்றுவித்து யாழ் மறை மாவட்டத்துக்கு மாத்திரமல்ல திருமலை, மட்டுநகர் மாவட்டத்துக்கும் சிறந்த கத்தோலிக்க ஆசிரியர்களை உருவாக்க உதவியவர்கள். முல்லைத்தீவு, மன்னார், பேசாலை ஆகிய இடங்களிலும் இத்துறவிகள் பணியாற்றியுள்ளனர்.*

*1945ம் ஆண்டளவில் யாழ் மறைமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பிலுள்ள கல்முனையில் தம் தலைமை மடத்தைத் தாபித்து திருமலை, மட்டுநகர் மறைமாவட்டத்தில் தம் பணிகளை மேற்கொள்ளலாயினர். அங்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிறுவி கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றும் அரும்பணியில் ஈடுபட்டனர். கல்முனை பற்றிமாக் கல்லூரி இவர்கள் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது.*

*1933 ஆம் ஆண்டு முதல் புனித சூசையப்பர் சபையானது மலைநாட்டிலும் அரும்பணிகள் ஆற்றியுள்ளதை எவரும் மறந்துவிட முடியாது. கற்றனிலும், பதுளையிலும் மடங்களை அமைத்து கல்லூரிகளை உருவாக்கி, மலையக மக்களின் கல்விக்கு மிகவும் போற்றத்தக்க வகையில் சேவையாற்றினர். கற்றன் புனித டொன்பொஸ்கோ கல்லூரி இவர்களது புகழை எடுத்தியம்பிக்கொண்டிருக்கும். 1933 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டுவரை இக் கல்லூரியை இவர்கள் நிருவகித்துவந்தமை குறிப்பிடத்தக்கது. கம்பளையிலும் இவர்களுக்கு ஒரு மடம் இருந்தது. தற்பொழுது மலைநாட்டில் இவர்களில்லை. மட்டக்களப்பிலும், திருமலையிலும் 1980 க்குப்பின் யாழ்பபாணத்திலும் இவர்களது பணி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இளவாலை, ஊர்காவற்றுறை, நாரந்தனை என்னுமிடங்களில் மனைகள் அமைத்து மடங்களைத் தாபித்து தங்கள் சேவையைப் பரப்பிவருகின்றனர்.*

*இலங்கைத் திருச்சபையின் ஆன்மீகத் தலைவராயிருந்த பேரருட்திரு கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன் மறைமாவட்டம் உதயமாவதற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 1864 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி இரண்டு இளைஞர்கள் இறை பணிக்குத் தங்களை அர்ப்பணித்து இப்புதிய சபையின் அங்கிகளை ஆயர் கையினாலே பெற்றுக்கொண்டனர். மறைபரப்புப் பணியில் குருமாருக்கு உதவும் பொருட்டே இச்சபை ஆரம்பிக்கப்பட்டதெனினும் பின்னர் கல்விப் பணியில் அவர்கள் பெரும் பங்கேற்கவேண்டிய காலத்தின் தேவையை ஈடு செய்வதற்காக இவர்கள் பணிகளும் மாற்றியமைக் கப்பட்டன.*

*ஆரம்பத்தில் இச்சபை மக்களிடையில் அழைத்தல்களைத் தோற்றுவிக்கவில்லை. முதன் முதலில் இச்சபையில் சேர்ந்த இருவரில் ஒருவர் அமலதரித் தியாகிகள் சபையில் சேர்ந்து குருவானார். அவர் தீவுப்பகுதியில் மறைபரப்புப் பணியில் முன்னோடியாகத் திகழ்ந்த அருட்திரு X. N. சந்திரசேகரர் அடிகளாவார்.*

*ஆயர் பதவி ஏற்ற யூலன் ஆண்டகை அவர்களே இச்சபையின் விருத்திக்கும், வளர்ச்சிக்கும், வளத்துக்கும் வித்திட்டவர் என்று கூறலாம். அவர் பொறுப்பேற்றபோது இச்சபையில் ஆக 5 சகோதரர்களே உறுப்பினர்களாகவிருந்தனர். ஆண்டகை அவர்கள் எடுத்துக்கொண்ட கரிசனையினாலும், பேரூக்கத்தினாலும் சபையில் துறைவிகள் தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. அவர்களது கல்வித் தகைமைகள் உயர்த்தப்பட்டன. ஆங்கிலம் அவர்களது கல்வித் திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டது. தராதரம் பெற்ற ஆசிரியர்களாக பல அருட்சகோதரர்கள் பயிற்றப்பட்டனர். ஆங்கிலம் கற்கும் வாய்ப்பு கிட்டியதும் பலர் பயிறப்பட்ட ஆங்கில ஆசிரியர்களானார்கள். அவர்களது துறவற சீருடையிலும் மாற்றம் ஏற்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் தேவைப்பட்ட ஆசிரியர் பற்றாக் குறையை விறதர்மார் ஈடுசெய்யக் கூடியதாயிருந்தது.*

*1914 ஆம் ஆண்டு புனித சூசையப்பர் சபைத் துறவிகளுக்கென பயிலுனர் மடமும் தாபிக்கப்பட்டது. சபையின் உத்தியோகப்பற்றற்ற சிரேஷ்டர் என்ற வகையில் யூலன் ஆண்டகையவர்கள் சபையை எல்லாவிதத்திலும் வளர்த்தெடுக்க மிகுந்த ஆவல் உடையவராயிருந்தார். அவரது அயரா உழைப்பின் பயனாக ஆங்கிலத்திலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற இளைஞர் பலர் இச்சபையில் துறவற அந்தஸ்துக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கிளை மடங்கள் பல திறக்கப்பட்டன. பாடசாலைப் பொறுப்புகள் இச்சபைக்கு அளிக்கப்பட்டன. தகுதிவாய்ந்த ஆசிரியர்களாகப் பயிற்றப்பட்ட துறவிகன் சேவையில் அமர்த்தப்பட்டனர்.*

*கொழும்புத்துறையை தலைமை மடமாகக்கொண்டு 1894 ஆம் ஆண்டு மன்னாரிலும் 1898 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையிலும், 1899 ஆம் ஆண்டு பேசாலையிலும், 1900 ஆம் ஆண்டு முல்லைத்தீவிலும், 1910 ஆம் ஆண்டு இளவாலையிலும், 1917 ம் ஆண்டு மாதகலிலும் மடங்கள் விஸ்தரிக்கப்பட்டன. யூலன் ஆண்டகையின் பேராதரவினால் யாழ் மறை மாவட்டமெங்கும் துரிதகதியில் புனித சூசையப்பர் சபைத் துறவிகள் வளர்ச்சி கண்டனர். பாடசாலைகள் பலவற்றின் நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. வியத்தகு வகையில் அப்பாடசாலைகள் உயர்ச்சிபெற்றன. புதிய கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வப் பகுதி மக்கள் உற்சாகம் கரைபுரண்டோட இத்துறவிகளுக்கு கைகொடுத்துதவினர்.*

*புறோ ஆண்டகையின் காலத்திலேதான் இச்சபைக்கான சட்டதிட்டங்களும், ஒழுங்குவிதிகளும், புதிய கனன் சட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டது. 1922 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் கூடிய இச்சபையின் முதலாவது அதிசிரேஷ்டராக அருட்சகோதரர் S. பிலிப் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.*

*பாடசாலைகளை நிருவகித்து, அவற்றைக் கட்டி எழுப்பி காலத்தின் தேவைக்கேற்ப வளர்த்தெடுத்து சகல துறைகளிலும் உயர்வடையச் செய்ய இவர்கள் அயராது உழைத்தனர். இளவாலை என்றியரசர் கல்லூரி அதன் விடுதிச்சாலை, புனித அந்தோனியார் கனிஷ்ட வித்தியாலயம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, வதிரி திரு இருதயக் கல்லூரி என்பன இவர்களது உழைப்பாலும், ஊக்கத்தாலும் சிறந்து விளங்குகின்றன. கண்ணீரும், சென்னீருமூற்றி இக்கல்வி நிறுவனங்களை வளர்த்தெடுத்துப் புகழீட்டச் செய்தனர்.*

*கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிருவகித்துத் திறமைவாய்ந்த ஆசிரியர் பரம்பரை ஒன்றை யாழ் மறைமாவட்டத்தில் தோற்றுவித்தனர். கொழும்புத்துறையில் அச்சகம் ஒன்றையும், அநாதைச் சிறுவர் விடுதியையும் நிருவகித்தனர்.*

*கடல் கடந்து பர்மா சென்று றங்கூனில் ஒரு கிளையைத் தாபித்து அங்கும் கல்விப்பணி ஆற்றிவந்தபோது இரண்டாம் உலகமகா யுத்தத்தின் காரணமாக அது கைவிடப்பட்டு நாடு திரும்பினர். சிங்கப்பூர். மலேயா வரை சென்று நிதி திரட்டிவந்து இளவாலை, ஊர்காவற்றுறை, வதிரி முதலாம் இடங்களில் உள்ள பாடசாலைகளைக் கட்டி எழுப்பினர். புனித சூசையப்பர் சபையிலே சுடர்விட்டுப் பிரகாசித்து சபையின் வளர்ச்சிக்கும், அதன் நற்பணிகளுக்கும் உரமிட்டவர்களில் ஒருசிலரை ஈண்டு குறிப்பிடுதல் வேண்டும்.*

*1922இல் சபையின் முதல் சிரேஷ்டராகத் தெரிவுசெய்யப்பட்ட அருட்சகோதரர் S. பிலிப் அவர்கள் சபைக்காகத் தீவிரமாக உழைத்தவர் என்று கூறலாம். சிறந்த கல்விமான், செல்வாக்கு மிகுந்தவர், நாவன்மை, செயற்றிறம் படைத்தவர். அக்காலத்தில் கல்வி ஆணைக்குழுவில் உறுப்பினராயிருந்து கத்தோலிக்க பாடசாலைகளின் நலன்களுக்காக உழைத்தவர். சிறந்த நிருவாகி எனப் புகழப்பட்டவர்.*

*கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிருவகித்து அதன் அதிபராகப் பணியாற்றிய அருட்சகோதரர் இன்னாசிமுத்து அவர்கள், இளவாலை, வதிரி ஆதியாம் இடங்களில் அதிபராகவும், பின் சபையின் சிரேஷ்டராகவும் பணியாற்றிய அருட்சகோதரர் பாக்கியநாதர், அருட்சகோதரர் பெஞ்சமின், சகோதரர் பேதுருப்பிள்ளை, சகோதரர் ஜோண்மேரி, சகோதரர் சைமன், ஆகியோர் பல துறைகளில் சிறந்து விளங்கி சபைக்குப் புகழ் சேர்த்த துறவிகள். சகோதரர் கிளமென்ற், சகோதரர் தேவசகாயம் ஆகியோரும் முன்னோடிகளான துறவிகளாவர்.*

*மனந்திரும்புதலுக்கு தூண்டுதல் அளிக்கும் துண்டுப்பிரசுரங்களை ஆக்கியும், பங்குத் தளங்களில் தர்க்கப் பிரசங்கங்களை நிகழ்த்தியும் புகழ்பெற்றவர் அருட்சகோதரர் சைமன் அவர்கள். இலக்கியப் பேராசானாய் விளங்கிய இவர் காவலூர்க் கவிஞர் போன்ற கவிஞர்களை உருவாக்க உதவியவர். இவரும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஒரு துறவி எனலாம்.*

*கீர்த்தனை மாலை எனப்படும் பக்திப் பாடல்ளை ஆக்கி, இசையமைத்து ஆலய வழிபாடுகளில் பாடச் செய்தவர் அருட்சகோதரர் ஜோண்மேரியாவார். ஓய்வு நேரங்களில் விளையாட்டு மைதானத்தில் பாடிப்பாடி வீணைப்பெட்டியில் இசைத்துப் பார்த்து மெட்டும், சங்கீதக் குறிப்புகளும் அமைப்பதில் வல்லவராயிருந்தார். அச்சுக்கலை, தச்சுத்தொழில், கைப்பணிக்கலைகளும் கைவரப்பட்ட பல்கலை வல்லுனராய் விளங்கினர் புனித சூசையப்பர் சபைத் துறவிகள். 1936 ஆம் ஆண்டுக்குப் பின் தவிர்க்க முடியாத காரணங்களினால் இச்சபையினர் வடமாகாணத்தை விட்டு நீங்கி கிழக்கு மாகாணத்துக்குச் சென்று தம்பணிகளை அங்கு ஆரம்பித்தனர். மட்டுநகர் திருமலை ஆயர்களின் ஆதரவோடு மட்டக்களப்பிலும், கல்முனையிலும் மடங்களை ஏற்படுத்தி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, அநாதைகள் விடுதி, கல்முனை பற்றிமா கல்லூரி என்பனவற்றை ஆரம்பித்து பொறுப்பேற்று நடத்திவந்தனர். இன்று புனித சூசையப்பர் துறவிகள் சபையின் தலைமை மடம் கல்முனையில் அமைந்துள்ளது.*

*அருட்சகோதரர் A. M. தோமஸ் அவர்கள் சபையின் சிரேஷ்டராகப் பணியாற்றி பலவகையிலும் சபையின் சேவைகளை முன்னெடுத்துச் செலுத்துகின்றார். அவர் கற்றன் பொஸ்கோ கல்லூரியின் அதிபராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியவர். ஆற்றலும், அனுபவமும் மிக்க இவர் பல புதிய திட்டங்களை உருவாக்கி, இளைஞர் தொழில்வாய்ப்புப் பெறத்தக்க தொழிற்பயிற்சி நிலையங்களை நடத்தி வருகின்றார்.*

*காவலூரிலும், திருமலை, மட்டக்களப்பிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் இவர்களது முகாமைத்துவத்தில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வருவது யாவரும் அறிந்ததே.*

*திருத்தியமைக்கப்பட்ட சபையின் விதிகளுக்கமைய இருகுருமார் 1987ல் திருநிலைப் படுத்தப்பட்டனர். றங்கூனைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்திரு டானியேல் அடிகளாரும், இலங்கையைச் சேர்ந்த அருட்திரு இம்மானுவேல் அடிகளாரும் புனித சூசையப்பர் துறவிகள் சபையின் குருக்களாக இருந்து பணியாற்றுகின்றார்கள்.*

*இடர்பாடுகள் பலவற்றின் ஊடாக 125 ஆண்டுகள் மறைத் தொண்டும், பொதுநலப் பணிகளும் ஆற்றிவரும் இச்சபையில் 35 துறவிகள் தம்மை அர்ப்பணித்து இறைபணியில் தமது வாழ்வைத் தத்தஞ் செய்துள்ளனர். மேன்மேலும் இச்சபையின் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.*

# ஊர்காவற்றுறையில் திருச்சிலுவைக் கன்னியரின் தியாகப்பணி

**(மரியாள் ஆலய நூற்றாண்டு மலர் - 1995)**

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் மருத்துவத் தாதிமாராகப் பணியாற்றிய தாய்மாரைப் பலர் மறந்திருக்கமாட்டார்கள். ஆம் அவர்கள் விண்ணில் நின்றுவந்த தேவதைகள் போல் அங்கு திருத்தொண்டாற்றிய மனித நேயப் பணியாளர்கள். சாதிமத பேதமற்று அனைவரையும் அரவணைத்த அன்னையர்கள் அவர்கள். பண்பு, பரிவு, பாசம், மனிதநேயம், அப்பழுக்கற்ற கடமை உணர்வு, கண்ணியம், கரிசனை, சகிப்புத்தன்மை இத்தனை பண்புகளுடன் தேவலோக மாதரோ, தரும சீமாட்டிகளோ என்று வியப்புறுவண்ணம் தம்பணி வாழ்வை அர்ப்பண சிந்தையுடன் மேற்கொண்டனர். மலர்ந்த முகத்துடன் இதமான மொழிபேசி நோயாளரைப் பராமரிக்கும்போது மருந்தைவிட அவர்களது இன்முகம் கண்டாலே நோய் பறந்துவிடும். சிஸ்ரர் அகுஸ்தீனா, சிஸ்ரர் ஜெம்மா, சிஸ்ரர் இம்மானுவேல், சிஸ்ரர் பெனடிக்ரா முதலியோரைப் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். தாதிமாருக்கு அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு, மருத்துவ சேவைக்கு ஒரு கலங்கரை விளக்கம். தாய் அன்பை தியாக மனப்பான்மையோடு நோயாளருடன் பகிர்ந்து அன்பெனும் அணிகலம் பூண்டு சகிப்புத்தன்மையுடன் எந்தவேளையிலும் பணியாற்றக் காத்திருப்பது அவர்களது பணி வாழ்வின் இலக்கணமாயிருந்தது. 1930ம் ஆண்டு முதல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் சமயத் துறவிகளான கத்தோலிக்க தாதிமார் அரசினர் வைத்தியசாலைகளில் பணியாற்றுவதை சட்ட மூலம் தடுத்து நிறுத்தும் வரை இந்த அன்னையர்கள் காவலூரில் பணியாற்றினர்.

அவர்கள் பணியாற்றிய காலத்தில் வைத்தியசாலையில் புனிதம், நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு, நிருவாகத் திறமை, சேவை நலம் என்பன சிறப்பாகப் போற்றப்பட்டன. அனைத்து மக்களின் இதயம் கவர்ந்த அந்தத் தாய்மாரின் சேவை மறக்க முடியாததாகும். அவர்களது வதிவிடத்தில் புனிதமான சிற்றாலயம் ஒன்று தெய்வமணம் கமழ்ந்து தேவ தரிசனம் கிடைத்ததுபோன்று அருள்சுரந்து அனைவரையும் ஈர்த்தது. பல ஆண்டுகள் அங்கு புனித அந்தோனியார் கல்லூர் அதிபராயிருந்த குருமார் திருப்பலி செலுத்தி வந்தது மறக்க முடியாத நிகழ்வாகும். அதன் பயனாகவே இன்று அந்த இடத்தில் வேளாங்கண்ணி மாதா பெயரால் ஒரு சிற்றாலயம் வண. லோறன்ஸ் சேவியர் அடிகளாரின் காலத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளருக்கு பெருமளவு அருள்வளங்களையும் தெய்வ ஆசியையும் பெற்றுக்கொள்ள உதவியாக விளங்குகின்றது.

தமிழ் மொழியைப் பயின்று மழலை மொழிபேசி நடமாடும் தெய்வங்கள்போல் அறப்பணியாற்றிய அன்னையருள் ஒருவரான சிஸ்ரர் கறோலினா, ரைபொயிட்

நோயாளியைப் பராமரித்தபோது தானும் அந்நோயினால் பாதிக்கப்பட்டு மரணமானார். அவரது பூதவுடல் ஊர்காவற்றுறை சேமக் காலையில் அடக்கம் செய்யப்பட்டது பலரும் அறிந்ததே. காவலூர் மக்கள் இந்த நூற்றாண்டு மலரில் மருத்துவப் பணியால் மகத்துவம் பெற்ற இந்த அன்னையரை நன்றியுடன் நினைவு கூருகிறார்கள்

# உன் கடன் என்ன ?

— எஸ். எம். ஜே. —

**மறு கிறிஸ்து**

மற்றொரு கிறிஸ்துவாய்த் திகழ்பவர் குருவே
குறைவற அவரை மதித்து நீ நடப்பாய்.

இறைவனின் பிரதிநிதி அவர் தாமே
திடமுடன் அவரை நம்பி நீ வாழு.

பாரினில் சிறந்தவோர் பேருப காரி
பரிவுடன் நன்றி செய்வதுன் கடனே.

**பலிபீடத்தில்**

பலியுடன் உனது செபங்களைச் சேர்த்து
பரம பிதாவுக் களிப்பவர் குருவே
மறந்திடாதவரைத் தினம் நினைப்பாயே.

உன் பொருட்டாகவும் உத்தரிப்பவர்கள்
சபையினில் உள்ள உறவினர்க்காகவும்
உருக்கமாய் அவரே அனுதினம் செபிப்பார்.

இறைவனின் இரக்கம் அவருக்கும் சேர
இறைவன் பாதம் அவர் போய்ச் சேர
இறைஞ்சுவாய் இறைவனை அனுதினம் நீயே.

**பச்சாத்தாபத்தில்**

ஆன்மநோயை அகற்றிடும் வைத்தியன்
ஆற்றுவார் உனது ஆன்ம ரணங்களை.

இறைவனை அடைய நனிவழி காட்டுவார்
இசைந்துளந் திருந்தி அவர்வழி நடப்பாய்.

நடு நிலைமாறு நாயகன் குருவே
பணிவுடன் அவரது தீர்ப்பினை எற்பாய்.

**பொது வாழ்வில்**

குருவுக்குத் தீர்ப்பிட அவசரப்படாதே—இங்கு
மனிதனே அவரும், மறந்திடலாமோ?

குருவுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறு— புதுத்
தென்பளித்தவரைத் திடமுறச் செய்வாய்.

குருவின் குறைகளை இறைவனுக்கோது—அதை
உணரவும் திருந்தவும் இறைவனை வேண்டு.

பொறுப்புகள் பலவும் அவருக்கு உண்டு—அதில்
நல்வழி நடத்த ஈசனை வேண்டு.

அந்திம வேளையில் ஆண்டவன் இரக்கம்—அருகில்
அவருக்கு இருக்க வருந்திநீ கேளு.

***சத்தியவேத பாதுகாவலன்** - 10.10.1970*

# பாதுகாவலன் பத்திரிகையில் படித்தவை!

## புதிய சேமக்காலை

சென்ற 2-11-57 சனிக்கிழமை சகல ஆத்துமாக்கள் திருநாளன்று கரம்பனில் ஓர்புதியசேமக்காலை ஆசீர்வதிக்கப்பெற்றுப் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டது. நெடுங்காலமாகக் கரம்பன்கிறீஸ்தவர்கள் கனவுகண்டுகொண்டிருந்த சேமக்காலையானது கரம்பன் கிறீஸ்தவர்களது ஆதரவாலும், வண. எம். எஸ். நல்லையாசுவாமியவர்களது அயராஉழைப்பினாலும் கைகூடிவிட்டது. இவ்வளவுகாலமும் கரம்பன் கிறீஸ்தவர்கள் பிரேதஅடக்கத்திற்கு ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டியிருந்தது. அதனால் அவர்கள் நெடுந்தூரஞ்சென்று மிகவுங்கஷ்டப்பட்டுவந்தார்கள். இந்தக்கஷ்டம் இப்பொழுது நீங்கியது. புதியசேமக்காலையிலே அமைக்கப்பட்டிருந்தகோயிலில் ஆத்துமாக்கள்திருநாளன்றே திவ்வியபூசை நிறைவேற்றிச் சேமக்காலையும் ஆசீர்வதிக்கப்பட்டது. இங்கு அமைந்திருக்கும் கோவிலிலேயே பிரேதசேமச் சடங்குகள் நிறைவேறும். சேமக்காலையில் முதன்முதலாகச் சேமிக்கப்படும் அதிர்ஷ்டம் மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஓர்வயோதிபமாதிற்குக் கிடைத்துள்ளது. சென்றவாரம் இப்பிரேத அடக்கத்தைப்பார்ப்பதற்குப் பெருந்தொகையானோர் சேமக்காலைக்கு வந்திருந்தனர்.

— நிருபர்

*சத்தியவேத பாதுகாவலன் - 14.11.1957*

# St. Sebastian's Church, Karampan

Round the time-worn walls of the one hundred and fifty year old church of the warrior-saint rises a new structure that is expected to be the larges building in the islands. The Rev. Fr. P. Nicholas, O.M.I., the Parish Priest has to provide accommodation for 1,500 Catholics and therefore he has set out upon the arduous task of erecting a church 110 feet long by 37 feet with two towers rising to a height of 25 feet. Though the estimated cost is Rs.65,000, the Parish Priest has boldly embarked on the construction of this church with only Rs. 20,000 in hand.

A dip into the past reveals that among the most noted of the benefactors of this church was Mr. J. Deogupillay, who besides other valuable gifts presented a beautiful altar made by the famed carpenters of Maggona as a memento of the visit of their visitor Mgr. Dontenwill, Superior-General of the Oblates. Mr. J. Sethupathy erected a superb grotto while Mr.S. Manuelpillay was the donor of a new belfry.

The church actually serves the spiritual needs of a parish to which belong some of the richest and most influential Catholics in the diocese. It is hoped that they will rally round Fr. Nicholas and help him to realize his cherished ambition.

S. M. J.

***சத்தியவேத பாதுகாவலன் - 12.08.1949***